...tered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

யாழ். நகரின் லுமாலா மிதிவண்டியின்
ஏக விநியோகஸ்தர்

வெங்கடேஸ்வரா
ரான்ஸ்போட் சேவிஸ்
0212228306
பொதிகள் ஏற்றி
இறக்குவதில்
நம்பிக்கை பெற்றோர்
(C/1630)
வெங்கடேஸ்வரா 125, 127 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 17 புதன்கிழமை (01.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 305


கிராமப் பாடசாலைகள் பற்றி 03

மாநகரசபைக்கு 'மொபிற்றெல் சிம்' 13

Sri Lanka Telecom Mobitel We Care. Always.

ஒலிம்பிக் சில தகவல்கள்

05


வடமாகாணக் கல்வி 10


இந்துவின் வெற்றிக்கு 09

# கலைஞர்–கூட்டமைப்பு உறவு
# தமிழர்களை படுகுழியில் தள்ளும்

## எச்சரிக்கிறார் முன்னாள் கூட்டமைப்பு எம்.பி. ஸ்ரீகாந்தா



(திருநெல்வேலி)

தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதியின் தலைமையிலான ரெசோ மகாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கலந்துகொள்ள விருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் கவலையளிக்கின்றன.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை தமக்குத் தேவைப்படும் நேரத்தில், கையில் எடுப்பதை வழமையாக்கிக் கொண்டிருக்கும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளின் சொந்த நிகழ்ச்சி நிரல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விழுந்துவிடக்கூடாது எனத் தெரிவித்துள்ளார் முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோவின் அரசியல் உயர்பீட உறுப்பினருமான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா.

கலைஞர் கருணாநிதி மீது நீண்ட காலமாகவே ஈழத்தமிழர்கள் அன்பும், மதிப்பும் வைத்திருந்தார்கள். தனிப்பட்ட முறையில் சொல்வதானால் 80 களின் நடுப்பகுதியில் நான் அவருடன் சென்னையில் நெருங்கிப் பழகியுள்ளேன். அக்காலத்தில் அவர் ரெலோ இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்தார். ஆனால், அவர் அப்போது ஆட்சியில் இருக்கவில்லை.

நடந்து முடிந்த இலங்கையின் 19 ஆம் பக்கம் பார்க்க

## பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா முகாமைத்துவப் பட்டதாரிகள் 228 பேர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்றுத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தப் பட்டதாரிகளுக்கு இதுவரை நியமனம் வழங்காமைக்கு எதிராகவே இந்த அடிப்படை உரிமைமீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். இந்தப் பட்டதாரிகள் சார்பாக சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜரானார்.

# கைதிகளை பார்க்க ஆயரைத் தடுத்ததை கண்டிக்கிறார் ஐயலத் எம்.பி.



மன்னார் ஆயரை அரசாங்கம் துன்புறுத்துவதன் மூலம் போருக்குப் பிந்திய தேசிய நல்லிணக்கம் பற்றிப் பேசப்படுவது வெறும் நகைச்சுவையாகவே உள்ளது. என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலையில் இருந்து மகர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்களான 17 அரசியல் கைதிகளையும் பார்வையிடுவதற்கு மன்னார் ஆயர் இராயப்பு யோசப் கடந்த வெள்ளிக்கிழமை சில மதகுருமாருடன் மகர சிறையில் உள்ள அரசியல் கைதிகளைப் பார்வையிடச் சென்றார். அவருடன் சென்ற என்னை, அரசியல் கைதிகளை பார்த்துப் பேச சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதித்தனர். மன்னார் ஆயரை சிறைச்சாலை மூத்த அதிகாரியின் செயலகத்தில் காத்திருக்குமாறு கூறினர். பின்னர் அரசியல் கைதிகளைப் பார்வையிட ஆயருக்கு அனுமதியளிக்க 19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.சட்டத்தரணிகள் சங்கமும் இரண்டாக உடைந்தது

(நீதிமன்ற நிருபர்)

ஊழல், அதிகார துஷ்பிரயோகம், நிர்வாக ஒழுங்கீனம் ஆகிய காரணங்களை முன்வைத்து யாழ்ப்பாண மருத்துவர் சங்கத்தினர் இரண்டு குழுக்களாகியுள்ளதைப் போல யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கமும் இரண்டாக உடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் அவதூறுக்கு உள்ளாக்கப்பட்ட யாழ் நீதவானிற்கு ஆதரவு தெரிவிக்கத் தவறியிருந்ததுடன், யாழ்.நீதவானிற்கு எதிராக அவதூறு இழைத்தவர்களுக்கு ஆதரவாக பகிரங்கமாக செயற்பட்டமை உட்பட இதர துஷ்பிரயோக காரணங்களுக்காக யாழ்ப்பாண முன்னணி சட்டத்தரணிகள் பலர் தனியாகப் பிரிந்துசென்று இயங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர். இவ்வாறு பிரிந்துசென்று இயங்கவுள்ள சட்டத்தரணிகளுள் ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதிகளும், மாவட்ட நீதிபதிகளும், நீதவான்களும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் 19 ஆம் பக்கம் பார்க்க

# 15 பவுண் நகை, பணம் மானிப்பாயில் கொள்ளை

(மானிப்பாய்)

மானிப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றில் 15 பவுண் நகை மற்றும் 150,000 ரூபா பணம் என்பன நேற்று அதிகாலை கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் - மருதடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக தனியார் வைத்தியசாலைக்குப் பின்பக்கமுள்ள வீடொன்றிலேயே நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் தனியாக வசித்து வந்த வயதான பெற்றோரைப் பார்ப்பதற்கு இவர்களது மகன் சில தினங்களுக்கு முன்னரே வெளிநாட்டிலிருந்து வந்துள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க

## மீனவர் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் - கடற்பரப்பில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவர் நேற்றுக்காலை கடலில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மணியந்தோட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணசாமி சிறிரஞ்சன் (வயது-60) என்பவரே இவ்வாறு கடலில் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை தனியாகக் 19 ஆம் பக்கம் பார்க்க

விளம்பரப் பணிமனை இடமாற்றம்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இயங்கி வந்த தினமுரசு பத்திரிகையின் விளம்பரப் பணிமனை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள தினமுரசு பிரதான காரியாலயத்துக்கு இட மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

## பிரிட்டன் நாடாளுமன்றக் குழு யாழ்.நகருக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் அடங்கிய குழுவொன்று நாளை யாழ்.குடாநாட்டுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு யாழ். வரவுள்ளது.

இந்தக் குழுவினர் அன்றைய தினம் நண்பகலுக்குப் பின்னர் வடமாகாணப் பிரதம செயலாளரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர். இதனைத் தொடர்ந்து அரியாலை மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள மீள்குடியேற்றக் கிராமங்களைப் பார்வையிடவுள்ளனர். தொடர்ந்து பிற்பகல் யாழ்.வணிகர் கழகத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மறுநாள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும், யாழ். நகருக்கும் விஜயம் செய்யவுள்ளதுடன், பிற்பகல் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)

## மகிந்த ராஜபக்ஷ முன்னால் சந்திரிகாவை நினைத்த எஸ்.பி

(கொழும்பு)

பத்திரிகை ஆசிரியர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை சந்தித்த போது, பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க விளக்கமளித்தார். இதன்போது, ஜனாதிபதியை, ஜனாதிபதினியனி எனக் கூறிய அமைச்சர் திசாநாயக்க நகைப்புக்கிடமாகியுள்ளார். பெண் ஜனாதிபதிகளையே சிங்களத்தில் ஜனாதிபதினியனி என விளிப்பர் என்பது 19 ஆம் பக்கம் பார்க்க

# நீதிமன்ற அவமதிப்பு விடயம் மூலப்பிரதி சட்டமா அதிபருக்கு

(யாழ்ப்பாணம்)

உதயன் ஆசிரியர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் மூலப்பிரதி சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைவாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிரதி சொலிசிற்றர் ஜெனரல் பாரிந்த ரணசிங்காவினால் நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மூல வழக்கேடானது சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி விசாரணைக்காக நீதிச்சேவை ஆணைக்குழுவால் யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே நீதவான் மாணிக்கவாசகா 19 ஆம் பக்கம் பார்க்க


## இலங்கையில் இல்லை இந்திய ஆலை

(கொழும்பு)

இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனம் 3.6 பில்லியன் டொலர் முதலீட்டில் இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைக்கவுள்ளதாக இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. வெளியான செய்தியில் உண்மை இல்லை என கனியவள அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனத்துடன் அவ்வாறான ஒப்பந்தங்கள் எதிலும் தாம் கைச்சாத்திடவில்லை என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. 19 ஆம் பக்கம் பார்க்க

# கிளிநொச்சியில் இரண்டு பாடசாலைகளுக்கு புதிய கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது





(தெல்லிப்பளை)

நிக்கோட் திட்டத்தின் மூலம் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கனகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளுக்கு 80 இலட்சம் ரூபாவில் இரண்டு கட்டடங்கள் அமைக்கும் ஆரம்ப பணிகள் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் மக்கள தொடர்பு அதிகாரியும் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளருமான வை.தவநாதனால ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை பத்து மணிக்கு கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்திற்கு அந்தப் பாடசாலையின் நீண்டநாள் விருப்பமும் கோரிக்கையுமான 27 அடி அகலமும் 110 அடி நீளமும் கொண்ட பிரார்த்தனை மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதேவேளை மதியம் 12 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு 20 அடி அகலமும் 50 அடி நீளமுமான கட்டடம் ஒன்று நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியில் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்த இரு நிகழ்வுகளிலும் கரைச்சி கோட்ட கல்வி அதிகாரி அமிர்தலிங்கம், பங்குத் தந்தை இமானுவேல் கிராம அலுவலர்களான செல்வரட்ணம், தர்மலிங்கம் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் கிருஷ்ணசாமி, பொதுச சந்தை வர்த்தக சங்க தலைவர் இரத்தினமணி, கிளிநொச்சி தமிழ்ச் சங்க தலைவர் இறைபிள்ளை, கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் எனப பலர் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரிடம் குறித்த இரு பாடசாலைகளின் கல்விச் சமூகத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# காந்தீயம் இதழ் வெளியீடு

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ வெளியீடான 'காந்தீயம்' இதழின் யூன், யூலை மாத இதழ் வெளிவந்துள்ளது. இவ் இதழில் பேராசிரியர் டாக்டர் நா.பாஸ்கரனின் "சமச்சீர்க் கல்வியில் தத்துவம்'' மற்றும் ஆனைமலை மகாத்மா காந்தி ஆசிரம நிர்வாக அறங்காவலர் மா.ரங்கநாதனின் "காந்தி எனும் ஒரு புரட்சிக்காரர்" போன்ற காந்தீய சிந்தனைக் கட்டுரைகள் அடங்கியுள்ளன.

இவ் இதழின் இலவச பிரதியொன்றைப் பெற விரும்பும் அன்பர்கள் ரூபா 5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், 'காந்தீயம்', காந்தி நிலையம், உருத்திரபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியுமென்று 'காந்தீயம்' ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

# க.பொ.த. உயர்தர அனுமதி அட்டைகள்

வடமராட்சிப் பகுதியில் உள்ள பெண்கள் பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பாடசாலை அதிபர்களினால் வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களின் காலில் விழுந்து வணங்கித் தமது அனுமதி அட்டையைப் பெற்றுக்கொண்டனர்.

பாடமாற்றங்கள் செய்யவேணடியுள்ள மாணவர்கள் இன்று அதிபர்கள் ஊடாக அவ்வவ் கோட்டக் கல்வி அதிகாரிகள் மூலமாக மத்திய கல்வி அமைச்சுக்கு எடுத்துச் சென்று மாற்றங்களைச் செய்யவேண்டும் எனவும் அதிபர, ஆசிரியர்கள் கல்வி அமைச்சுக்கு வரவேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

# பிரதேச செயலகங்கள் தரம் உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நான்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி முதல பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக யாழ். செயலக மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர் மற்றும் மருதங்கேணி ஆகிய உதவி அரச அதிபர் பணிமனைகளே இவ்வாறு பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டிருகின்றன. எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 24.01.2012 அன்றைய 1042/7 அதிவிசேட இலக்க வர்த்தமானப்பத்திரிகையின் அறிவித்தலின் பிரகாரமே இந்த நான்கு உதவி அரச அதிபர் பிரிவுகளும் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் வட மாகானத்தில் இவ்வாறு 16 உதவி அரச அதிபர் பணிமனையின் பிரதேச செயலகங்களஈக தரமுயர்வு பெற்றிருப்பதாகவும் தெரியவந்தது.(பா)

# இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் சமுர்த்தி வங்கியில் கடமையாற்றும் இரண்டு சமுர்த்தி முகாமையாளர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்பின்பேரில் ரி.சந்திரகாந்தன் தெல்லிப்பளைக்கும், எம்.சிவகுமார் யாழ்ப்பாணத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீடு உடைத்து நகை திருடியவருக்கு இரண்டு வருட கடூழிய சிறை

வீடு உடைத்து தங்க நகைகளைத் திருடியவர்களில் ஒருவருக்கு 11 வருடங்களுக்குப் பிறகு யாழ். நீதிமன்றினால் சிறைத் தணடணை வழங்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் 2001 ஆம் ஆண்டு கதவு, யன்னல்களை உடைத்து உட்புகுந்து 3 சங்கிலிகள், மோதிரம், 2 காப்புக்கள், கைச்சங்கிலி, ஒருசோடி தோடு, டோச்லைற் என்பனவற்றைத் திருடியதாக நால்வர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். 13.06.2001 இல் யாழ். நீதிமன்றில் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், ஒருவரைத் தவிர ஏனைய மூன்று சந்தேக நபர்களும் நீதிமன்றுக்கு சமூகமளிக்காமல் தலைமறைவாகினர் அவர்கள் மீது நீதிமன்றினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ருந்து ஒருவர் மட்டும் வழக்குத் தவணைகளுக்குச் சமூகமளித்திருந்தார். இந்நிலையில் 21.06.2012 இல் வழக்குக்குச் சமூகமளித்த சந்தேக நபர் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார். ஏனைய மூன்று சந்தேக நபர்களுக்கும் இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டணை விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் 11 வருடங்களுக்குப் பின்னர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார். யாழ். நீதிமன்றில் அவர் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது அவரை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சுன்னாகம் புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த மூன்றாவது சந்தேகநபரான இவருக்கு நீதவான் மா.கணேசராசா இரண்டு வருடக் கடூழியச் சிறைத்தண்டணை விதித்தார். (137)

# பாதுகாப்பு நிலைய கட்டண அறவீடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலங்களில் அடியவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு தற்காலிக வாகனப் பாதுகாப்பு நிலையங்களை நடத்துபவர்களிடமிருந்தோ, காணி உரிமையாளர்களிடம் இருந்தோ எவ்வித கட்டணமும் மாநகர சபையால் அறவிடப்படமாட்டாது என்று முதல்வர் திருமதி யோ. பற்குணராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நல்லூர் உற்சவகால தற்காலிக துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களின் கட்டணம் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

01. மோட்டார் சைக்கிள் (தலைக் கவசம் உட்பட) ரூபா 10,

02. துவிச்சக்கர வண்டி ரூபா 5.00

குறித்த கட்டணத்துக்குக் கூடுதலாக அறவிடும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களின் அனுமதி உடனடியாக இரத்துச் செய்யப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

# கரம் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்தும் அரச அதிபர் கிண்ணம் - 201[illegible] இற்கான கரம் சுற்றுப்போட்டி எதிர்வரும் 2,3 ஆம் திகதிகளில யாழ் செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்திலும், மாவட்டத்தின் பிரதேச செயலகங்களிலும், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும் பணிபுரியும் ஆண்,பெண் அலுவலர்கள் பலர் இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற உள்ளனர். ஆண்கள் அணியில் 14 குழுக்கள் ஒற்றையர் மற்றும் இரட்டையர் குழு போட்டிகளில் பங்குபற்ற உள்ளதோடு பெண்கள் அணியில் 7 குழுக்கள் பங்குபற்றவுள்ளனர். (120)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)


நாவாந்துறை வசந்தபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஆதிவைரவர் ஆலய அலங்காரத் திருவிழா நாளை காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. (105)


# சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரத்தில் தூக்கில் தொங்கி இறந்த நிலையில் ஆண் ஒருவரது சடலம் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் தவராஜன் (வயது - 39) என்பவரே இவ்வாறு தூக்கு மாட்டி இறந்ததாகத் தெரியவருகின்றது. (பா)





அல்வாய் வேல் விளந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த இரதோற்சவ நிகழ்வு நேற்று நடைபெற்றபோது அம்பாள தேரில் ஆரோகணிப்பதையும் அடியார்கள் நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதையும் காணலாம். (116)

# கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சி முன்னேற்றகரமாக உள்ளது

## வடமாகாண ஆளுநரின் செயலாளர்



(திருநெல்வேலி)

கல்வி தொடர்பாக பலவிமாசனங்கள் இடம்பெறுகின்றன. கல்வி தான் எமது சொத்து வடமாகாணக் கல்வி முன்னேற்றத்திற்காக எமது ஆளுநரால் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெற்று தமது பெற்றோருக்கும் தாம் பிறந்த நாட்டுக்கும் பெருமை தேடித்தர வேண்டும். என வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற யாழ். உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலய பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து உரைநிகழ்த்துகையில், பலபுலம் பெயர் தமிழர்கள் தாம் கல்வி கற்ற பாடசாலைகளை மறக்காமல் அப்பாடசாலைக்கு பல மேலான உதவிகளை வழங்கி வருவது பாரட்டப்பட வேண்டிய விடயம். இளமைத் துடிப்புள்ள அதிபரின் தலைமையில் இப்பாடசாலை அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டு நான் வியர்ந்துள்ளேன். ஆலயம் ஒன்றுக்கு திறமைமிக்க குரு ஒன்றின் தலைமை இருக்குமானால் அவ்வாலயம் சிறப்புப் பெறும். பாடசாலை யொன்றுக்கும் ஆளுமைமிக்க அதிபர் ஒருவர் கிடைக்கும்போது அப்பாடசாலை உயர்ந்து விளங்குவது நிச்சயமாகும். குறுகிய காலத்துள் இப்பாடசாலையின் வளர்ச்சி கண்டு நான் மனம் மகிழ்கின்றேன்.

பல கிராமப்பாடசாலைகள் நகரப்பாடசாலைக்கு இணையாக சகல துறைகளிலும் முன்னேறி வருகின்றன. இது கல்வித் துறைக்குக் கிடைத்திருக்கும் பெருமைக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்தார். திருமதி. கிருபாகரி இளங்கோவன் பரிசில்களை வழங்கினார். பெற்றோர், அதிபர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், சனசமூக முன்பள்ளி நிர்வாகிகள் என அதிகளவிலானோர் இப்பரிசளிப்பு நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

(137)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும், சமயச் சொற்பொழிவும், கலைநிகழ்வுகளிலும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நல்லருளைத் தருவான் நல்லூர்க்கந்தன் என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் பொன். சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

கலைநிகழ்வுகளில் புத்தூர் கன்னியர் வைரவர், அனலைதீவு மனோன்மணி அம்மன் அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். விசேட நிகழ்வாக புஸ்பமலர் யோகநாதனின் மாணவர்களது இன்னிசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

✡ ✡ ✡ ✡ ✡

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றுவருகிறது. இதில் இன்று புதன்கிழமை எம்.ஸ்ரீரங்கநாதன் மற்றும் எஸ்.ராகவனின் பாட்டு இடம்பெறவுள்ளது.


இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின் எஸ்.திவாகரன், மிருதங்கம் கே.கஜன், கெஞ்சிரா பிரம்மஸ்ரீ என்.சிவசுந்தரசர்மா ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர்.

✡ ✡ ✡ ✡ ✡

நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் இடம்பெற்றுவரும் தெய்வீகப் பேருரையில் இன்று புதன்கிழமை ஆறுமுகப் பெருமானின் அருள்நலம் என்னும் விடயத்தில் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

(60)

## நல்லூர் முருகனுக்கு இன்று 9ஆம் திருவிழா



### வரவேண்டும் முருகா!

மயிலேறி வேலேந்தி வர வேண்டும்
மனமெலாம் உனைநாடி எழ வேண்டும்
புயலான துயரோட்ட வர வேண்டும்
புதுமைகளை அன்பருக்கு தர வேண்டும்
கலைஞான மெய்ப்பொருளை அருள வேண்டும்
கவிபாடி உனைப்போற்றி வாழ வேண்டும்
நிலையான தீர்வதனைத் தர வேண்டும்
நீக்கமற உனையென்றும் நினைக்க வேண்டும்

-செல்வி.அருள் - தமிழ்ச்செல்வி-

### நீட்டிய கரங்களுக்கு விடைகொடு!

நாட்டிலுள்ள பிணிகள் தீர
நல்லூருக்கு வா ஒருக்கால்,
வாட்டி வதைக்கும் நோய் தீர
வல்ல முருகனைப் பாரு!

நீட்டிய கரங்களுக்கு
நல்லூரில் விடைகொடு, முருகா!
நீ நினைத்தால் என்ன குறை?
'நான்' என்ற போர்வையே நாடாயிற்று?

-கே.எஸ்.சிவஞானராஜா (கொக்குவில்)-




# நல்லூர் ஆலயத்திருவிழா

நல்லூர்க் கந்தன் திருவிழா ஆரம்பமாகிய நாள் முதல் நல்லூர்ச் சூழலில் பல கலை நிகழ்வுகளும், மதிய நேரத்தில் அன்னதான மடங்களில் அன்னதானமும் நடைபெற்று வருகின்றது.

இந்த வருடமும் நல்லூர் கந்தன் உற்சவத்தை பார்வையிட ஆலயத்திற்கு உள்நாடு மட்டுமன்றி வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் ஆலயத்திற்கு வந்து தரிசிக்கின்றனர். ஆலயத்தில் தினமும்



சுவாமி வெளி வீதியுலா முடிந்து ஆலயத்தினுள் சென்றதும் ஆலயத்திற்கு வரும் பக்த்தர்கள் ஆலய முன்றலில் நீண்ட நேரம் அமர்ந்து மகிழ்வாக தமது பொழுதைக் கழித்துச் செல்கின்றனர்.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணிக்கு செம்மறி ஆட்டு வாகனத்தில் உள்வீதி வெளிவீதி உலா வரும நிகழ்வு நடைபெற்றது.

ஆலய சுற்று வீதியில் பறிக்கப்பட்டுள்ள மணலின் பல பகுதிகளிலும் இருந்து தமது வயது வேறுபாடு மறந்து சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை வீடு கட்டி விளையாடுவதும், உருவங்கள் செய்து விளையாடுவதுமாக மகிழ்கின்றனர்.

வீதி உலா முடிவடைந்த பின்னர் கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் துஸ்யந்தன் மணலில் முருகப்பெருமான் உருவத்தை வடிவமைத்திருந்ததுடன் தினமும் மாலை வேளையில் ஆலயத்திற்கு வந்து தனக்கு தோன்றுகின்ற கடவுள்களின் வடிவத்தை தனக்குத் தெரிந்த வடிவத்தில் மணலில் வடிவமைத்து ஆலயத்திற்கு வந்திருந்த பலதரப்பட்ட அடியார்களின் வரவேற்பையும் பெறுவதுடன் ஆலயத்திற்கு வருபவர்கள் இந்த மாற்றுத் திறனாளி மாணவனின் செயலை பலரும் கண்டு பாராட்டுகின்றனர்.

உற்சவ காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தொடர்ந்து ஒவ்வொரு தினமும் மாலை 3.00 மணிக்கு கதாப்பிரசங்கம் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பித்து மாலை 6.00 மணிவரை நடைபெறுகிறது.

## ஒரு கண்ணோட்டம்

ஆலயத்தின் ஏனைய வீதிகளில் உள்ள அமரர் மகேஸ்வரன் மணி மண்டபம், துர்க்கா மணி மண்டபம் போன்றவற்றில் சுவாமி வீதி உலா நிறைவடைந்ததும் கலைநிகழ்வுகள் நடைபெறுகின்றன.

நல்லூர் ஆலயத்தின் வரலாறுகள் பலதரப்பட்டவர்கள் பல்வேறு கதைகளுடனும் பல்வேறு ஆதாரங்களுடனும் பல்வேறு விதமாகக் கூறப்படுகிறது இவற்றைச் சுருக்கமாக பார்க்கலாம்.

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்தி வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் அமைச்சனொருவ னான புவனேகபாகு என்பவ னால் இக் கோயில் கட்டுவிக் கப்பட்டதென, யாழ்ப்பாண வைபவ மாலை, கூறுகிறது. யாழ்ப்பாண வைபவமாலைக்கு ஆதாரமாக 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக கருதப்படும் கைலாய மாலை என்னும் நூலின் இறுதியில் காணப்படுகின்ற 'பாடல் கூறுகிறது.

ஆனால் 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் வரை ஆண்ட, கோட்டையின் சிங்கள அரசின் பிரதிநிதியான, சிறீசங்க போதி, புவனேகபாகு எனப்பெயர் கொண்ட கோட்டையின் அரசனான, சண்பகப் பெருமாள் என்பவனால் கட்டப்பட்டதென வேறு சிலர் கூறுகிறார்கள். இதற்கு ஆதாரமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இன்றும் கூறப்பட்டுவரும் கட்டியத்தை இவர்கள் காட்டுகிறார்கள்.

சிறியதாக இருந்த கோயிலைப் புவனேகபாகு தனது ஆட்சிக்காலத்தில் பெருப்பித்துக் கட்டியிருக்கக் கூடும் என்று வேறுசிலர் கருத்து தொரிவிக்கின்றனர். யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்தில் நல்லூரிலிருந்த மிகப்பெரிய கோவில் இதுவேயென்பது போத்துக்கீசருடைய குறிப்புக்களிலிருந்து தெரியவருகிறது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போத்துக்கீசத் தளபதியான பிலிப்பே ஒலிவேரா 1620 இல் தனது அரசின் தலை நகரத்தை யாழ்ப்பாணத்துக்கு மாற்றியபோது நல்லூர்க் கோயிலை இடித்துத் தரைமட்ட மாக்கும்படி உத்தரவிட்டான் என்றும் இந்த ஆலயத்தில் இருந்து பெறப்பட்ட கற்கள் யாழ்ப்பாணத்தில் புதிய கோட்டை கட்டுவதில் பயன்பட்டதாகத் தெரிகின்றது. நல்லூர் இருந்த இடத்தில் போத்துக்கீசர் சிறிய கத்தோலிக்க தேவாலய மொன்றை அமைத்ததாகவும் சில கதைகள் சொல்லுகின்றது.

பின்னர் ஒல்லாந்தர் இதனைத் தாங்கள் சார்ந்த புரட்டஸ்தாந்த சமயத்தின் புரட்டஸ்தாந்த கிறிஸ்தவ தேவாலயமாக மாற்றினார்கள். ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் (1658- 1798) இறுதி ஆண்டு களில் இந்துக் கோயில்கள் அமைப்பது தொடர்பாக ஆட்சியாளர்களின் இறுக்கம் ஓரளவு தளர்ந்த போது, நல்லூர் கந்த சுவாமி கோயில் மீள அமைக் கப்பட்டது. என்று சில வரலாறுகள் கூறுகின்றன. இது மட்டும் அல்லாது ஆலயத்தின் ஒவ்வொரு வீதி களிலும் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வந்த வியாபாரிகள் பலவேறு பொருட்களை காட்சிப்படுத்தி மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றனர்.

(கிரு-சிகரம்)

தன்னைக் கீழே தள்ளிய குதிரையைத்தான் சவாரி செய்ய மனிதன் விரும்புவான் - ஸ்காட்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## உறுமிக் கொண்டிருக்கும் கோமாளித்தனம்!

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் இன்னும் ஓயவில்லை – திருகோணமலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உறுமல் என்கிறது திங்கட்கிழமை வெளிவந்த கூட்டமைப்பின் பத்திரிகைச் செய்தி.

தங்களைத் தாங்களே ஆளும் தீர்வே தமிழருக்குத் தேவை; சிங்கள அரசே எச்சரிக்கிறோம் என்று அவர் சீறியிருப்பதாகவும் அடுத்தநாள் அது சொல்கிறது.

கடுமையான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தியாக உணர்வோடு தமிழ் மக்களுக்காக கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகிறோம். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து தமிழினத்தின் பலத்தை மீண்டும் ஒருதடவை நிரூபித்துக் காட்டுங்கள் என்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் முழங்குகிறார்...
எவ்வளவு ஜோக்குகளைக் கொண்டதாக மாறிவிட்டது நம் அரசியல் சூழல். கொலைச் சூழல் முடிந்தது என்று பார்த்தால், அங்கிருந்து நேரடியாக கோமாளிச் சூழலுக்கு வந்திருக்கி றோம். என்னவொரு தமிழ்த்துயரம்!

ஒருகாலத்தில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் வெற்றுச் சொல்லலங்கார முழக்கங்களையும் அந்த அரசியல் கோமாளித்தனங்களையும் அங்கிருந்து வரும் பத்திரிகைகளில் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த நம்மைப் பார்த்துக் கடவுள் இரக்கம் கொண்டானோ என்னவோ, இங்கேயே அதைவிட அபத்தமான கோமாளிப் பேச்சுக்களைக் கேட்டு மகிழும் கொடுப்பினையைத் தந்திருக்கிறான்.

சீறுவதும் உறுமுவதும் சவால்களை விட்டுக் கர்ஜிப்பதும் தேர்தல்களில் நல்ல விளைவைத் தருவதை தமிழ்நாட்டு அரசியல்வாதிகளைப் போலவே இவர்களும் நன்கறிந்து கொண்டுவிட்டார்கள். எனவே தேர்ந்த நகைச்சுவை நடிகர்களைப் போல தாங்கள் சிரிக்காமலேயே, சிங்களவனைப் பணியவைக்க தமிழினத்தின் பலத்தை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டும்படி நம் சனங்களைப் பார்த்து மீண்டும் மீண்டும் வந்து கேட்க முடிகிறது. தமிழனின் ரோசத்தைச் சொல்லி உறுமி நடிக்கத் தெரிந்துவிட்டால் எதற்கும் கூச்சமடையத் தேவையில்லை என்பதை இந்தத் தேர்தல்மேடை நடிகர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

என்ன பலத்தைத்தான் தமிழ்மக்கள் இவர்களுக்குத் தராமல் விட்டார்கள்? ஏகப்பிரதிநிதிச் சர்வாதிகாரத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு இருபத்திரண்டு உறுப்பினர்கள் வரை பலம் பலமாய்த்தானே கொடுத்தார்கள். இவர்கள் என்ன செய்து கிழித்தார்கள்? தமிழ்மக்களை, அழிவுக்குள்ளாக்கியும் அல்லோல கல்லோலப் படுத்தியும்தானே சும்மா பார்த்துக் கொண்டிருந்தார்கள்! பம்மியோடிவிட்டுத் திரும்பவும் 'விடுதலை வாங்கித் தரும்' முழக்கத்தோடு வந்து விட்டார்கள்!

உலகையே உதறி வெல்லும் 'வீர' உணர்வும், உலகில் மற்றோரெல்லாம் எதிரிகளே என்னும் வெறுப்புணர்வும் நமக்குச் சும்மா வந்துவிடவில்லை. 'நாம் வேறு அவர்கள் வேறு' என்று நம் அடிநாளிலிருந்தே இவர்கள் பேசிப் பேசி நம்மை ஆக்கி வைத்திருக்கிறார்கள் இப்படி!

அதிலிருந்து இம்மியும் மாறாமல் இப்போதும் அதையே பேசிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு காலத்துக்குத்தான் வெறும் கிறுகிறுப்பிலேயே காலம் கழிப்பது? வெறும் பேச்சின்பத்தால் கிடைக்கும் இந்தத் தமிழ்க் கிறுகிறுப்பு சுகத்தில் மயங்கியபடி, நம் வாழ்க்கையை வாழாமல் மடியும்வரை இவர்களது தமிழ்ரோச வாதங்களுக்காக வதங்கியே இருப்பதா! இவர்களது ரோச அரசியலுக்காக, பிறரது அனுதாபக் காட்சிப் பொருட்களாகியிருப்பது பெரும்பான்மையான தமிழ்மக்களல்லவா! இந்த உறுமல்கள் சீறல்களில் மயங்கி நாம் தொடர்ந்தும் உசார்மடையர்களாக இருக்க வேண்டாமே! - ஆசிரியர்

# நல்லூர் ஆலயச் சூழலில் 2000 பொலிஸார் பாதுகாப்பு பணியில்

(யாழ்ப்பாணம்)
நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவ நிகழ்வின் போது ஆலயச் சூழலில் சுமார் 2000 வரையான பொலிஸார் அடியவர்களின் பாதுகாப்புக் கருதி சேவையில் ஈடுபடுத் தப்பட்டிருப்பதாக யாழ். பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

இந்த ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு ஆலயத்தைச் சூழவுள்ள ஆறு வீதிகளிலும் தடை ஏற்படுத்தப்பட்டு போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த வீதித் தடையைக் கடந்து கால்நடையாகவே அனை வரும் செல்ல முடியும் இதற்கு ஒத்துழைப்புத் தருமாறும் அவர் அடியார் களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் ஆலயச் சூழலில் குப்பை போடுவது சம்பந்தமாகவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்து தூய்மையைப் பேணவும் அறிவுறுத்தியுள்ளனர் எனவும் யாழ்.பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (பா)

# தேங்கிக் கிடக்கும் கழிவுகள் துர்நாற்றம் வீசுவதாக விசனம்

(கரணவாய்)
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நெல்லியடிப் பகுதியில் உள்ள கடைகளுக்கு முன்னால் கொட்டப்படும் கழிவுகள் அகற்றப்படாமல் இருப்பதால் துர்நாற்றம் வீசுவதாக தெரிவிக் கப்படுகிறது.

இப்பகுதியில் பலதரப்பட்ட கடைகள் அமைந்துள்ளதுடன் இக்கடைகளிலுள்ள கழிவுப்பொருட்களை வாளிகளில் நிரப்பி வெளியில் வைத்து விடுக்கின்றனர். இந்த நிலையில் குப்பைகள் நிறைந்து கீழே சிந்துவதால் அவற்றை நாய்கள் கிளறி அசிங்கப்படுத்துவதாக அப்பகுதி மக்கள் தெரி விக்கின்றனர்.

இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் அத்துடன் தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இது தொடர்பாக பிரதேச சபையிடமும் வர்த்தக சங்கத்திடமும் தெரியப்படுத்தியதாகவும் அதனை அகற்றுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரி விக்கின்றனர்.

இதேவேளை நெல்லியடி வர்த்தக சங்கப் பகுதியை துப்பரவாக வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (18)

## அரியாலையில் குழுமோதல் இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)
அரியாலை முள்ளிப்பகுதியில் இருகுழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற மோதலில் வாள்வெட்டிற்கு இலக்காகிய இருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இருவரும் யாழ். பொலிஸாருக்கு கொடுத்த முறைப்பாட்டை அடுத்து சம்பவத்துடன் தொடர்புடை யவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.இதேவேளை நேற்று சம்பவம் நடைபெற்றபகுதிக்கு சென்ற பொலிஸார் அங்கும் விசாரணையில் ஈடுபட்டதாகவும் தெரியவருகின்றது. (பா)

## டைனமற் மீன்பிடி; இருவர் நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவுக் கடற்பரப்பில் டைனமற் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட குருநகரைச் சேர்ந்த இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இருவரும் நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். (பா)

## பூங்கா அமைப்பு

(சாவகச்சேரி)
கைதடி அரச முதியோர் இல்ல வளாகத்தில் முதியோர்களது நன்மை கருதி இருக்கை வசதிகள் கொண்ட பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது.

இங்கு தங்கியிருக்கும் முதியோர் தமது பொழுதை அமைதியாகவும் இனிமையாகவும் இயற்கையுடன் இணைந்து கழிக்க பூங்கா உதவும் எனக்கூறப்படுகிறது.

அத்துடன் முதியோர் இளைப்பாறுவதற்காக வசதியான இருக்கைகள் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (11)

## கள்ளுத் தவறணைகளில் பரிசோதனை நடவடிக்கை

(சாவகச்சேரி)
சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தின் சுகதாரப் பரிசோதகர்கள் தமது எல்லைக்குட்பட்ட கள்ளுத் தவறணைகளில் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தலுக்கமைய செயற்படாத கள்ளுத்தவறணைகளுக்கு அடுத்த வருடம் வியாபார உரிமம் வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளு உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோர் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கொடிகாமம் பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் சுகாதாரம் சம்பந்தமான கருத்தரங்கு சங்கப் பணிமனை மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. (11)

# பலவருடங்களாக திருத்தப்படாத நயினாதீவு கடற்கரை வீதி

(நயினாதீவு)
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கோவில் வளாகத்துக்கு தெற்குப்புறமாக அமைந்துள்ள மேற்கு கடற்கரை வீதி பல வருடங்களாக செப்பினிடப்படாது கல்லும், குண்டும், குழியுமாக காணப்படுகின்றது.

இவ்வீதியூடாக பயணித்து அம்மனை தரிசிக்க வரும் அடியார்கள், பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், கடற்றொழிலாளர்கள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக பயணிப் போர் இதனால் சிரமங்களை எதிர்கெள்கின்றனர்.

வாகனங்களாலும் சரி, சரி, நடத்தும் சரி போக்குவரத்தை மேற் கொள்வோர் பல சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வீதி 2000 ஆம் ஆண்டளவில் திருத்தப்பட்டு தார் ஊற்றப்பட்டது. பிற்பாடு எதுவித திருத்த வேலைகளும் நடைபெறவில்லை. மேலும் பெரும்பாலான வாகனங்கள் இப்பாதையூடாக போக்குவரத்தை மேற் கொள்ளும் போது வீதி அகலம் குறைந்ததாக காணப்படுகின்றது. இதனால் துவிச்சக்கர வண்டிகளில் வருவோர் மற்றும் பாதசாரிகளோ அல்லது வேறு வாகனங்களோ விலத்திச் செல்ல முடியாது சிரமப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே இவ்வீதியை அகலிப்புச் செய்து புனரமைக்கப்பட உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (175)

# ஒலிம்பிக்ஸ் 2012



லண்டனில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்குக்கு சுமார் எவ்வளவு செலவு என்று நினைக்கிறீர்கள்... ஆயிரம் கோடி? ஐயாயிரம் கோடி? இல்லை, நீங்கள் கஞ்சத்தனமாக யோசிக்கிறீர்கள். அமெரிக்க டொலரில் 14.5 பில்லியன் அளவிற்குச் செலவாகும் என்கிறது எகொனமிஸ்ட் பத்திரிகை. அதாவது இரண்டு இலட்சம் கோடி ரூபா. இன்னும் சிலர் 19 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகியிருக்கிறது என்றும் சொல்கிறார்கள்.

இவ்வளவு கோடி ரூபா பணத்தைப்போட்டு ஒலிம்பிக் நடத்துவதால் இங்கிலாந்திற்கு என்ன இலாபம்?ஐரோப்பியப் பொருளாதார வீழ்ச்சியில் வீழ்ந்துகொண்டிருக்கும் தம் நாடு, இதனால் மீண்டும் கம்பீரமாகதலைநிமிர வாய்ப்பிருக்கிறது என்று இங்கிலாந்து கருதுகிறது. லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் டிக்கெட் விற்பனை, தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமை, ஸ்பொன்சர்ஷிப் போன்றவை மூலம் நேரடியாக பல இலட்சக்கணக்கான கோடி ரூபாய் புழங்கும்.

மறைமுகமான பல இலாபங்களும் உண்டு. உதாரணத்துக்கு கிழக்கு லண்டனின் ஸ்ட்ரோபோர்ட் பகுதி அவ்வளவாக வளர்ச்சியடையாத பகுதி. ஒலிம்பிக் போட்டிகளை சாக்காக வைத்து, இப்பகுதியை நவீனமாகக் கட்டமைத்திருக்கிறது லண்டன். இப்பகுதியில் அடுத்த முப்பதாண்டுகளில் ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளைக் கடந்த ஏழே ஆண்டுகளில் சாத்தியமாக்கியிருக்கிறார்கள். ஒலிம்பிக்குக்கு உருவாக்கிய கட்டமைப்பு நகருக்கு எதிர்காலத்தில் ஏராளமான அனுகூலங்களை ஏற்படுத்தித் தரும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

தற்போது வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் பிரச்சினையாக இங்கிலாந்தில் உருவெடுத்திருக்கும் நிலையில் ஒலிம்பிக் போட்டிகள் பல்லாயிரம் பேருக்கு வேலை கொடுத்திருக்கிறது. 2009 பொருளாதார மந்தத்துக்குப் பிறகு, இப்போதுதான் இங்கிலாந்து சுறுசுறுப்பு பெறுகிறது என்று சொன்னால் அது மிகையான கூற்று அல்ல.

லண்டன் ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக இருப்பவர் செபஸ்டியன்கோ. ஒலிம்பிக்கில் இவர் இரண்டு முறை 1500 மீற்றர் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றவர். "உத்தேசமாக நாங்கள் ஒரு இலட்சம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறோம். இவர்களில் பன்னிரெண்டு சதவிகிதம் பேர்வரை முன்பு வேலையில்லாமல் வாடிக்கொண்டிருந்தவர்கள்" என்கிறார் செபஸ்டியன்.

இம்மாதிரி இலாபங்களைப் பட்டியலிட்டுப் பேசுவது என்பது நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டுமே திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருப்பது மாதிரி. ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் எட்டு ஆண்டுகளுக்கு முன்பே கிட்டத்தட்ட இதே அளவு தொகை செலவிடப்பட்டது. ஒலிம்பிக்கின் தாயகம் என்பதால் கௌரவத்துக்காகவாவது மிகப் பிரம்மாண்டமான ஏற்பாடுகளை செய்தது கிரீஸ் அரசு. துரதிர்ஷ்டவசமாக ஒலிம்பிக் நடத்தியதாலேயே, இப்போது அந்த அரசாங்கத்தின் பொருளாதாரம் வயிற்றுக்கும், வாய்க்கும் போதாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறது. ஒலிம்பிக்கால் ஏற்பட்ட பலத்த நஷ்டத்தை தாங்கமுடியாமல் பரிதாபகரமான நிலையில் தள்ளப்பட்டிருக்கிறது கிரீஸ். 1976ஆம் ஆண்டு கனடாவின் மொண்ட்ரியல் நகரில் நடத்தப்பட்ட ஒலிம்பிக்தான் பொருளாதார ரீதியாகப் படுதோல்வி அடைந்த ஒலிம்பிக். அப்போது செலவிடப்பட்ட தொகைக்கு, முப்பத்திஐந்து ஆண்டுகள் கழிந்த நிலையில் இப்போதும் வட்டி கட்டி மாளவில்லயாம் மொண்ட்ரியலுக்கு. இம்மாதிரி லண்டனின் வயிற்றில் புளியைக் கரைக்கக் கூடிய வரலாறும் ஒலிம்பிக்குக்கு உண்டு.

போட்டிகளை நடத்துவதற்கு பெரும் பணம் செலவிடப்பட வேண்டும். ஒலிம்பிக் என்பதால் தரத்தில் எந்த சமரசமும் செய்து கொள்ள முடியாது. போட்டி நடக்கும் இடங்களைக் கட்டுவதிலும், அதைச்சுற்றிய போக்குவரத்துக் கட்டமைப்புகளுக்கும் முதல்தர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு செலவு செய்து போட்டிகளை நடத்தும் நகரத்துக்கு இதனால் நஷ்டம் ஏற்பட்டால் அதைப்பற்றி சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி கவலைப்பட்டதாக சரித்திரமே இல்லை. இங்கிலாந்து அரசாங்கம் யாரும் ஏற்பாடுகளில் குறை சொல்லிவிடக்கூடாது என்பதற்காக சுகாதாரம், கல்வி மாதிரியான முக்கியமான துறை முதலீடுகளை ஒலிம்பிக்குக்கு திருப்பி விட்டதாக ஏற்கனவே பிரிட்டன்வாசிகள் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பணமாகச் செலவிடப்பட்ட கோடிகளை விடுங்கள். அரசுப் பணியாளர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள் ஆகியோரின் பொன்னான நேரம் இதற்காக செலவிடப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக போக்குவரத்து, தங்கும் வசதி என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிக்கு செலவு செய்து மாளவில்லை லண்டனுக்கு. சர்வதேச ஊடக வியலாளர்கள் மனம் கோணாமல் "எல்லா" வசதிகளையும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மொத்தத்தில் தண்ணியாக செலவிட்டுவிட்டு, வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எனினும் கடந்தகால ஒலிம்பிக் செயற்பாடுகளை எடை போடும்போது லண்டன் ஒலிம்பிக் பொருளாதார ரீதியாகவும் பெரும் வெற்றி பெறும் என்றே பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள். 84 லொஸ் ஏஞ்சல்ஸ், 88 சியோல் ஒலிம்பிக் போட்டிகளில் கிடைத்த அபரிதமான இலாபம் மாதிரி ஒரு மேஜிக்கை 2012இல் லண்டனும் நிகழ்த்தும் என்கிறார்கள்.


- யுவகிருஷ்ணா

## நோபல் வீரர்




நோபல் பரிசுபெற்ற ஒரே ஒலிம்பிக் வீரர் பிரிட்டனின் பிலிப் நோயல் பேக்கர். இவர் 1920இல் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 1500 மீற்றர் தடகளப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவர். இவர் அமைதிக்கானநோபல் பரிசினை 1959ஆம் ஆண்டுக்காகபெற்றார்.

## சம்பியன் பிளேட்டோ



புராதன ஒலிம்பிக்கில் தத்துவ மேதை பிளேட்டோ "பான்க்ரேஷன்" (Pankration) என்கிற விளையாட்டில் இரட்டை சம்பியன் பட்டம் வென்றிருக்கிறார்.

## முதல் சம்பியன்



1896இல் மீண்டும் ஒலிம்பிக் நவீனமுறையில் தொடங்கப்பட்ட போது, முதன்முதலாக சம்பியன் ஆனவர் என்கிற பெருமை அமெரிக்காவைச் சேர்ந்த தடகள வீரரான ஜேம்ஸ் பி.கனோலிக்கு கிடைத்தது.

## தங்கநாடு

1896இல் இருந்து நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் இன்றுவரை ஒவ்வொரு ஒலிம்பிக்குக்கும் குறைந்தது ஒரு தங்கப்பதக்கமாவது வென்ற நாடு என்கிற பெருமையை இங்கிலாந்து பெறுகிறது.

## குட்டிப் பையன்

1896இல் நடந்த முதல் நவீன ஒலிம்பிக் போட்டிகளின் போது கிரேக்க ஜிம்னாஸ்டிக் வீரர் டிமிட்ரியோஸ் லவுண்ட்ராஸ் பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தார். அப்போது அவருக்கு வயது பத்து மட்டுமே. இன்றுவரை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற மிகக்குறைந்த வயதுடைய வீரர் என்கிற சாதனையை அவர் தக்கவைத்திருக்கிறார்.

## ஒலிம்பிக் டிவி

1936இல் ஜேர்மனியில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளை ஹிட்லர் பிரமாதப் படுத்தினார். ஒலிம்பிக் வரலாற்றிலேயே முதன் முதலாக போட்டிகள் டிவி கமெராவில் பதிவு செய்யப்பட்டு, பெர்லின் நகர் முழுக்க பிரம் மாண்டமான திரைகளில் ஒளிபரப்பப்பட்டது. வீடுகளில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி களில் ஒலிம்பிக் விளையாட்டு 1948 லண்டன் போட்டிகளின் போதுதான் ஒளிபரப்பப்பட்டது. இதை இங்கிலாந்துவாசிகள் மட்டுமே இரசிக்க முடிந்தது. 1960 ரோம் ஒலிம்பிக் போட்டிகளின் போதுதான் உலகமெங்கும் இருக்கும் ரசிகர்கள் டிவி வாயிலாக விளையாட்டுப் போட்டிகளை தரிசிக்க முடிந்தது.

## குட்டி சம்பியன்

1936ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கில் 200 மீற்றர் நீச்சல் போட்டி யில் டென்மார்க்கைச் சேர்ந்த இன்கே சோரென்ஸென் வெண்கலம் வென்றார். அப்போது அவ ருக்கு வயது பதின்மூன்று. இன்றுவரை தனிநபர் பிரிவில் இவ்வளவு குறைவான வயதில் யாரும் ஒலிம்பிக் பதக்கம் பெற்றதில்லை.

## ஒலிம்பிக் கொடி



நவீன ஒலிம்பிக்கை உருவாக்கியவரானகூபர்டின் 1914இல் ஒலிம்பிக் போட்டிகளுக்கென்று பிரத்தியேகக் கொடியை உருவாக்கினார். வெள்ளைப் பின்னணியில் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு நிறங்களில் ஒன்றோடு ஒன்றாக ஒட்டிய ஐந்து வட்டங்கள். இந்த ஐந்து வட்டங்களும் ஐந்து கண்டங்களை குறிப்பிடுகின்றன. 1920இல் நடந்த ஒலிம்பிக் போட்டிகளின் போதுதான் முதன்முறையாக இந்தக் கொடி ஏற்றப்பட்டது.

## ராணி குடும்பத்து குதிரை வீராங்கனைகள்



ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களும், வீராங்கனைகளும் ஆணா, பெண்ணா என்பதற்குரிய பாலியல் சோதனை நடத்தப்படுவது வழக்கம். 1976இல் ஒலிம்பிக்கில் ஒரு வேடிக்கையான விஷயம் நடந்தது. பிரிட்டனின் குதிரையோட்டக் குழுவில் இளவரசி ஆனி இடம்பெற்றிருந்தார். மகாராணி எலிசபெத்-2 அவர்களின் மகள் என்பதால் இவருக்கு அச்சோதனை நடத்துவது அர்த்தமற்றது(!) என்கிற முடிவுக்கு வந்த ஒலிம்பிக் கமிட்டி, ஆனியிடம் சோதனை நடத்தி சான்றிதழைப் பெற திராணியில்லாமல் நழுவிக் கொண்டது. நவீன ஒலிம்பிக் வரலாற்றில் பாலினச் சோதனை நடத்தப்படாத ஒரே வீராங்கனை இவர் மட்டும்தான்.

தனிநபர் மற்றும் குழுப்போட்டி இரண்டிலுமே ஆனி படுதோல்வி அடைந்தார். இளவரசி ஆனியின் மகள் சாரா பிலிப்ஸும் குதிரையோட்ட வீராங்கனையே. இவர் 2004 மற்றும் 2008 ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இருமுறையும் இவரது குதிரைக்கு காயமேற்பட்டு, எந்தவொரு போட்டியிலும் திறமை காட்டவில்லை.

## தொடக்க விழா

ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட்டுப்போட்டிகளின் சுவாரஸ்யத்தை தவிர்த்து அனைவரும் எதிர்பார்ப்பது வண்ணமயமான கோலாகலமான தொடக்கவிழாவைதான். 1908இல் இதே லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் போதுதான் இந்த சம்பிரதாயம் உருவாக்கப்பட்டது.



# நாடாளுமன்றத்தின் மூலமே நிரந்தரத் தீர்வைக் காண முடியும்



(கொழும்பு)

நாம் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் மாத்திரம் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது இதற்கு நாடாளுமன்றத்தின் மூலமே நிரந்தரமான இறுதித் தீர்வை காண முடியும். எனவே, கூட்டமைப்பினர் புலிகள் போன்று புதிய நிபந்தனைகளை விதித்து, பேச்சுவார்த்தைகளை தட்டிக் கழிப்பது தவறு என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களையும் இலத்திரனியல் செய்திப் பிரிவு பொறுப்பாசிரியர்களையும் சந்தித்து பேசிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமன்றி இந்நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக இனப்பிரச்சினைக்கு சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை காண வேண்டும்.

இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சினை அல்ல. இது இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினை. எனவே, சகல அரசியல் கட்சிகளுக்கும் இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக தீர்த்து வைக்கும் கடமையும், பொறுப்பும் இருக்கிறது.

2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் வட மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகிறதென்று கூறினார். இந்த தேர்தலை நடத்துவதற்கு முன்னர் அரசாங்கம் பல முன் ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்.

கடந்த கால யுத்தத்தினால் தமிழர்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை. முஸ்லிம்களும் சிங்களவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நல்லிணக்க ஆணைக்குழு தனது சிபாரிசுகளில் வடபகுதியில் இடம்பெயர்ந்த தமிழர்கள் மட்டுமன்றி, முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகியோரையும் மீள்குடியேற்ற வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளது. நாம் அதனையும் செய்து முடித்த பின்னரே தேர்தலை நடத்த வேண்டிய கடப்பாட்டினை கொண்டுள்ளோம்.


1981 ஆம் ஆண்டின் வாக்காளர் அட்டவணை மாத்திரமே இப்போது வடபகுதியில் உத்தியோகபூர்வ ஆவணமாக இருக்கின்றது. இதனடிப்படையில் கடந்த காலத்தில் நடந்த தேர்தலின் போது வாக்காளர் இல்லாத காரணத்தினால் சிலர் 200 வாக்குகளுக்கும் குறைந்த வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் இடம்பெற்றன.

எனவே, மக்களுக்கு சுதந்திரமாக சென்று வாக்களிப்பதற்கான ஒரு சுமுகமான சூழ்நிலையை அடுத்தாண்டில் உருவாக்கியதற்கு பின்னரே வடபகுதி தேர்தலை நாம் நடத்துவோம்.

தற்போது வடபகுதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்திருப்பதனால் வடபகுதியில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்பப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 இல் இருந்து 6 ஆக குறைந்திருக்கிறது.

அடுத்தாண்டு ஜூன் மாதம் பூர்த்தி செய்யப்படும் புதிய வாக்காளர் இடாப்பில் மக்கள் தொகையை ஒப்பிட்டு பார்த்த பின்னரே நாடாளுமன்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையை கூட்டுவதா? இல்லையா? அல்லது இதேநிலையில் வைத்திருப்பதா என்று முடிவெடுக்கப்படும்.

நல்லிணக்க ஆணைக்குழுவை நான் தான் நியமித்தேன். அக்குழுவின் சிபாரிசுகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார்.



# வெளிநாட்டுப் பிரஜை சடலமாக மீட்பு

(கொழும்பு)

களுத்துறை பிரதேசத்தில் உள்ள பல்பொருள் வர்த்தக நிலையக் கட்டடத் தொகுதியொன்றின் கழிவறையில் இருந்து வெளிநாட்டுப் பிரஜை ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்த சடலம் 50 வயதான பிரித்தானிய பிரஜை ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண கூறியுள்ளார்.

அவர் நீண்ட காலமாக குறித்த பிரதேசத்தில் வசித்து வருபவர் என்பது தெரியவந்துள்ளது. மீட்கப்பட்ட பிரித்தானிய பிரஜையின் சடலம் நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது மரணத்திற்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)


மாகாண சபைத் தேர்தலுக்கான தற்காலிக அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 20 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளின் ஊடாக தற்காலிக அடையாள அட்டைக்காக விண்ணப்பிக்க முடியுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவிக்கின்றார்.

தேசிய அடையாள அட்டை, கடவுச் சீட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அட்டை, முதியோர் அடையாள அட்டை, சமயத் தலைவர்களுக்கான அடையாள அட்டைகள் ஆகியவற்றை பயன்படுத்தி வாக்களிக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தவிர அடையாள அட்டைகள் இல்லாதவர்கள் 2010, 2011 ஆம் ஆண்டுகளுக்காக வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளை கிராம சேவை உத்தியோகத்தர்களின் ஊடாக புதுப்பித்து மாகாண சபைத் தேர்தலுக்காக பயன்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மாகாணசபை கலைப்பு விவகாரம் 9 ஆம் திகதி நீதிமன்றம் தீர்ப்பு



(கொழும்பு)


உரிய நேரத்திற்கு முன்னர் கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான வழக்கு விசாரணையின் தீர்ப்பை எதிர்வரும் ஒன்பதாம் திகதி வழங்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு தொடர்பில் இரண்டு தரப்பினரினதும் வாதப் பிரதிவாதங்களை கவனத்திற் கொண்டதன் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

உரிய காலத்திற்கு முன்னர் கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து அந்த மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இராசையா துரைரத்தினம் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளான சிசிர டி அப்ரு, அனில் குணரத்ன மற்றும் ஏ.டபிள்யூ.ஏ.சலாம் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்றது.

# அரச வைத்தியர்கள் அடையாள பகிஷ்கரிப்பு



(கொழும்பு)

வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று இப்பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

மாகாண அரச வைத்தியசாலை வைத்தியர்களுக்கான தொலைபேசி கட்டணம் குறித்து ஏற்பட்டுள்ள பிரச்சினையை முன்வைத்தே இப்பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

பல தடவைகள் இது தொடர்பில் அதிகாரிகளிடம் அறிவித்த போதும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இரட்டைக் கொலை விவகாரம் கிராம மக்களிடம் விசாரணை




(கொழும்பு)

தாயும் மகளும் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட காவத்தை கொட்டகத்தென்ன, வீட்டில் பெறப்பட்ட விரலடையாளங்களை ஆராய்ந்து வரும் குற்றப்புலனாய்வு பொலிஸார் பல ஆண்களை விசாரிப்பதற்காக இரத்தினபுரி எத்தோயா என்னும் கிராமத்துக்கு சென்றுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர்களின் ஒரு நெருங்கிய உறவினருக்கும் எத்தோயாவில் வசிக்கும் அவரின் உறவினருக்கும் இடையில் தொடர்பு உள்ளதைக் கண்டறிவதற்கு பொலிஸார் முயன்று வருகின்றனர்.

இந்த நெருங்கிய உறவினரே எத்தோயாவிலுள்ள தனது உறவினரிடம் இந்த கொலைகளை செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்கியதாக சந்தேகிக்கப்படுகின்றது. கொலை செய்யுமளவுக்கு இவருக்கு கொல்லப்பட்டவர்களுடன் பிரச்சினை இருக்கவில்லை என ஊர்மக்கள் கருதுகின்றனர்.

30 விசேட அதிரடிப்படையினரும் 40 பொலிஸாரும் இப்பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# கொழும்பு மாநகர சபையின் செங்கோல் மீண்டும் ஒப்படைப்பு

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தின்போது நேற்று முன்தினம் முறுகல் அமைதியின்மை ஏற்பட்டதை தொடர்ந்து காணாமற்போன செங்கோல் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களால் செங்கோல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருந்ததுடன், பொலிஸாரின் தலையீடுகள் எதுவுமின்றி எதிர்க்கட்சியினரால் செங்கோல் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கூட்டத்தில் குரிய நிகழ்ச்சி நிரல் தொடர்பில் எழுந்த பிரச்சினை காரணமாக கொழும்பு மாநகர சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

எதிர்க்கட்சி சபையின் பல வேறு பிரேரணைகளை முன்வைப்பதற்கு எதிர்பார்த்திருந்த போதும் அவற்றைப் பொருட்படுத்தாது செயற்பட்டமையே இதற்குக் காரணம் என கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சி ஊடகப் பேச்சாளர் ரிசா ஷாரூக் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையின் செங்கோல் எதிர்க்கட்சி உறுப்பினர் அனுர சுஜீவவினால் சபையில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

# ரமழான் நோன்புக்காக தடையின்றி நீர் விநியோகம்

(கொழும்பு)

ரமழான் நோன்பை முன்னிட்டு தடையின்றி நீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவிக்கின்றது.

முஸ்லிம் மக்களின் தேவை கருதி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில் நீர் வெட்டை குறைப்பதற்கும் எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறினார்.

அத்தியாவசிய சந்தர்ப்பங்களிலும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நீர் வெட்டுக்களை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.


# கிடைக்கின்ற வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் தமக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமே சமூகம் விருத்தியடைவதோடு வளர்ச்சியடையுமென ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், நல்லூர் பிரதேச எதிர்கட்சித் தலைவருமான அம்பலம் ரவீந்திரதாசன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மகாத்மாஜி முன்பள்ளி விளையாட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை தலைவர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,



நான் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டுபெரும் மகிழ்ச்சியடைகிறேன் ஒவ்வொருவரும் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரியாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து வெற்றீட்டிய சிறார்களுக்கு பரிசில்களை அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கிராம அலுவலர் ஜே.லீனஸ், நல்லூர் முன்பள்ளி கோட்ட இணைப்பாளர் வி.மாலதி, பொது சுகாதார பரிசோதகர் ஜி.மதனகுமார், உளவளத்துணையாளர் திருமதி மேரி மெனிக்காவிலிப் திருநெல்வேலி மகளிர் அபிவிருத்திக் குழு தலைவி திருமதி.ஜெகதீஸ்வரி பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஆரம்ப பாடசாலைகளை புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டம்

(பருத்தித்துறை)

ஆரம்பப்பாடசாலை அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ஆரம்பப்பாடசாலைகள் புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

தேசிய நிகழ்ச்சியாக உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும் 5 ஆயிரம் பாடசாலைகளுக்கு மின்சார வசதி, குடிநீர் வசதி, சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தல், பாடசாலை வேலிகள், வாயிற்கதவுகளை நிர்மாணித்தல், ஏற்கனவே காணப்படுகின்ற கட்டடங்களை மறுசீரமைத்தலும், பூச்சுப் பூசுதல், பாடசாலை நிலத்தை முன்மாதிரி வீட்டுத்தோட்டமாக மாற்றுதல், பாடசாலையின் பெயர்ப்பலகை தயாரித்தல், முதலாம் ஆண்டு மாணவர்களின் செயற்பாட்டை முறையாக அமைத்தல், சிறுவர் விளையாட்டு முற்றத்தை நிர்மாணித்தல், ஏற்கனவே ஒரு ஆசிரியர் விடுதி காணப்படின் அதற்கு அத்தியவசியமான புனரமைப்புக்களை மாத்திரம் மேற்கொள்ளல்.

இவ்வேலைத்திட்டங்களை பிரதேச செயலகங்கள் முன்னெடுக்கவுள்ளன. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு ஆரம்பப்பாடசாலைகளுக்கும் முதலில் 5 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலைகளை முடித்து பிரதேச செயலகங்களில ரூபா 5 இலட்சத்தினைப் பெற்றுக் கொள்ளலாம் இச் செயற்பாடு மகிந்த சிந்தனையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(109)

## முரசின் இன்றைய பலன்

(01.08.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 17 ஆம் திகதி. சதுர்த்தசி முற்பகல் 10.59 வரை. நட்சத்திரம் உத்தராடம். முன்னிரவு 11.15 வரை. அமிர்தசித்தம்.
இராகுகாலம் 12.03 - 1.33 வரை. சுபநேரம் 4.33 - 6.03 வரை.
எமகண்டம் 7.33 -9.03 வரை. குளிகன் காலம் 10.33 - 12.03 வரை.
பூரணை விரதம்

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | எதிலும் இலாபம், உதவிகள் கிட்டும், நண்பர்கள் அனுசரணை, பயணம் தவிர்க்கவும். |
| ரிஷபம் | தொழில் வள இலாபம், ஆரோக்கியம், பிரச்சினைகள் மறையும், சொத்து சேரும். |
| மிதுனம் | சந்திராட்டமம், புது முயற்சி கூடாது, உழைப்பு, அலைச்சல், வாக்குறுதிகளைத்தவிர்க்கவும். |
| கடகம் | பகைவரால் தொல்லை, மருத்துவச் செலவுகள், வீண் குழப்பங்கள், உறவினரால் பிரச்சினை. |
| சிம்மம் | அரச உதவி, குடும்பத்தில் மகிழ்ச்சி, நினைத்த காரியம் வெற்றி, உறவினர் உதவி கிட்டாது. |
| கன்னி | சௌக்கியம், ஆடை ஆபரண யோகம், தொழில் பயணம், புதிய முயற்சியில் வெற்றி. |
| துலாம் | அந்நியர் சகாயம், பயண வெற்றி, குடும்பத்தில் கருத்துவேறுபாடு, தடைக்குப்பின் சுப காரியம். |
| விருச்சிகம் | சுகவிருத்தி, பணவரவில் தடை, உறவினரால் பிரச்சினை, நிதானம் வேண்டும் |
| தனுசு | சுப காரிய ஈடுபாடு, சீரான உடல் ஆரோக்கியம், பதவியுயர்வு கிட்டும், சோர்வு அகலும். |
| மகரம் | வெற்றி, முற்பகல் நன்று, பெரிய மனிதர்களின் ஆதரவு, ஆபரணச் சேர்க்கை. |
| கும்பம் | பயண நன்மை, முயற்சிகளில் வெற்றி, மருத்துவச் செலவு குறையும், குடும்ப ஒற்றுமை. |
| மீனம் | விருத்தி, ஆரோக்கியம் பாதிப்பு, குடும்பத்தில் சச்சரவு, அதிகாரிகள் தொல்லை. |

## முருங்கைக்கன்றுகள் விநியோகம்

(ஆனைக்கோட்டை)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராம சேவையாளர்களுக்கு முருங்கைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு முருங்கைக் கன்றுகளை வழங்குவதற்காக 2 ஆயிரம் முருங்கைக் கன்றுகள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

தற்போது இங்குள்ள 28 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் முன்னுரிமை அடிப்படையில் கிராம சேவையாளர்கள் மக்களுக்கு அவற்றை வழங்கி வருகின்றனர்.

(104)


# ரமழான் சிந்தனை



*எந்த மனிதர் முஸ்லிமான தன் சகோதரரிடம் கோபம் கொண்டு மூன்று நாட்களுக்கு மேல் பேசாமலிருந்து அதே நிலையில் இறந்து விடுகின்றாரோ அவர் நேராக நரகத்திற்குச் செல்வார் என ரஸீல் (ஸல்) கூறியுள்ளார்கள். நீங்கள் உங்களுக்குள் தர்க்கம் செய்ய வேண்டாம். அது உங்களை பலவீனப்படுத்தி, ஆற்றலையும் குன்றிப்படுத்தும்*

- ஹதீஸ் - (105)

## பரமர் சங்கமம்



"சட்டி சுட்டதடா கை விட்டதடா நெஞ்சைத் தொட்டதடா புத்தி கெட்டதடா" பட்டினத்தார் பாடலைத் தொட்டுக் கவிஞர் கண்ணதாசன் தன்னுடைய சரக்குகளையும் சோத்து எழுதிய பாடல்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர் முதற்கொண்டு தொழில் நுட்பவியலாளர் வைத்திய அதிகாரிகள் வரையும் சட்டி சுட்டுவிடும் என்ற நிலையிலேயே அங்கே கடமையில் ஈடுபடுகின்றார்கள்.

இவர்களிடம் நோயுடன் வைத்தியம் செய்வித்துக் கொள்ள செல்பவர்களில் பாடு "நெஞ்சைத் தொட்டதடா" என்னும் வகையிலே அமைந்து விடுவதையும் தவிர்க்க முடிவதில்லை.

கடந்த காலங்களில் நோயாளிக்குக் கொடுக்க வேண்டிய மருந்தை மாற்றிக் கொடுத்து உயிரைப் பறித்துக் கொண்ட சம்பவங்களும். சூத்தைப் பல்லைப் புடுங்கப் போய் நல்ல பல்லை இழந்து வந்ததும் வரலாறுகளாகப் பதியப்பட்டுள்ளன.

அதேபோலதான் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை விபத்தொன்றில் சிக்கிக்கொண்ட ஒருவர் 24 ஆம் திகதி விடுதியிலிருந்து எக்ஸ்ரே எடுக்க அப்பிரிவுக்கு அனுப்பப்பட்டார்.

அவருக்கு கையில் ஏற்பட்டிருந்த முறிவைப் படமாக்க வேண்டிய தொழில் நூட்பவியலாளர் நெஞ்சைப் படமெடுத்து விட்டு அனுப்பி இருந்தார். அல்பேட் என்னும் பெயரில் இன்னும் ஒரு நோயாளரும் இருந்தார்.

அவருக்கு முன்னெழுத்து W இவருக்கு A இவருடைய பதிவை அவருக்கும் அவருடைய பதிவை இவருக்கும் அவசரத்தில் வீட்டுக்குப் போகும் எண்ணத்துடன் செயற்பட்ட தொழில் நுட்பவியலாளரால் பாதிக்கப்பட்டது நோயாளர் தான்.

ஒரு நாளில் ஆயிரக்கணக்கான நோயாளர் வந்து போகும் போதனா வைத்தியசாலையில் இவ்விதம் ஆயிரம் புளைகளையும் அங்கு பணியாற்றும் சகலரும் செய்து கொண்டுதான் இருக்கினம்.

இதனை விட மிகவும் இயலாத நோயாளர்களை விடுதிக்கும். ஆய்வு கூடங்களுக்கும் பரிமாற்றம் செய்யவும் இரவு பகலென கடமையில் நூற்றுக் கணக்கான சிற்றூளியர்கள் செயற்படுகின்றார்கள்.


வைத்தியரின் குறிப்பேட்டிற்கிணங்க எக்ஸ்ரே அறைக்கு மற்றும் ஆய்வு கூடங்களுக்கும் நோயாளர்களை ஏத்திச் சென்று திரும்பவும் விடுதிகளுக்கு கூட்டிவர யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாளர்கள் இல்லையென கைவிரிக்கப்படுவதாகவும் நோயாளர் கவலை தெரிவிக்கின்றனர்.

மிகவும் ஏலாத நிலைமையில் குறைந்தது ஐந்நூறு மீற்றர் தூரம் நடந்து செல்ல முடியாததால் அதற்காக பணம் செலுத்தவும் நோயாளர்கள் முன்வந்த போதும் அதனை ஒழுங்கு செய்து கொடுக்க வைத்திய அதிகாரிகள் பின்னிற்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதனால் வைத்திய சேவையைப் பெறத் திரும்பவும் போதனா வைத்தியசாலைக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளும் நோயாளர்கள் அனுபவிக்கும் துன்பம் சொல்லிமாளாது.

பணவசதி படைத்தோர் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்வர். ஏழை எளியதுகளுக்காக பன்னாட்டு உதவிகளைப் பெற்று இயங்கும் தர்மாஸ்பத்திரி இப்புடியானால் "சட்டி சுட்டு விடும்" நிலைதான சொல்லுங்க பாப்பம்.

# வில்வித்தையில் தென்கொரியா ஆதிக்கம்



(லண்டன்)

பெண்கள் வில்வித்தையில் தென்கொரிய பெண்கள் அணி தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

ஒலிம்பிக் போட்டியில் வில்வித்தையில் பெண்கள் அணிகள் பந்தயம் 1988ஆம் ஆண்டில் சியோலில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் அறிமுகம் செய்தது முதல் இன்று வரை தொடர்ந்து தென்கொரியா பெண்கள் அணி தங்கப்பதக்கம் வென்று ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் லீ சுங் ஜின், கி போ பாய், ஷோய் ஹுனுஜ் ஆகியோர் அடங்கிய தென்கொரியா அணி தங்கப்பதக்கம் வென்றது. ஒலிம்பிக் போட்டியில் வில்வித்தை பெண்கள் அணிகள் பிரிவில் தென்கொரிய அணி தொடர்ந்து 7ஆவது முறையாக தங்கம் வென்று சாதனை படைத்துள்ளது.

# இந்தியாவிற்கு முதல் பதக்கம் ககன் நரங்கிற்கு பாராட்டு



(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா சார்பாக முதலாவது பதக்கத்தை வென்றெடுத்த ககன் நரங்கிற்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

ஆடவருக்கான 10 மீற்றர் ஏயார் ரை∴பிள் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை நரங் வெற்றிகொண்டிருந்தார்.

நரங்கிற்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ள இந்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மக்கான், அவருக்கு தொழில்வாய்ப்பை வழங்குவதாகவும் கூறியுள்ளார்.

701.1 புள்ளிகளைப் பெற்ற நரங் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜிம்னாஸ்டிக்ஸ்

ஜிம்னாஸ்டிக்ஸ் என்கிற சொல் கிரேக்க மொழியின் "ஜிம்னோஸ்" என்கிற வார்த்தையில் இருந்து பிறந்தது. இச்சொல்லுக்கு "நிர்வாணம்" என்று பொருள். ஜிம்னாஸ்ஸியம் என்பது உடைகளற்று விளையாடும் விளையாட்டு. புராதன ஒலிம்பிக்கில் இவ்வாறான முறையில்தான் போட்டிகள் நடந்திருக்கிறது.

# ஒலிம்பிக்கில் தாத்தா, பாட்டி

ஸ்வீடனைச் சேர்ந்த ஒஸ்கார் ஸ்வான் 1908, 1912, 1920 மற்றும் 1924 ஆகிய ஒலிம்பிக் போட்டிகளில் துப்பாக்கி சுடும் பிரிவில் பங்கேற்றவர். 1912இல் தங்கப்பதக்கம் வாங்கியபோது அவருக்கு வயது 65. இன்றுவரை தங்கப்பதக்கம் வாங்கியதிலேயே வயதான வீரர் என்கிற பெருமையை பெறுகிறார். 1924இல் இவரே வெள்ளிப்பதக்கமும் 73 வயதில் வென்றார். ஒலிம்பிக் வரலாற்றிலேயே அதிக வயதில் பதக்கம் வென்றவர் என்கிற சாதனையும் இவருக்கு இன்றுவரை நீடிக்கிறது. அதே நேரம் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற அதிக வயதான வீரர் என்றும், தன் வயது மூலமாக ஏராளமான சாதனைகளுக்கு சொந்தக்காரராக இருக்கிறார். 1972 ஒலிம்பிக்கில் பிரிட்டிஷ் வீராங்கனை லோர்னா ஜான்ஸ்டோன் குதிரையோட்டப் பிரிவில் பங்கேற்றபோது அவருக்கு வயது 71. ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற அதிக வயதான வீராங்கனை என்கிற சாதனை இன்றுவரை அவரிடம்தான் இருக்கிறது.

# இரண்டு முறை தங்கம் இரண்டு நாடுகளுக்கு

அவுஸ்ரேலிய ரக்பி வீரர் டானியல் கரோல் 1908 ஒலிம்பிக்கில் தன் தாய்நாட்டுக்கு தங்கம் வென்று பெருமை சேர்த்தார்.1920இலும் அவர்ரக்பியில் தங்கம் வென்றார். ஆனால் இப்போது அமெரிக்காவின் சார்பில் பங்கேற்றார். ஜோர்ஜியாவைச் சேர்ந்த பளு தூக்கும் வீரர் அகாகைட் காக்கியாஸ்விலி, ஒருங்கிணைந்த சோவியத் ரஷ்ய அணியின் சார்பில் பங்கேற்று பார் சிலோனாவில் நடந்த 1992ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார். மீண்டும் அட்லாண்டாவில் 1996இல்நடந்த போட்டியிலும், சிட்னியில் 2000ஆம் ஆண்டு நடந்த போட்டியிலும் அடுத்தடுத்து தங்கம் வென்றார். 1996இலும், 2000இலும் கிரேக்க குடியுரிமை பெற்று கிரீஸ் நாட்டின் சார்பில் பங்கேற்றார்.

# ஊக்கமருந்து குற்றச்சாட்டு நிராகரிப்பு



(லண்டன்)

தாம் ஊக்கமருந்து பயன்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டை சீனாவின் உலக சாதனை நீச்சல் வீராங்கனை யீஷிவேன் நிராகரித்துள்ளார்.

16 வயதான யீ இன் திறமை நம்பமுடியாத ஒன்றெனவும், சர்ச்சைக்குரியது எனவும் அமெரிக்காவின் முன்னணி பயிற்றுவிப்பாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

உலக நீச்சல் பயிற்றுவிப்பாளர்கள் சங்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ஜோன் லெனட் இந்தக் கருத்தினை வெளியிட்டிருந்தார்.400 மீற்றர் நீச்சல் போட்டியில் யீ ஷிவேன் உலக சாதனை படைத்ததுடன், தங்கப் பதக்கத்தையும் வெற்றிகொண்டிருந்தார்.

இறுதி 50 மீற்றர் தூரத்தை ஆடவரை விடவும் குறைந்த நேரத்தில் அவர் கடந்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வாய்ப்பே மகிழ்ச்சி



(லண்டன்)

தாம் பங்குபற்றிய போட்டியில் தோல்வியடைந்தமை கவலைக்குரிய விடயமென்ற போதிலும், இம்முறை ஒலிம்பிக் போட்டியில் பங்குகொள்ளும் அரிய வாய்ப்பு தனக்கு கிடைத்தமை தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக பட்மின்ரன் வீராங்கனை திலினி ஜயசிங்க குறிப்பிடுகின்றார்.

பெட்மின்டன் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில் அவர் என் பிரிவின் கீழ் போட்டியிட்டார்.

இதன்கீழ் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் போர்த்துக்கல் வீராங்கனை தெல்மா சாண்டோஸிடம், இரண்டுக்கு பூஜ்ஜியம் என்ற அடிப்படையில் திலினி ஜயசிங்க தோல்வியடைந்தார்.

முதலாவது போட்டிக்கு பின்னர் இரண்டாவது போட்டியில் சிறப்பாக விளையாட முடியும் என நம்பினேன், துரதிஷ்டவசமாக சிறப்பாக விளையாட முடியாமல் போனது என இது தொடர்பில் கருத்து வெளியிட்ட திலினி ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் நிலூக்க கருணாரத்ன வெற்றிபெற்றமை குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலூக்க கருணாரத்ன வெற்றிபெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ள திலினி, அவருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இளைஞர்கள் விளையாட்டில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இது எதிர்காலத்தில் ஒலிம்பிக் போட்டியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என நான் நம்புகின்றேன். அடுத்து வரும் ஒலிம்பிக்குகளில் இலங்கையும் பதக்க வேட்டையில் ஈடுபடும் என்பது எனது தனிப்பட்ட கருத்து எனவும் அவர் தெரிவித்தார்.

# ருடா மெய்லுட்டிக்கு தங்கம்



(லண்டன்)

பெண்களுக்கான 100 மீற்றர் பிரஸ்டிரோக் நீச்சல் நேற்று முன்தினம் நடந்தது. இதில் அமெரிக்க வீராங்கனை ரெபோக்கா சோனி தங்கம் வெல்வார் என்று அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் லிதுனியா நாட்டைச் சேர்ந்த ருடா மெய்லுட்டி தங்கம் வென்று அமெரிக்காவுக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

ருடா பந்தய தூரத்தை 1 நிமிடம் 05.47 வினாடியில் கடந்தார். ரெபேக்கா சோனி 1 நிமிடம் 05.55 வினாடியில் கடந்து வெள்ளிப்பதக்கம் பெற்றார். ஜப்பானை சேர்ந்த சுசுகி 1 நிமிடம் 06.46 வினாடியில் கடந்து வெண்கல பதக்கம் பெற்றார். ஆண்களுக்கான 100 மீற்றர் பேக்ஸ்டிரோக், பெண்களுக்கான 100 மீற்றர் பேக்ஸ்டிரோக் நீச்சலில் அமெரிக்காவுக்கு தங்கம் கிடைத்தது. 200 மீற்றர் பிரீஸ்டைல் நீச்சலில் பிரான்ஸ் தங்கம் வென்றது. டைவிங் (10 மீற்றர் ஷின்ரைடு), பெண்கள் பளு தூக்குதல் (59 கிலோ பிரிவு), ஜிம்னாஸ்டிக் (ஆண்கள் பிரிவு) ஆகியவற்றில் சீனா தங்கம் வென்றது.

# காயத்தால் ராம்போல் வெளியேற்றம்



மேற்கிந்தியத்தீவுகளின் வேகப்பந்து வீச்சாளர் ரவி ராம்போல் காயம் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் அணியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். நியூசிலாந்திற்கெதிரான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியிலிருந்தே அவர் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நியூசிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய அவர் முதல் இனிங்ஸில் 2 விக்கெட்டுக்களையும், இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார். எனினும் போட்டியின் பின்னர் அவர் உபாதை குறித்துத் தெரிவித்தமையால் அவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

முதலாவது டெஸ்ட் போட்டியில் ரவி ராம்போல் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியபோதிலும் கேமர் ரோச், சுனில் நரைன் இருவருமே அவர்களின் முக்கிய பந்துவீச்சாளர்களாக அமைந்தனர். ஆகவே ரவி ராம்போலின் இழப்பு மேற்கிந்தியத் தீவுகளைப் பெரிதளவில் பாதிக்காது எனக் கருதப்படுகிறது.

ரவி ராம்போலுக்குப் பதிலாக மற்றொரு வேகப்பந்து வீச்சாளரான பிடல் எட்வேர்ட்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். 13 பேர் கொண்ட அணியிலேயே அவர் சேர்க்கப்பட்டுள்ளார். நியூசிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக் கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வியாழக்கிழமை ஆரம்பிக்கிறது.

அறிவிக்கப்பட்டுள்ள 13 பேர் அணி:

கிறிஸ் கெயில், கொரான் பவல், அட்ரியன் பரம், அஸட் ∴புடாடின், ஷிவ்நரின் சந்தர்போல், மார்லன் சாமுவேல்ஸ், நர்சிங் டியோநரைன், டெனேஷ் ராம்டின், டரன் சமி, ரீனோ பெஸ்ட், பிடல் எட்வேர்ட்ஸ், கேமர் ரோச், சுனில் நரைன்.

# நாளை இரண்டாவது டெஸ்ட்

(லண்டன்)

தென்னாபிரிக்கா,இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே, முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற முன்னிலை வகிக்கும் தென்னாபிரிக்க அணி இப்போட்டியிலும் வெல்லும் பட்சத்தில் டெஸ்ட் தரப்படுத்தலில் முதல் நிலைக்கு முன்னேறும் அரிய வாய்ப்பு ஏற்படும். இத்தொடரில் இரண்டு போட்டிகளையும் வெல்லும் பட்சத்திலேயே இங்கிலாந்து அணி தொடர்ந்தும் முதல் நிலையைத் தக்கவைத்துக்கொள்ள முடியும். இந்த வகையில் இப்போட்டி முக்கியத்துவம் மிக்கதமாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆவரங்கால் இந்து - மத்தி இன்று பலப்பரீட்சை



ஆவரங்கால் மத்தி



ஆவரங்கால் இந்து இளைஞர்

(மட்டுவில்)

வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரின் இன்றைய இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதவுள்ளது.

கைதடி மத்திய வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 53ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாகவும், தென்மராட்சி ரீதியாகவும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகின்றது.

வடமாகாண ரீதியாக நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய அணி மோதியது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் மத்திய அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் புத்தூர் கலைமதி அணியும் மோதின. இதில் ஆரம்பத்தில் இரு அணிகளும் பலமான முறையில் மோதிக் கொண்டன. இருப்பினும் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி தமது வேகமான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி கலைமதி அணியை நெருக்கடிக்கு உள்ளாக்கியது. இறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தென்மராட்சி ரீதியாக நடத்தப்பட்ட அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும் மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதின. இரு அணிகளும் பலமான முறையில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதியமை கரப்பந்தாட்ட இரசிகர்களை பேரானந்தத்தில் ஆழ்த்தியது. இறுதியில் மட்டுவில் மோகனதாஸ் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ம்ற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் நாவற்குழி மறவன்புலோ அம்பிகை அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி அணி மோதியது. இதில் நாவற்குழி மறவன்புலோ அம்பிக்கை அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளதாகவும், தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (118)

## விளையாட்டுச் செய்திகள்

## சிவானந்தன் வித்தியாதரன் சதுரங்கத்தில் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சதுரங்கச் சம்மேளனத்தினால் அண்மையில் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடாத்தப்பட்ட ருவென்ரி 20 விரைவு நகர்த்தல் சதுரங்கப் போட்டியில் சிவானந்தன் வித்தியாதரன் சம்பியனாகத் தெரிவானார்.

மாவட்ட ரீதியில் திறந்த போட்டியாக நடைபெற்ற இப்போட்டியில் ஏறத்தாழ 120 போட்டியாளர்கள் கலந்து கொண்டதுடன் தென்னிலங்கையிலிருந்து ஒரு போட்டியாளரும் பங்குபற்றியிருந்தார்.

7 சுற்றுக்களைக்கொண்டதாக நடைபெற்ற இப்போட்டியில் அனைத்து சுற்றுக்களிலும் வெற்றிவாகை சூடிய வித்தியாதரன் கிண்ணத்தைச்சுவீகரித்தார். இவர் வடமாகாண விளையாட்டத்திணைக்களத்தில் நிகழ்ச்சித் திட் உதவியாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

இப்போட்டியின் விருந்தினராக எழுத்தாளர் அகளங்கன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இப்போட்டியானது சுவிஸ் சதுரங்க சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த விரைவு நகர்த்தல் சதுரங்கப் போட்டி மாணவர்களை வேகமாகச் செயற்பட வைக்கத் துணைபுரியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

## சென் ஜோன்ஸ் கல்லூரி அபாரமான வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 27 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த 13ஆம் திகதி சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 37.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கௌசிகரன் 28, பிரிசங்கர் 22, துவாரகசீலன் 16, மிதர்சன் 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீப் நான்கு, நிரோஜன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 129 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி 42.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிரோஜன் 40, பிரதீப் 13, சஜீவன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் துவாரகசீலன், லோகதீஸ்வர் தலா இரண்டு, கனமிர்தன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதேவேளை, இப்பிரிவுக்கான இரண்டாவது சுற்றுப் போட்டிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## செனி. பற்றிக்ஸ் வெற்றி


(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான .ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டி ஒன்று அண்மையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 29 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. ஜீவன் மட்டுமே 14 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய எந்தவொரு துடுப்பாட்ட வீரரும் இரட்டை இலக்கைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் அஜிபன் 10 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், கொலின் எட்டு ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 11 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் நிலோஜன் இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும், டானியல் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் டிலக்சன், சஜீபன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். (42, எஸ்.பி.)'



வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடப்பாண்டு நடைபெற்ற மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்களுக்கான குழுப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்ட கிளிநொச்சி மகாவித்தியாலய அணியினரையும், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியவலன், ஆசிரியர், பயிற்றுநர் ஆகியோரைக் காணலாம்.

## யாழ். இந்து அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)



துவாரகன்

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அபாரமான வெற்றிபெற்றது.

15 வயதுப் பிரிவிற்கான துடுப்பாட்டப்போட்டி ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ். இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதிக்கொண்டன. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கமைய துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து 24.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் சுஜீவன் 20 ஓட்டங்களையும், சஜீபன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் துவாரகன் 8.4 ஓவர்கள் பந்துவீசி 24ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். ராகுலன், பானுகோபன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

98 என்னும் வெற்றிஇலக்கு நோக்கித்துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 16.1 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டை மாத்திரம் இழந்து 98 ஓட்டங்களைப்பெற்று 8 விக்கெட்டினால்வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் துவாரகன் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும்,உதயன் ஆட்டமிழக்காமல் ' 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்..

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் சஜீபன் 2 இலக்குகளைக் கைப்பற்றினர். எதிர்கொண்ட நான்கு போட்டிகளிலும் வெற்றிபெற்ற யாழ்.இந்துக்கல்லூரி .அணி அடுத்தசுற்றுக்குத் தெரிவாகியுள்ளது. (93)

வடக்கு மாணவர்களின் கல்வி குறிப்பான வளர்ச்சியை எட்ட முடியாமற் போயிருப்பது பற்றி கல்வித்துறை சார்ந்த அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒப்பீட்டளவில் ஏனைய மாவட்டங்களை விட, வட மாகாண பாடசாலைகளின் மற்றும் மாணவர்கள் முறையாகப் பயன்படுத்தாமை ஒரு காரணம் என கூறப்படுகிறது. அதேசமயம், போர்சூழலிலிருந்து மீண்டுவந்துள்ள மக்கள் எதிர்கொள்ளும் சமகால நெருக்கடிகளும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

மறுபுறத்தே கற்றற் செயற்பாடுகளை இலகுவாக்கவென உலக மட்டத்தில் வளர்ந்திருக்கும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை எமது மாணவர்கள் உள்வாங்கத் தவறியமையும், வெளிநாட்டு பண உழைப்புக்கள் மீதான ஆர்வங்களும் மாணவர்களின் கல்வியில் பெரும் மேட்டுக்குடி மக்களின் மாறிவரும் வாழ்வு மேம்பாட்டுக்கான சிறந்த வழிமுறையாக உணரப்பட்டதன் பின்னர், போர் நெருக்கடிகளை பயன்படுத்தி, பிறநாடுகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்பிவைக்கும் நடைமுறை இந்த கல்வி மீதான ஆர்வங்களை வெகுவாக பாதித்திருக்கின்றது.

தனது மகனை சிறந்த கல்விமானாக வளர்த்தெடுப்பது, உயர்ந்த ஊதியத்துடனான அரச உத்தியோகத்துக்கு வழிசமைக்குமென்ற போருக்கு முந்திய காலச் சூழல், இப்போது தலைகீழாக மாறியிருக்கிறது. இதன் விளைவு குறிப்பிட்ட பாடங்களை கற்பதற்காக வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். நகரை நோக்கி வரவேண்டியுள்ளது. இதனையொட்டி எதிர்கொள்ளும் சிரமங்களும் இம் மாணவர்களின் கல்வி முன்னெடுப்புகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இதனைவிட, போருக்குப் பிந்திய நிலைமையில், கல்வியை சீராக முன்னெடுப்பதில், பெற்றோர் பிள்ளைகளிடையே ஆர்வம் குறைந்துமுள்ளது. உயிர் மற்றும் உடமை இழப்புக்கள், இயல்பு வாழ்வை நோக்கி மீண்டெழுவதில்

# வடக்கின் கற்றல் செயற்பாடுகளில் தேக்கநிலை: - சில அவதானிப்புக்கள்



- சாலையூரான் -

கல்வி வளர்ச்சிக்கென கூடுதல் வளங்களை அரசு ஒதுக்கீடு செய்யும் போதிலும், மாணவர்களின் கல்வி நிலையில் போதிய முன்னேற்றங்களை இனங்காணமுடியாத நிலை குறித்து அதிகாரிகள் மட்டத்தில் மட்டுமன்றி கல்விமான்கள், நலன்விரும்பிகள் மட்டத்திலும் இது பிரதான விடயமாக கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கிறது.

அண்மையில் யாழ். பொதுநூலகத்தில் கல்விச் சமூகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலிலும் இந்த விடயம் பிரதான பேசுபொருளாக ஆராயப்பட்டிருக்கிறது.

குறிப்பாக போர்ச் சூழலிலும் அதற்கு முன்னரும் இந்தளவுக்கு வள வாய்ப்புக்களை யாழ்.கல்விச்சமூகம் கொண்டிருக்காத நிலையிலும், பாராட்டத்தக்கதான கற்றல் செயற்பாடுகளையும் பெறுபேறுகளையும் வடக்கு மாணவர்கள் கொண்டிருந்தனர். தற்போதைய அமைதியான சூழலில் இக்கல்வி நிலை ஏன் வீழ்ச்சி கண்டிருக்கிறது என்கிற விடயம் பல வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இன்று கிடைத்திருக்கும் வளவாய்ப்புக்களை இத்துறை சார்ந்த அதிகாரிகள், ஆசிரியர்கள் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

உண்மையில், கல்வியில் ஏற்பட்டிருக்கும் இந்தத் தேக்க நிலையை கடந்த கால நிலைமைகளுடன் பொருத்திப்பார்க்க முடியாதளவிற்கு, புதிய சமூக நிலைமைகள் இதில் பிரதான பங்கை வகிக்கின்றன.



குறிப்பாக, வெளிநாடுகளுக்கு இளைஞர்கள் புலம்பெயரும் நிலை ஏற்பட்டமையும் இதையொட்டிய மிகை வருமான உழைப்புக்களை, எமது மக்கள் ஈட்டிக்கொள்ளும் வாய்ப்புக்கள் கிட்டியிருப்பதும் முழுமையான சீரான கல்வி மீதான ஆர்வங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்தநிலை விசேடமாக, யாழ். அவ்வாறான கூடுதல் வருமானத்துக்கு, கல்வியில் சிரத்தை காண்பிக்க வேண்டிய தேவை இப்போது மாணவரால் மட்டுமன்றி பெற்றோராலும் மறுதலிக்கப்பட்டிருப்பதாகும்.

இதில் பேசப்படாது மறை பொருளாக இருக்கும் மற்றொரு விடயம், நிறைவேற்றுத் தரத்திலிருக்கும் எமது அரச அதிகாரிகள் தமக்கான நிர்வாக மேலாண்மை குறித்து திருப்தி கொள்ளும் மனநிலையை இழந்து இருப்பதாகும். கா்ரணம் இனத்துவ அரசியலால் கூறுபட்டு சிந்திக்கும் நிலை குறிப்பாக யாழ். மேட்டுக் குடிகளின் மத்தியில் தேசிய இனத்துவ உணர்வாக வளர்த்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், தாம் எதிர்பார்க்கும் தமிழ் தேசிய அரசியல் அதிகாரம் கைவரப்பெறாத நிலையில், தமது அரச நிர்வாகப் பணியில் எதிர்மறை மனோபாவமுடனிருக்க இந்த அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதாகும்.

தமிழ்த் தேசிய அரசியல் புலிகளுடன் பொருத்திப் பார்க்கப்படுகின்ற அச்சம் கலந்த சூழல் போருக்குப் பின்னரும் தொடர, இந்த நிலமைகளும் காரணமாகும்.

கற்பித்தல் நடவடிக்கைகளின் சமகால நிலைமைக்கு வருவோம். ஆசிரியர்கள் மட்டத்தில் இதனை கௌரவமான வருமானம் தரும் ஒரு தொழில் முறையாக அன்றி, சமூகப் பணியாக நோக்கும் நிலை ஏறத்தாழ மறுதலிக்கப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்பாட்டின் மேம்பாட்டுக்காக முன்னெடுக்கும் உயர் கல்வி, மற்றும் பதவி உயர்வு நோக்கிய ஆர்வங்கள் கூட தமக்கான தொழில் மேம்பாடு என்ற நோக்கிலேயே அன்றி சமூகப் பணி நோக்கில் இல்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

மாணவர்கள் கல்வித் தேவையை முன்னிலைப்படுத்தி தமக்கான பாடசாலைகளை தேர்வு செய்வதற்குப் பதில், தமக்கு வசதியான பாடசாலைகளை நோக்கி ஆசிரியர்கள் நகர முற்படுகின்றனர். தமது நோக்கங்களை, அடைவதற்காக அதிகாரிகளை மட்டுமன்றி அரசியல்வாதிகளையும் நிர்ப்பந்திக்கும் தற்போதைய போக்குகள் குறிப்பாக போருக்குப் பின்னர், கூடுதலாக அவதானிக்கப் பட்டுள்ளன.

இதனால், நூற்றுக்கணக்கான மாணவர்கள், தாம் கற்கும் பாடத்திற்கான ஆசிரியரை தேடி வெளிமாவட்ட பாடசாலைகளை நோக்கி நகர்கின்றனர். இன்று பின்தங்கிய மாவட்ட மாணவர்களுக்காக வெட்டுப்புள்ளிகள் அரசினால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற போதும், க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர மாணவர்கள் எதிர்கொள்ளும் இடைத்தடங்கல்கள் தம் பிள்ளைகளின் கல்வி மீதான ஆர்வங்களை இரண்டாம் பட்சமாக்கியிருக்கின்றன.

இது ஒருபுறமிருக்க, கல்வியின் பின்னரான தமது தொழில் வாய்ப்புக்கு இக்கல்வி நேரடியாக உதவும் தன்மை இல்லாதிருப்பதும் ஆர்வமின்மைக்கு மற்றொரு காரணமாகும்.

வறுமை மற்றும் போரின் பாதிப்பு காரணமாக கல்வியை இடைநடுவில் விட்டு தொழிலொன்றுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்படுவதும், பெற்றுக் கொண்ட கல்வியுடன் தொடர்புபட்ட தொழிலொன்றை அவர்கள் வாழும் இடத்திலேயே தேடிக்கொள்ள முடியாதிருப்பதும், படிப்புக்கேற்ற கூடுதல் வருமான உழைப்பை உள்ளூர் தொழிற் துறைகள் வழங்க முன்வராதிருப்பதும், மாணவர்களின் கல்வி மீதான ஆர்வங்களில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

பாடசாலை மட்டத்தில், பெற்றோருக்கும் ஆசிரியருக்குமிடையே அவசியம் இருக்க வேண்டிய கல்வி மேம்பாடு குறித்த கருத்துப்பரிமாற்றங்கள் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டிருப்பதும் மாணவர்களின் கல்வி மீதான ஆர்வங்களை பாதித்திருக்கின்றன.

மொத்தத்தில், பாடசாலைக்கு வெளியே கல்வியின் பின்னரான வாழ்க்கை குறித்த எதிர்பார்ப்புக்கள் மாணவர்களது கல்வியின் அவசியத்தை மட்டுப்படுத்தியிருக்கும் அதேவேளை, கல்விச் சமூகம், கற்றல் விடயத்தில், பெற்றோர்களுடன் கொண்டிருக்க வேண்டிய அவசியமான தொடர்பாடலை இழந்திருப்பதும் மாணவர்களின் எதிர்கால கல்வி மீதான ஆர்வங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

மிக நீண்டகாலமாக கிராமிய மட்டத்தில் சமூகக் குழுக்கள் மட்டத்தில் நிலவிவந்த நெருக்கமான உறவுகள் போருக்குப் பிந்திய சூழலில் சிதைவடைந்திருப்பது மட்டுமன்றி, தொழில் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக குடும்ப உறவுகள் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இடம்பெயர்ந்திருப்பதும், சமூகத்திலிருக்கும் கற்றோர்கள் கூட்டாக இணைந்து தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருப்பதும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை வெகுவாக பாதித்திருக்கின்றன.

இதற்கான சரியான தீர்வைக் காண்பதென்பது, பாடசாலைச் சமூகமும் பெற்றோர் மற்றும் சமூக அமைப்புக்களும் ஏற்படுத்திக் கொள்ளும் சீரான அமைப்பு ரீதியான உறவிலும், செயற்பாடுகளிலுமே தங்கியிருக்கிறது என்பதை மட்டும் இவ்விடத்தில் கூறிக்கொள்வது பொருத்தமானது.

## முத்துக் கதை



பேக்கரிக் கடை வைத்திருந்த ஒருவருக்கு, கடைக்கு வெண்ணெய் சப்ளை செய்பவர் மீது வெகுநாட்களாக ஒரு சந்தேகம் இருந்தது. தன்னை அவர் ஏமாற்றுகிறாரோ என்று எண்ணிக் கொண்டேயிருந்தார். அவர் தரும் வெண்ணெய் எடை குறைவாக இருப்பதாக நினைத்தார்.

ஒருவழியாகத் தீர்மானம் செய்து அவர்மீது வழக்கு தொடுப்பது என்று முடிவு செய்தார்.

நீதிபதியின் முன்பு, வெண்ணெய் வியாபாரி கொடுத்த வெண்ணெய்ப் பொட்டலத்தை எடை போட்டுக் காட்டினார் -

"பாருங்கள், நீதிபதியவர்களே, 450 கிராம்தான் இருக்கிறது. 500 கிராம் என்று சொல்லி எனக்கு இதைத் தருகிறார் இந்த வியாபாரி. இப்படிப் பலமுறை இவர் ஏமாற்றியிருக்கிறார். இதனால் இவருக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும்" என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

நீதிபதி வெண்ணெய் வியாபாரியைப் பார்த்து, "என்ன சொல்கிறீர்கள்? ஒவ்வொரு முறையும் 50 கிராம் குறைவாகத் தருவது நியாயமா?" என்று கேட்டார்.

அதற்கு வெண்ணெய் வியாபாரி, "ஐயா, என்னிடம் 500 கிராம் எடைக் கல் கிடையாது. அதனால், 500 கிராம் எடையுள்ள பொருள் ஏதேனும் ஒன்றை எடைக்கல்லுக்குப் பதிலாக பயன்படுத்துவேன். எப்போதும் இவர் கடையில்தான் பாண் வாங்குவேன். அந்தப் பாண் பொதிசெய்யப்பட்ட பேப்பரின் வெளிப்புறத்தில் 500 கிராம் என்று எழுதப்பட்டிருப்பதை நம்பி, எடைக்கல்லுக்குப் பதிலாக தராசில் இவரது பாணைப் பயன்படுத்துவேன். இப்போது பாருங்கள்... இவரது பாணும் வெண்ணெயும் சம எடையாக இருக்கும்..." என்று கூறியபடி அதை நிறுத்துக் காட்டினார்.

இரண்டின் எடையும் சமமாக இருந்தது.

பேக்கரிக்காரர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு, மனம் திருந்தினார்.

# சினிமா சினிமா



இன்றைய திகதியில் உலகிலேயே அதிகச் சம்பளம் பெறும் நடிகை என்ற பெயரைப் பெற்றிருக்கிறார் கொலம்பியாவைச் சேர்ந்த சோ.ஃ.பியா வெர்கரா. 'modern family' என்ற டி.வி. தொடர் மூலம் உலகம் முழுவதும் ஏராளமான இரசிகர்களைக் கவர்ந்த சோ.ஃ. பியாவின் வருமானம், 2011 முதல் 2012 ஜூன் வரையிலான காலகட்டத்தில் 19 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என ஃ.போர்ப்ஸ் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இது தவிர கருத்துக்கணிப்பு ஒன்றில் "ஆண்களால் அதிகம் விரும்பப்படும் அழகி" என்ற சிறப்பையும் பெற்றிருக்கிறார்... இருபத்து இரண்டு வயது இளம்பெண் போல தோற்றமளிக்கும் இந்த 40 வயது நடிகை.



தனது பெற்றோருடன் அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்றார் அமலாபால். தங்களது உறவினர்களைச் சந்திக்கவும் ஓய்வெடுப்பதற்காகவும் தான் அங்கு சென்றதாக அமலாபால் கூறி வருகிறார். ஆனால் ஹேர் ஸ்டைலை மாற்றுவதற்காகவும் மேனி எழிலைக் கூட்டுவதற்காக சிறிய அளவில் சிலிகான் சேர்ஜரி செய்வதற்காகவும்தான் அமெரிக்கா சென்றதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



கே.வி ஆனந்த் இயக்கத்தில் ஒட்டிப் பிறந்த இரட்டையர்களாக அகிலன், விமலன் என்ற கதாபாத்திரங்களில் - சூர்யா இரு வேடங்களில் நடிக்கும் "மாற்றான்" திரைப்படம் இதுவரை எடுக்கப்பட்ட இந்தியத் திரைப்படங்களில் தொழில்நுட்பத்தின் உச்சம் தொட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இரட்டை வேடங்களில் நடிக்க சுமார் 2000 தடவைக்கு மேல் சூர்யா மாறி மாறி நடித்திருக்கிறாராம். கே.வி.ஆனந்தின் முன்னைய படங்களைப் போலவே மாற்றானும் ஆங்கிலப் படமொன்றின் தழுவல்தான். தழுவல்கள் என்றாலும் "அயன்", "கோ" படங்களைத் தமிழுக்கு ஏற்றவாறு சுவாரஸ்யமாகக் காட்டியதில் வெற்றி கண்டதால் "மாற்றான்" படத்தின் ஒட்டுமொத்த வியாபாரமும் ரூபா 80 கோடியைத் தாண்டியுள்ளது.



மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்ற கோட்சேயின் வாழ்க்கை வரலாறு மலையாளத்தில் திரைப்பட மாகிறது. பிரபல இயக்குநர் ஷாஜி கைலாஸ் இயக்கும் இந்தப் படத்தில் பிருத்விராஜ், கோட்சேவாக நடிக்கிறார். காந்தியைக் கொல்வது என முடிவெடுத்துவிட்ட கோட்சே, அந்த கொடூரமான குற்றச் செயலை நிகழ்த்துவதற்கு முதல் நாள் படும் அவஸ்தை, மனப்போராட்டம் ஆகியவற்றுக்கே அதிக முக்கியத்துவம் அளித்து இந்தப் படத்தை உருவாக்குகிறோம் என்கிறார் ஷாஜி கைலாஸ்.

# இந்த ஆவணியில்...

## ஆவணி மாதம் பிரபலங்களின் பிறந்த தினங்கள்







04 - பராக் ஒபாமா (அமெரிக்க ஜனாதிபதி)
04 - கிஷோர் குமார் (ஹிந்தி நடிகர், பின்னணிப் பாடகர்)
05 - கிருபானந்த வாரியார் (பக்திச் சொற்பொழிவாளர்)
07 - எம்.எஸ். சுவாமிநாதன் (விஞ்ஞானி)
13 - ஸ்ரீதேவி (தமிழ், ஹிந்தி நடிகை)
13 - ஃபிடல் காஸ்ட்ரோ (கியூபா முன்னாள் ஜனாதிபதி)
15 - நெப்போலியன் பொனபார்ட் (பிரான்ஸ் அரசர்)
15 - சேர் வோல்டர் ஸ்கொட் (ஆங்கில எழுத்தாளர்)
15 - ஸ்ரீஅரவிந்தர் (தத்துவஞானி)
17 - கே.பி.சுந்தராம்பாள் (பாடகி)
17 - வி.எஸ்.நைபால் (நோபல் பரிசுபெற்ற எழுத்தாளர்)
19 - ஆர்வில் ரைட் (ஆகாய விமானம் கண்டுபிடிப்பாளர்)
20 - ராஜீவ் காந்தி (முன்னாள் இந்தியப் பிரதமர்)
21 - ப.ஜீவானந்தம் (கம்யூனிஸ சிந்தனையாளர்)
26 - அன்னை தெரேசா (சமூக சேவகி)
27 - ஜோர்ஜ் பெர்னார்ட்ஷோ (ஆங்கில நாடக ஆசிரியர்)

## நினைவு தினங்கள்



07 - ரவீந்திரநாத் தாகூர் (கவிஞர்)
18 - சுபாஷ் சந்திர போஸ் (சுதந்திரப் போராட்ட வீரர்)
19 - ஜேம்ஸ் வோட் (நீராவி என்ஜின் கண்டுபிடித்தவர்)
21 - பிஸ்மில்லா கான் (ஷெனாய் கலைஞர்)
26 - எஸ்.எஸ்.வாசன் (திரைப்படத் தயாரிப்பாளர், பத்திரிகையாளர்)
30 - என்.எஸ்.கிருஷ்ணன் (நகைச்சுவை நடிகர், தயாரிப்பாளர்)

## முக்கிய தினங்கள்

1-8 - தாய்ப்பால் வாரம்
06 - ஜப்பான் மீது அணுகுண்டு வீசப்பட்ட நாள்
12 - உலக இளைஞர்கள் தினம்
13 - சர்வதேச இடதுகைப் பழக்கமுள்ளவர்கள் தினம்
14 - பாகிஸ்தானின் சுதந்திர தினம்
15 - இந்தியாவின் சுதந்திர தினம்
15 - உழைக்கும் பெண்கள் தினம்
19 - உலக மனிதநேய தினம்
19 - உலகப் புகைப்பட தினம்
30 - சிறுதொழில் தினம்





## முக்கிய நிகழ்வுகள்

**01-08-1971 - அப்போலோ விண்வெளிக் கலம் நிலவில் இறங்கி ஒரு முக்கிய பாறையைக் கண்டுபிடித்த நாள். இந்தப் பாறையின் மூலம் நிலவின் ஆரம்ப காலத்தைக் கண்டுபிடிக்க இயலும் என்று விஞ்ஞானிகள் கருதினர்.**

**05-08-1962 - பிரபல ஹொலிவுட் நடிகை மர்லின் மன்றோ மர்மமான முறையில் இறந்தார்.**

**06-08-1945 - அமெரிக்க விமானப்படை விமானம் ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின் மீது முதல் அணுகுண்டை வீசியது. (மூன்று நாட்களுக்குப் பிறகு (09-08-1945) நாகசாகி நகரத்தின் மீது மற்றொரு அணுகுண்டு வீசப்பட்டது.**

**15-8-1947 - வெள்ளையர் ஆட்சியிலிருந்து இந்தியா சுதந்திரம் பெற்றது. முதல் பிரதமராக ஜவஹர்லால் நேருவும் முதல் ஜனாதிபதியாக டாக்டர் ராஜேந்திர பிரசாத்தும் பொறுப்பேற்றனர்.**

**31-08-1997 -பிரித்தானிய இளவரசி (இளவரசர் சாள்ஸின் மனைவி) டயானா ஒரு கார் விபத்தில் காலமானார்.**

# ஆனந்தப்பட ஆயிரம் வழிகள்!



கவலைப்படுவோரில் ஒரு வகை உண்டு. பெரிய அளவில் வெற்றி கிடைத்தால்தான் மகிழ்வார்கள். சிறுசிறு வெற்றியைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.

ஒருவன் ஓட்டப் போட்டியில் ஒலிம்பிக்கில் வெற்றி பெற வேண்டும் என்றால் பல படிகளைத் தாண்டித்தான் வெற்றி அடைய முடியும்.

தன் ஊரில் வென்று, பின் மாவட்டம், மாகாணம், தேசியப் போட்டி என ஒவ்வொரு படிகளாக ஏறி, இறுதியில் பல்வேறு நாடுகளோடு போட்டியிட்டு ஒலிம்பிக்கில் வெற்றி பெற வேண்டும்.

ஒலிம்பிக் வெற்றியில் பெறும் அதே அளவு அல்லது அதைவிட அதிக அளவு மகிழ்ச்சியைத் தன் ஊரில் வென்ற போதும் அவன் உணர வேண்டும்.

மகிழ்ச்சிக்கு வயது ஒரு தடையாக இருக்கவே கூடாது. குழந்தைகள் துள்ளிக் குதித்துத் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். பெரியவர்களும் ஏதாவது ஒரு வகையில் வெளிப்படுத்துவது அவசியம்.

பேராசிரியர் ஹெர்பர்ட் சாள்ஸ் பிரவுண் ஓர் அமெரிக்க இரசாயனவியல் விஞ்ஞானி. 1979 ஆம் ஆண்டு நோபல் பரிசினைப் பெற்றவர்.

ஆயிரக்கணக்கில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருந்தாலும், ஒவ்வொரு கட்டுரையும் பிரசுரமாகும் போது ஏதோ முதல் கட்டுரையைப் பிரசுரித்த மாணவனைப் போல மகிழ்வார்.

ஒவ்வொரு ஆண்டும் தம் நண்பர்களுக்கும், தம் பழைய மாணவர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்து அட்டை அனுப்பும் போது அந்த ஆண்டு அவர் பெற்ற வெற்றிகளையும் தெரிவித்து மகிழ்வார்.

மாறாக, மற்றவர்கள் கஷ்டப் பட்டால் சந்தோஷப்படுபவர்களும் இந்த உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

"என் பிள்ளை மட்டுமல்ல, நன்றாகப் படிக்கும் எதிர் வீட்டுப் பிள்ளையும் பரீட்சையில் தோல்வி". என்றும், "எனக்கு மட்டுமல்ல என்னை விட அழகான என் தோழிக்கும் இன்னும் திருமணம் ஆகவில்லை" என்றும் எண்ணி மகிழும் அல்லது ஆறுதல் கொள்ளும் மனிதர்களை என்ன சொல்வது?

ஒருவர் ஒரு பழத்தை உண்டால் அது அவருக்கு மட்டுமே சந்தோஷம். ஆனால், ஒரு அம்மா சமைத்து அவளின் குழந்தை நன்றாக உண்டால் அது இருவருக்கும் மகிழ்ச்சி. அதுவே, அந்தக் குழந்தையின் பிறந்த நாளுக்குப் பலருக்கு விருந்திட்டால் அவளுக்கு ஆனந்தம்.

சந்தோஷத்தின் உச்சகட்டம் ஆனந்தம் ஆகும். தம் இசைக் கச்சேரியாலும், நல்ல நடனத்தாலும் பலரை சந்தோஷப்படுத்தி ஆனந்தம் கொள்ளும் கலைஞர்களும் இதில் அடங்குவர்.

தன் மனதுக்கு ஆறுதலாக இருப்பது கூட ஒருவகை சந்தோஷமே. அந்தப் பூங்காவில் நடைபாதையை ஒட்டி பல கொங்ரீட் இருக்கைகள் போடப்பட்டிருந்தன. அந்த இருக்கையில் படுத்திருந்த ஒருவர், தூக்கத்தில் புரண்டு நடைபாதையில் விழுந்த பின்னும் அயர்ந்து தூங்கினார்.

உடற்பயிற்சிக்காக நடந்து கொண்டிருந்தவர்கள் அவரைப் பார்த்து முகம் சுளித்து, விலகித் தங்கள் நடையைத் தொடர்ந்தனர். யாரும் அவரைக் கண்டு கொள்ளவில்லை. "ஆறு மணிக்கே சரக்கு அடித்து விட்டார் போலிருக்கிறது" என்று ஏளனமாகப் பேசிக்கொண்டனர்.

அப்போது அங்கே ஒரு பத்து வயதுச் சிறுமி தன் தம்பியோடு ஓடி விளையாடிக் கொண்டிருந்தாள். நடைபாதையில் வெறுந்தரையில் படுத்திருந்தவரைப் பார்த்து, "இவர் தூங்குகிறாரா? அல்லது இவருக்கு ஏதாவது ஆகியிருக்கா?" என்று சொல்லிக் கொண்டே அவரின் அருகில் போய் நின்றாள்.

மூச்சு ஏறி இறங்குவதைப் பார்த்துக் கொஞ்சம் நிம்மதி. தன் கையிலிருந்த தண்ணீர்ப் போத்தலில் இருந்த தண்ணீரைக் கொஞ்சம் முகத்தில் தெளித்தாள்.

கண் விழித்தவர், கீழே உருண்டு விழுந்ததை அறிந்து, மீண்டும் வாங்கில் நிம்மதியாகப் படுத்துக் கொண்டார். பார்த்த அவளுக்கும் ஒருவித நிம்மதியும் சந்தோஷமும்.

# உலகம் பிறந்தது எதனாலே?

**இந்த** உலகம் எப்படி உருவானது? நம்மைச் சுற்றியுள்ள கோள்களும் நட்சத்திரங்களும் எப்படிப் பிறந்தன? இந்தப் பிரபஞ்சம் உருவானது எப்படி?

நீண்டகாலமாக அறிவியல் இந்தக் கேள்விக்கு விடைகாண முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இதற்கான விடைகள் அவ்வப்போது கீற்றுப் போலத் தென்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றாலும் பிரபஞ்சத்தின் தோற்றம் பற்றி நமக்கு இன்னமும் ஏகப்பட்ட விடை தெரியாத கேள்விகள் உள்ளன.

ஒரு பெருவெடிப்பு என்பதன் மூலமாகத்தான் இப்போதைய பிரபஞ்சம் உருவாகியிருக்க வேண்டும் என்ற கருத்தைக் கிட்டத்தட்ட அனைத்து விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். என்றாலும் அந்தப் பெருவெடிப்பு நிகழ்ந்த கணத்தைப் பற்றி அறிவியல்ரீதியாக ஒன்றையும் சொல்லமுடியாத நிலையில் இப்போதும் இருக்கிறோம். ஆனால்

அந்தக் கணத்துக்குச் சில விநாடிகள் கழித்து, பிரபஞ்ச வெளியில் எக்கச்சக்கமாக வெப்பத்தின் ஆற்றல் மட்டுமே விரவி இருந்திருக்கும். அங்கிருந்து எப்படி இத்தனை துகள்களும், அவற்றிலிருந்து இத்தனை அணுக்களும், அவற்றிலிருந்து இத்தனை தனிமங்களும், இன்று நாம் காணும் அனைத்தும் உருவாகின? முதலில் இந்தத் துகள்களின் அடிப்படைக் குணங்களான நிறையும் மின்னூட்டமும் எப்படித் தோன்றின?

மின்னூட்டம் எப்படி வந்திருக்கலாம் என்பதற்கு சில கோட்பாடுகள் உள்ளன. ஆனால் நிறை எப்படித் தோன்றியிருக்கக்கூடும் என்பதற்கு ஹிக்ஸ் கோட்பாடு ஒன்றுதான் இப்போதைக்கு அறிவார்ந்ததாக உள்ளது.

**அது என்ன ஹிக்ஸ் கோட்பாடு?**

பெருவெடிப்பை ஒட்டிய தருணத்தில் 'ஹிக்ஸ் போஸொன்கள்' என்ற துகள்கள் உருவாகி, பிரபஞ்ச வெளியை முழுமையாக நிறைத்திருக்க வேணடும். பிற துகள்கள் அடுத்துத் தோன்றியிருக்க வேண்டும். அவை ஹிக்ஸ் புலத்தில் நகர்ந்தபோது ஹிக்ஸ் போஸொன்களுடன் ஊடாடி, தமக்கான நிறையைப் பெற்றிருக்க வேண்டும்.

அதன்பின் இந்தத் துகள்கள் எல்லாம் ஒன்று கூடி, கொஞ்சம் கொஞ்சமாக அணுக்கள் தோன்றி, அவற்றிலிருந்து இன்று நாம் காணும் இந்தப் பிரபஞ்சப் பெருவெளி, நட்சத்திரங்கள், அண்டங்கள், கோளகள், தூசுகள் என அனைத்துமே தோன்றியிருக்க வேண்டும்.

அதாவது பிரபஞ்சத்தின் முதல் துகள் ஹிக்ஸ் போஸொன். அதிலிருந்துதான் எல்லாமே உருவாகியிருக்க வேண்டும்

**ஹிக்ஸ் போஸொன் என்றால்?**

அணுவின் உள்ளே புரோத்தன், நியூத்திரன், இலத்திரன் போன்ற அணுத் துகள்கள் இருப்பதாக நாம் பாடப் புத்தகத்தில் படித்துள்ளோம்.

இந்தத் துகள்களுக்கெல்லாம் அடிப்படையாக இரண்டு இயல்புகள் உண்டு. ஒன்று நிறை (mass), மற்றொன்று மின்னூட்டம் (charge).

நம் எல்லோருக்கும் தெரிந்த ஒரு விஷயம் ஒத்த மின்னூட்டம் உடைய இரு பொருள்கள் ஒன்றை ஒன்று விலக்கும் எதிரெதிர் மின்னூட்டம் உடைய இரு பொருள்கள் ஒன்றை ஒன்று ஈர்க்கும் என்பது. இது அடிப்படை விதிகளில் ஒன்று.

ஆனால் ஓர் அணுவின் உட்கருவில் ஒரே மின்னூட்டம் கொண்ட பல புரோத்தன்கள் உள்ளன. அவை ஒன்றை ஒன்று விலக்கி அல்லவா தள்ளவேண்டும்? ஆனால் அப்படியின்றி ஒன்றை ஒன்று இறுக்கிப் பிடித்தபடி ஒரே உட்கருவில் உள்ளனவே? இது எப்படிச் சாத்தியம்?

விஞ்ஞானிகள் இதனை விரிவாக ஆராய்ந்தனர். புரோத்தன், நியூத்திரன் ஆகியவையே அடிப்படைத துகள்களாக இல்லாதிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர். இவற்றுக்கும் அடிப்படையாக குவார்க்குகள் என்ற ஆறு துகள்கள் இருக்கவேண்டும் என்றும் அவற்றின் பல்வேறு கூட்டமைப்பே புரோத்தனாகவும் நியூத்திரனாகவும் ஆகியிருக்கவேண்டும் என்றும் முடிவெடுத்தனர்.

இந்தக் குவார்க்குகளுக்கு இடையே மிகவும் வலுவான ஒரு விசை இருக்கவேண்டும் என்ற அவர்கள், இதற்கு 'வலுவான உட்கரு விசை' (ஸ்ட்ரோங் நியூக்ளியர் ஃபோர்ஸ்) என்று பெயரிட்டனர்.

இதேபோல 'வலுவற்ற உட்கரு விசை' என்ற கருத்தாக்கமும் உருவானது. சில குறிப்பிட்ட கட்டங்களில் ஒரு நியூத்திரன் ஒரு புரோத்தனாக மாறுகிறது. வேறு சில கட்டங்களில் புரோத்தன் ஒன்று இலத்திரன் ஒன்றைக் கவ்விப் பிடித்து, நியூத்திரனாக உருவெடுக்கிறது. இதுபோன்ற மாற்றங்களுக்குக் காரணம் இந்த வலுவற்ற உட்கரு விசை.

ஆக, நமக்கு ஏற்கனவே தெரிந்த மின்காந்த விசை, ஈர்ப்பு விசை ஆகியவற்றோடு வலுவற்ற உட்கரு விசை, வலுவான உட்கரு விசை ஆகியவை சேர்ந்து மொத்தம் நான்கு அடிப்படை விசைகள் இருப்பதாக விஞ்ஞானிகள் பேசத் தொடங்கினர். இதைத்தான் ஸ்டாண்டர்ட் மொடல் என்று விஞ்ஞானிகள் சொல்லத் தொடங்கினர். இந்த விசைகள் பரவியிருப்பதை விசைப்புலங்கள் என்றும் அந்த விசைப்புலங்களை சில சில துகள்கள் உருவாக்குவதாகவும் சொல்லலாம். உதாரணமாக மின்காந்த விசைப்புலத்தை உருவாக்குவது போட்டன்கள் என்ற ஒளித்துகள்கள்தான் எனலாம்.

அப்படியானால் வலுவான உட்கரு விசை, வலுவற்ற உட்கரு விசை ஆகியவற்றை உருவாக்குவதிலும் ஏதேனும் துகள்கள் இருக்குமோ?

அப்படிப்பட்ட ஒரு கோட்பாடு உருவாக்கப்பட்டது. வலுவான உட்கரு விசையை உருவாக்கக் கூடிய துகள்களுக்கு குளுவான் என்றும் வலுவற்ற உட்கரு விசையை உருவாக்கும் துகள்களுக்கு டபிள்யூ போஸொன், இஸட் போஸொன் என்றும் பெயர் தரப்பட்டது.

பல்வேறு துகள்கள் இருக்கின்றன என்ற உண்மை இன்னொரு கேள்விக்கு இட்டுச் சென்றது. பல்வேறு துகள்களுக்கும் வெவ்வேறு நிறை எப்படி ஏற்படுகிறது? அவற்றுக்கு உள்ளே என்ன தான் புகுந்துகொண்டு ஒன்றை அதிக நிறையுடனும், ஒன்றை மிகக் குறைந்த நிறையுடனும், இன்னொன்றை நிறையே இல்லாமலுமாக ஆக்குகிறது?

1963இல் ஆறு விஞ்ஞானிகள் இது குறித்து விரிவான கோட்பாடு ஒன்றை முன்வைத்தனர். அந்த ஆறு பேரில் ஒருவர்தான் பீட்டர் ஹிக்ஸ்.

இவர்கள் முன் வைத்த கோட்பாடு, துகள்களின் நிறை பற்றி நாம் அதுவரை வைத்திருந்த கருத்தை ஒட்டுமொத்தமாக மாற்றிப்போட்டது. ஒரு துகளுக்கு உள்ளே இருக்கும் ஏதோ ஒன்று அதன் நிறையைத் தருகிறது என்று யோசிப்பதைவிட, ஒரு துகள் ஒரு விசைப்புலத்தில் செல்லும்போது அதன்மீது உருவாகும் வினைதான் அதன் நிறையைத் தருகிறது என்பதாக ஏன் சிந்திக்கக்கூடாது என்றனர் இவர்கள்.

இப்படிப் பார்க்கலாம். ஹிக்ஸ் புலத்தில் ஒரு துகள் மிக எளிதாக, வேகமாகச் செல்கிறது என்றால் அதன் நிறை குறைவாக இருக்கவேண்டும். இன்னொரு துகள் சிரமப்பட்டு மெதுவாக நீந்திச் செல்கிறது என்றால் அதன் நிறை அதிகமாக இருக்க வேண்டும்.


அதெல்லாம் சரி, உண்மையிலேயே ஹிக்ஸ் போஸொன் என்ற துகள் ஒன்று உள்ளதா? அதனைக் கண்டுபிடிக்க முடியுமா?

இதற்கு முன்னர் பரிசோதனைச் சாலையில் சில துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதேபோல இப்போதும் சில பரிசோதனைகளைச் செய்தால் ஹிக்ஸ போஸான் என்ற ஒன்று இருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடித்து விடலாமே?

இதில் என்ன சுவாரஸ்யம் என்றால், ஹிக்ஸ் கோட்பாடு உருவானது 1964இல். அதற்குப்பின், 1970-களில்தான் வலுவான உட்கரு விசை முன்மொழியப்பட்டது. ஆனால் அதன் விளைவாகச் சிந்திக்கப்பட்ட துகள்கள் எல்லாம் கண்டறியப் பட்டுவிட்டன. ஹிக்ஸ் போஸொன் துகள் மட்டும் கண்ணில் படவில்லை.

**அதற்கு ஒரு காரணம் இருந்தது.**

இந்தத் துகள்களையெல்லாம் கண்டுபிடிக்க வேண்டுமானால் அதிவேகத்தில் செல்லும் இரு அணுத் துகள்களை மோதவிடவேண்டும். அதன் விளைவாக உருவாகும் ஆற்றலில் இந்தத் துகள்கள் உடைந்து, நாம் எதிர்பார்க்கும் சில துகள்கள் கிட்டலாம்.



ஹிக்ஸ் போஸொனின் உள்ளார்ந்த ஆற்றல்-நிறை மிக மிக அதிகமானது. பிற துகள்களைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் இரண்டு இலத்திரன்களை அல்லது குறைந்த வேகத்தில் செல்லும் இரு புரோத்தன்களை மோதவிட்டால் போதுமானது. ஹிக்ஸ் போஸொனைக் கண்டறிய வேண்டுமானால் மிக அதிகமான வேகத்தில் இரு புரோத்தன்களை மோதவிட வேண்டியிருக்கும். இதனைச் சாத்தியப்படுத்த நிறையத் தொழில்நுட்ப மேம்பாடு தேவைப்பட்டது. இதன் விளைவாக உருவானதே சுவிஸ்சர்லாந்தின் செர்ன் ஆராய்ச்சிச் சாலையில் உள்ள பெரும் துகள் மோதற்களம்.

இந்த மோதற்களத்தில் இரண்டு புரோத்தன்களை அதிவேகத்தில் மோதச் செய்ய முடியும். ஆனால் பல்வேறு தொழில்நுட்ப இடைஞ்சல்கள் ஏற்பட்டுக்கொண்டே இருந்தன. பல்வேறு தொழில்நுட்பச் சிக்கல்களையும் தாண்டி, சென்ற ஆண்டில்தான் குறிப்பிட்ட வேகத்தை அடைய முடிந்தது.

அந்தச் சோதனைகளின்போது கிடைத்த தகவல்களை ஆராய்ந்ததில் கிட்டத்தட்ட ஹிக்ஸ் போஸொனைக் கண்டுபிடித்துவிட்டோம் என்று இரு விஞ்ஞானிக் குழுக்கள் 4 ஜூலை 2012 அறிவித்தனர்.


கிட்டத்தட்ட என்றால்? இன்னும் முழுமையாகச் சொல்ல முடியாது என்பது தான். அதாவது மேலும் சில சோதனைகள் தேவை. ஆனால் இதுவரை அறிந்ததிலிருந்து ஹிக்ஸ் போஸொன் போல ஒன்று இருப்பது உறுதி. அதாவது ஹக்ஸின் கோட்பாடு கிட்டத்தட்ட உறுதி.

ஆனால் இதுவே இறுதி கிடையாது. நாளை மேலும் சில கேள்விகள் எழலாம். அப்போது நாம் மேலும் சில புதிய கண்டுபிடிப்புகளை வெளியாக்கலாம்

ஆனால் சமீப காலத்தில், அதாவது கடந்த கால் நூற்றாண்டில் நிகழ்த்தப் பட்ட மிக முக்கியமான கண்டுபிடிப்பு இது என்று சொல்லலாம்.

– பத்ரி சேஷாத்ரி கட்டுரையிலிருந்து

## கடவுளைக் கண்டுபிடித்தார்களா?



ஹிக்ஸ் போஸொன் பற்றி ஒரு புத்தகம் எழுதிய லியான் லெடர்மேன் என்பவர் ஹிக்ஸ் போஸொனைக் கண்டு பிடிப்பதில் உள்ள சிரமத்தை வெளிப்படுத்த இந்தத் துகளை 'நாசமாய்ப்போன துகள்' என்று பொருள் பட 'கோட் டாம்ண்ட் பார்ட்டிகிள்' என்று எழுதியிருந்தார். ஆனால் அந்தப் புத்தகத்தின் பதிப்பாளர் அதனை 'கோட் பார்ட்டி கிள்' (கடவுள் துகள்) என்று மாற்றிவிட்டார்.

ஹிக்ஸ் உண்மையில் ஒரு நாத்திகர். அவருடைய கருத்தாக்கத்துக்கும் கடவுளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அவரும் பிற விஞ்ஞானிகளும் சொன்னாலும் பத்திரிகைகள் இன்றுவரை அதனைக் கேட்பதாகத் தெரியவில்லை. மீண்டும் மீண்டும் 'கடவுள் துகள்' என்றும், 'கடவுளைக் கண்டுபிடித்து விட்டார்கள்' என்றும் தப்பும் தவறுமாக எழுதிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

# சம்மேளனத்தின் புதிய நிர்வாகத்துடன் நிறுவனங்கள் தொடர்புகொள்ளவேண்டும்

## - தலைவர் அ.எமிலியாம்பிள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதனால் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளத்துடனேயே அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதன் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். மாவட்டத்தில் உள்ள 11 கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களில் மொத்தம் 118 சங்கங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்த அவர் அந்த சமாசங்களில் இருந்து சம்மேளனம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதில் தீவகம் தெற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் 12 சங்கங்களும் அதேபோல் வலிகாமம் வடக்கு சமாசத்தில் 10 சங்கங்களும், வலிதென்மேற்கு சமாசத்தில் 14 சங்கங்களும், வடமராட்சி வடக்கு சமாசத்தில் 14 சங்கங்களும், தென்மராட்சி சமாசத்தில் 10 சங்கங்களும், தீவகம் வடக்கு சமாசத்தில் 07 சங்கங்களும், வலிமேற்கு சமாசத்தில் 12 சங்கங் களும், வடமராட்சி கிழக்கு சமாசத்தில் 15 சங்கங்களும், யாழ். பிரதேச செயலக சமா சத்தில் 07 சங்கங்களும், காரை நகர் சமாசத்தில் 12 சங்கங்கள் நெடுந்தீவு சமாசத்தில் 05 சங்கங்களும், ஆக மொத்தம் 118 சங்கங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன. எனவும் தெரிவிததார். (பா)

# கறையான்புற்று கந்தசுவாமி ஆலய புனரமைப்பு துரித கதியில்

(சிகரம்)

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தென்மராட்சி மறவன்புலோ கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட கறையான்புற்று கந்தசுவாமி ஆலயத்தின் புனரமைப்பு வேலைகள் தற்போது விரைவாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த கறையான்புற்று கந்தசுவாமி ஆலயத்திற்கு புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற அடியவர்களின் உதவிகள் அதிக அளவில் கிடைத்து வருவதாகவும்,தற்போதும் அவர்களின் நிதியுதவிகளிலேயே இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆலயத்தின் பரிபாலன சபையின் செயலாளர் அருள். தவராசா தெரிவித்துள்ளார்.

இதன்படி கனடாவில் வசிக்கும் அப்பாக்குட்டி சண்முகநாதன் நான்கு இலட்சம் ரூபாவும், இத்தாலியில் வசித்துவரும் சுபாபதி கார்த்திகேசு ஒரு இலட்சம் ரூபாவும் மற்றும் இதே நாட்டில் வசித்து வரும் இரகுநாதன் சர்வேந்திரன் ஐம்பதினாயிரம் ரூபாவும் தற்போது நடைபெற்றுவரும் இந்த ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கென வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வளர்மதி சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டடமற்றும் கலையரங்க திறப்பு விழாவும் எதிர்வரும் 4ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிலைய தலைவர் க. அமுதலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் பிரதேச சபைச் செயலாளர் செல்வி து.தர்சினி பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் ஓய்வுபெற்ற இளைஞர் சேவை அதிகாரி செ.கார்த்திக் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நலன்பேணும் நட்புறவுக் கழக தலைவர் ப. செல்லத்துரை பனை தென்னை அபிவிருத்திச் சபை தலைவர் இ.பூபாலசிங்கம், சனசமுக நிலைய ஒன்றியங்களின் தலைவர், சி. கந்தசாமி சமூர்த்தி உத்தியோகத்தர் இ.சத்திய சீலன் கிராம உத்தியோகத்தர் ரவீந்திரன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வே. தபேந்திரன், ஓய்வு பெற்ற அதிபர் த. அப்புத்துரை கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி லலிதா மலர் முகுந்தன், வேல்ட் விஷன் திட்ட இணைப்பாளர் ஏ.ஜீ.ரெஜி னோல்ட், வெளிக்கள இணையம் ம.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். தொடர்ந்து பரிசில் வழங்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

# மீண்டும் அதிகரித்தது காற்றின்வேகம்

(ஜெயந்தி-சிகரம்)

இரண்டு வாரங்களாகக் குறைவடைந்து காணப்பட்ட காற்றின் வேகம் மீண்டும் அதிகரித் துள்ளது. இரண்டு வாரங்களாக மழையுடன் கூடிய காலநிலை மாற்றத்தினால் இரண்டு மாதங்களாக வீசிவந்த காற்றின் வேகம் சடுதியாகக் குறைவடைந்து காணப்பட்டது.

எனினும், ஆடி மாதம் பிறந்ததன் பின்னர் மீண்டும் தென்மராட்சி மற்றும் வடமராட்சி உட்பட வெட்டைவெளிப்பிரதேசங்களிலும், கடலினை அண்டிய பிரதேசங்களிலும் காற்றின் வேகம் அதிகரித்துள்ளது.

காற்றின் வேகம் அதிகரித்துள்ளதால் இந்தப் பகுதிகளில் ஆடி மழை பெய்யவில்லை எனவும், இதனால் ஆடி உழவினை தாம் மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த வைகாசி மாதம் வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலய விசாகத் திருவிழா வுடன் வீசத்தொடங்கிய சோளகக்காற்று, கடந்த இரண்டு மாதங்களாக மிக வேகமாக வீசிவந்தது. அத்துடன், இந்தக் காற்றின் தாக்கம் தென்மராட்சிப் பிரேதேசத்தில் அதிகளவில் அவதானிக்கக் கூடிய தாக இருந்தது.

நயினை நாகபூசணி அம்மன் ஆலய திரு விழாக்காலத்தில் மீண்டும் அதிக வேகத்துடன் வீசிய சோளகக்காற்றின் தாக்கம், இரண்டு வாரங் காளகக் குறைவடைந்து காணப்பட்டதுடன், வாடைக காற்று வீசி வந்தது. எனினும், தற்போது வாடைக் காற்று மாற்றமடைந்து ஆடிமாதக் காற்றாக அதிகரித்த வேகத்துடன் வீசி வருகின்றது.

தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பிரதே சங்கள் அதிகளவிலான வயல் வெளிகளைக் கொண்டுள்ளதாலேயும், கிராமங்களை அண்மித்த பகுதி களில் கடல் காணப்படுவதாலும், யாழ்ப் பாணத்தை விட இந்தப்பிரதேசங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காண்படுவதாக இந்தக்கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

# தொடர்பாடல் வசதியை இலகுபடுத்த யாழ். மாநகரசபை நடவடிக்கை

(கிரு-சிகரம்)



யாழ். மாநகர சபையின் உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் நடவடிக்கையை இலகுபடுத்த 200 புதிய மொபிற்றல் சிம்காட்டுகளை யாழ் மாநகர சபை வாங்கியுள்ளது புதிதாக வாங்கப்பட்ட சிம்காட்டுகளின் முதலாவது சிம்காட்டினை யாழ்.மாநகர ஆணையாளர் பிரணவநாதன் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவர்களுக்கு வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு மாநகர முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாநகர சபையின் மாதாநத கூட்டதிலே இடம்பெற்றது.

மாநகர முதல்வர் தலைமையில் நடை பெற்ற மாதாந்த கூட்டத்தில் சிம்காட்டுகளை வழங்கிய மாநகர சபை ஆணையாளர் தற்போது வளங்கப்படுகின்ற இந்த சிம்காட் ஒவ் வொன்றுக்கும்மான மாத வாடகையான 100 ரூபா வினை மாந கரசபை தனது நிதியில் இருந்து செலுத்தும் எனவும் குறிப்பிட்டார்.

இந்த 200 இணைப்புகளுக்குட் பட்ட தொடர் பாடல் 24 மணி நேரமும் இலவசமாக வழங்கப்படுவதுடன் இந்த தொலைபேசியில் இருந்து இந்த 200 எண்களுக்கு அப்பாற்பட்ட ஒரு மொபிற்றல் இலக்கத்தினை தொடர்பு கொள்ளுவதானால் ஒரு நிமிடத்திற்கு 1ரூபா 22 சதம் அறவிடப்படுவதுடன் மொபிற்றல் அல்லாத ஏனைய தொலைபேசி எண்ணுக்கு இணைப்பினை மேற்கொள்ளுவதாயின் ஒரு நிமிடத்திற்கு 2ரூபா 44 சதம் அறவிடப்படும் எனவும் ஆணையாளர் தெரிவித்தார். இந்த இணைப்புகளில் இருந்து மேற்கொள்ளப்படும் ஏனைய தொடர்பாடலுக்கான பணத்தினை சம்மந்தப்பட்ட ஊழியரின் மாதாந்த சம்பளத்தில் இருந்து அறவிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த இணைப்புக்கள் யாவும் வழங்கப்படுவதற்கான முக்கிய காரணம் தமது வேலை நேரங்களில் ஊழியர்கள் தமக்குரிய வேலைத்தளங்களில் இருந்து வேறு ஒரு 'இடத்தில் போய் தமக்குரிய தனிப்பட்ட தேவைகளில் ஈடுபடுவதாக தமக்கு பலதரப்பட்ட முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் இதனை கண்காணிப்பதற்காகாவே இந்த இணைப்புகள் வழங்கப்படுவதுடன் இந்த ஒவ்வொரு சிம்காட்டும் தொழில்படும் இடங்களை கண்காணிப்பதற்கான தொழில்நுட்ப வசதிகள் தமக்குரிய காரியாலயத்தில் அமைக்கப்படும் எனவும் மாநகர ஆணையாளர் பிரணவநாதன் இங்கு தொரிவித்தார்.

# அகில இலங்கை ரீதியாக சிறுகதைப்போட்டியில் முதலிடம்



தெல்லிப்பழை கலை இலக்கியக் களம் அமைப்பின் வெள்ளி விழாவையொட்டி அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட்ட சிறுகதைப்போட்டியில் அள வெட்டி வடக்கைச் சேர்ந்த திரு. பசுபதி உதயகுமார் முதற்பரிசைப் பெற்று தேசிய விருதைப் பெற்றுள்ளார்.

கடந்த 21அம் திகதி சுன்னாகம் இராம நாதன் கல்லூரியில் பேராசிரியர் நா. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற வெள்ளிவிழா நிகழ்வில் வைத்து இவருக்கான சான்றிதழும், பத்தாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

எழுத்து துறைக்காக ஏற்கனவே இரண்டு தடவைகள் ஜனாதிபதி விருதையும், 7 தடவைகள் தேசிய விருதுகளையும், மாகாண மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களிலும் ஏராளமான பரிசுகளையும் பெற்றுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி மன் றத்தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வலி வடக்கு பிரதேசசபை உறுப்பினராகவும் செயற்பட்டுவருவது குறிப பிடத்தக்கது.





யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரிகேடியர் ஏச்.எல். டேவிட் மற்றும் சட்டத்தரணி திருமதி சுபோதினி டேவிட் அதிபர்கள் ஆசிரியர்கள் வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (எஸ்.பி.)

# பிறழ்வுகளிலிருந்து சமூகத்தை ஒவ்வொருவரும் காக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்.மாவட்டத்தில் பலபகுதிகளிலும் கலாசாரச் சீரழிவுகள் ஆங்காங்கே பரவலாக இடம் பெற்று வருகின்றன. இவ்வாறான சமூகப் பிறழ்வுகளில் இருந்து எமது சமூகத்தைக் காக்கும் பொறுப்பு எம் ஒவ்வொருவரையும் சாரும். விளையாட்டுக் கழகங்கள் வெறுமனே விளையாட்டு நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதோடு நின்று விடாது சமூக விழிப்புணர்வுக் குழுக்களை அமைத்து சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களை கண்டறிந்து சட்டத்தின் முன்நிறுத்துவதோடு நாட்டிற்கும் சமூகத்திற்கும் பயனளிக்கும் விதத்திலான பணிகளை முன்னெடுப் பதன் மூலம் வளமான எதிர்காலத்தினை கட்டியெழுப்ப முடியும் என ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட தலைமைப்பணிமனையில் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது

அதில் பிரதம அதிதியாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கலந்துகொண்டார். இந்நிகழ்வில் உரையாற்றிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எமது செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் தீவகம் உட்பட யாழ். மாவட்டத்தின் பல பாகங்களையும் சார்ந்த விளையாட்டுக்கழகங்கள் அதனோடு இனைந்த சனசமூக நிலையம் பாலர் பாடசாலை போன்ற வற்றுக்கான நிதி ஒதுக்கீடு இட



ஒதுக்கீடு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப் படுகிறது. யாழ்.மாவட்டத்தை விளையாட்டுத்துறையில் முன்னிலைக்கு இட்டுச் செல்வதற்கான வேலைததிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதற்கு விளையாட்டுக் கழகங்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கி சரியான அனுகுமுறையினை கைக்கொள்ளும் பட்சத்தில் யாழ்.மாவட்டத்தினை கல்வி விளையாட்டுத் துறைகளில் நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கு எல்லாம் முன்மாதிரியாக கட்டியெழுப்ப முடியுமென தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய கமல் கடந்த காலத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் தமது சுயலாப அரசியல் நலனிற்காக இளைஞர் யுவதிகளை யுத்தத்தை நோக்கி தவறான வழிமுறையில் வழிநடத்திச் சென்று ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளின் உயிர் இழப்பிற்கு காரணமானவர்கள் இன்று நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக அரசினால் முன்வைக்கப்பட்டுவரும் அரசியல் தீர்வுத்திட்டத்தினை குழப்பியடித்து தமிழ் மக்களை மீண்டும் நிரக்கதி நிலைக்கு உள்ளாக்கும் நிலையில் செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறான சுயலாப அரசியல் கட்சிகளின் போலியான பரப்புரைகளை இளைஞர் யுவதிகள் நன்கு உணர்ந்தவர்களாக உங்கள் சமூகம் சார்ந்தவர்களை இது போன்ற சுயலாப அரசியல் வாதிகளின் சுயலாப அரசியல் நலனுக்கு துனைபோகாது தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தியதாக அரசியல் பணியினை முன்னெடுத்து வரும் எமது தலைமையின் வழியில் ஒரணி திரளும் போது தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு கூடிய விரைவில் உரிய தீர்வு எட்டப்படும் என்றார்.

யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலண்ரின் (உதயன்)

யாழ். மாவட்டத்தில் அதிகளவிலான விளையாட்டுக் கழகங்கள் சிறந்த முறையில் செயற்பட்டு வருவதுடன் இக் கழகங்களில் இருந்து சிறந்த வீரர் வீராங்கனைகள் தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த காலகட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற அசாதாரன சூழ்நிலையின் காரணமாக இளைஞர் யுவதிகளின் விளையாட்டு ஆர்வம் குறைந்து காணப்பட்டது. இன்று நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் மக்கள் சொந்த வாழ்விடங்களில் மீள் குடியேறியுள்ளதுடன் கலை கலாசார விளையாட்டு நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றார்.

இந் நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிங்கள மக்கள் எமது சகோதரர்கள் குடியேற்றங்களையே எதிர்க்கிறோம்

நாம் சிங்கள மக்களை வெறுக்கவில்லை. அவர்களை எதிர்க்கவில்லை. அவர்களை நாம் சகோதரர்களாகவே மதித்து நடக்கின்றோம். அரசாங்கம் திட்டமிட்டு தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தும் சிங்களக்குடியேற்றங்களையே நாம் எதிர்க்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகரில் நடத்தப்பட்ட பிரசாரக்கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார். திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் சி.தண்டாயுதபாணி தலைமையில் இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இந்த நாட்டில் வேறு இனத்திலும் பார்க்க நீண்ட கால பாரம்பரியம் கொண்ட இனம் தமிழினம். திருக்கோணஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம் மற்றும் தொண்டீஸ்வரம் என் ஐந்து ஈஸ்வரங்கள் இருந்துள்ளன என்று சிங்கள வரலாற்றுப் பேராசிரியர் சேர் போல் பீரிஸ் தனது நூலில் எழுதியுள்ளார். வடக்கு கிழக்கு பகுதிகள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்பதை இது வலியுறுத்துகின்றது.

எமது இத்தாயகத்திலே எம் மண்ணை நாமே ஆளக்கூடியவர்களாக வாழ்வதற்கு தேவையான சுயாட்சி அதிகாரங்களையே நாம் கோரிவருகின்றோம் என்றார்.

## உணவுச் சட்டத்தில் திருத்தம் நவம்பரில் நடைமுறைக்கு வரும்

1980 ஆம் ஆண்டில் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திருத்தங்கள் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார். சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் இச்சட்டத்தில் உணவு பொதியிடல், தயாரித்தல், உற்பத்தி செய்தல், விநியோகித்தல், களஞ்சியப்படுத்துதல், வாகனங்களில் எடுத்துச் செல்லுதல் ஆகிய விடயங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவ்வதிகாரி மேலும் குறிப்பிடுகையில்- உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் உணவு சட்டத்திருத்தமும் ஒன்றாகும். இச்சட்டத் திருத்தத்தின் கீழ் உணவு பழுதடையக் கூடிய கைத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்களிலும்- வெள்ளம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களிலும் உணவு உற்பத்தியும், தயாரிப்பும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் உணவு விற்பனை செய்யும் ஹோட்டல்கள்- சிற்றுண்டிச்சாலைகளில் தொற்று நோய்களுக்கு உள்ளாகாதவர்கள் கடமையாற்றுவதை அவற்றின் உரிமையாளர் உறுதிப்படுததுவதும் இத்திருத்தத்தின் கீழ் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இதேபோல் பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய இன்னும் பல திருத்தங்கள் இச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவருகின்றது.

## யாழ்.மாவட்ட கூட்டுறவு அமைப்புக்களின் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்.மாவட்ட கூட்டுறவு அமைப்பு நடத்திய 90 ஆவது கூட்டுறவு தினத்தையொட்டி நடத்திய விளையாட்டுப் போட்டிகள் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரம் பின்வருமாறு,

**100 மீற்றர் ஓட்டம் (அங்கத்தவர்)**

து.மயூரன், யோ.ஜெயகணேஷ்கா, அனுதீபன் (ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கம்.)

**100 மீற்றர் ஓட்டம் (பணியாளர்)**

ரி.கமலநாதன் (காரைநகர் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்), கி.கிளின்ரன் (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்), எஸ்.ரகுவரன் (கோண்டாவில் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

**100 மீற்றர் ஓட்டம் பெண்கள் (அங்கத்தவர்)**

எம்.சுபாசினி (இணுவில் அபிராமி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்), தி.லக்சிகா (ஏழாலை ஸ்ரீ விநாயகர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்), எ.மகிழினி (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

**100 மீற்றர் ஓட்டம் பெண்கள் (பணியாளர்)**

நா.கஜனி, மா.பிரியவேதினி, செ.துஸ்யந்தி (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்),

**சைக்கிள் ஓட்டம் ஆண்கள் (அங்கத்தவர்)**

த.தனிஷ், அ.சுலக்சன், தி.கமல்ராஜ் (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்)

**சைக்கிள் ஓட்டம் (பணியாளர்)**

தி.பற்பராசா (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்), ந.காந்தரூபன் (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்),

**சைக்கிள் ஓட்டம் பெண்கள் (அங்கத்தவர்)**

இ.பருவநிலா (தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்), இ.தனுசா (பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்),

பு.மலா (கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்)

**4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆண்கள்**

ஏழாலை ஸ்ரீ விநாயகர் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம்

(தொடரும்.....)

## சட்டவிரோத பயணம்; 3 படகுகள் மீட்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு சட்டவிரோத குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்றதாக கூறப்படும் மூன்று படகுகளை கடற்படையினர் கைப்பற்றினர். இவற்றில் இரு படகுகள் நீர்கொழும்பிலும் ஒரு படகு திருகோணமலையிலும் இடைமறிக்கப்பட்டன. இப்படகு களிலிருந்து 103 பேர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் 34 பேர் கைது செய்யப்பட்டனர். நீர்கொழும்பிலிருந்த ஒரு படகிலிருந்து 44 பேரும் மற்றொரு படகிலிருந்து 25 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சட்டவிரோத குடியேற்றவாசிகளை தடுப்பதற்கான படையினர், பொலிஸார், மற்றும் கரையோர காவல் படையினருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் கூட்டு நடவடிக்கை தொடரும் என கடற்படை தெரிவித்துள்ளது.

Grade - 12

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

| 02 | T | II |
|---|---|---|

# GIT

நேரம் :
2 மணித்தியாலம்

# கல்வி முரசு

A.J. Nimalrajan
(mcse, ccna)

மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.


01) ICT என்பது பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?
1) வானியல் தகவல் தொழில் நுட்பம்
2) தகவல் தொடரடபாடல் தொழில் நுட்பம்
3) தகவல் விண்வெளி தொழில் நுட்பம்
4) புவியியல் தகவல் தொழில் நுட்பம்

02) குறைவான இடவசதி மின்சாரப் பாவனை என்பவற்றை கொண்ட VDU பின்வருவனவற்றுள் எது (வை)?
1) CRT 2) LCD
3) CTR,LCD 4) IBM 1130 Main frame

03) கணினிக்குரிய இயல்புகளில் ஒன்று.
1) கல்வி 2) தொடர்பு 3) வேகம் 4) கணிதம்

04) பின்வருவனவற்றுள் Primary storage (பிரதான நினைவகம்) எது?
1) Hard disk 2) Processor 3) RMA 4) WORM

05) பின்வரும் படத்திலுள்ள வெற்றுக் கூட்டில் வரக்கூடியது.




1) Processing 2) Properties 3) software 4) frequency

06) எம்முடன் இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியது.
1) firm ware 2) Live ware 3) Hard ware 4) soft ware

07) Origin (உற்பத்தி) என்பது எதனை உணர்த்துகிறது?
1) கணினி பெறுபேறு 2) கணினி செயற்படும் தன்மை
3) தகவலின் இயல்பு 4) தொடரடபாடல் இயல்பு

08) 8 Bits கள் 1 Byte எனின் 4 Bits களை எவ்வாறு அழைக்கலாம்?
1) Nibble 2) Kilibyte 3) MHZ 4) peta

09) பின்வருவனவற்றில் எது Input Device ஆகவும் Out put Device ஆகவும் தொழிற்படும்?
1) Mouse 2) Scannre 3) VDU 4) Modem

10) விரிபரப்பு வலையமைப்பு (WAN) என்பதன் விரிவாக்கம் யாது?
1) Word Area Network 2) Wide Area Net work
3) Wide Auto Network 4) Web Area Network

11) பின்வரும் அளவுப் பிரமாணங்களில் எதில் கூடியளவு தகவல்களை சேகரிக்க முடியும்.
1) 25GB 2) 25MB 3) 250MB 4) 2500Kb

12) வலையமைப்பின் இடத்தியல் வகையில் பின்வருவனவற்றுள் எது உள்ளடங்கும்?
1) WAN 2) LAN 3) Mesh 4) MAN

13) கணினி என்பது.
1) ஒரு இலத்திரனியல் சாதனம்
2) தரவுகளை செய்முறைக் குட்படுத்தும்
3) Prgram களை கட்டுப்படுத்தி செயற்படும்
4) மேற்கூறிய யாவும் சரி

14) படத்தில் காட்டப்பட்ட இடத்தியல் வலையமைப்பின் (Network topology) எது?
1) Ring (வளையம்) 2) Star (விண்மீன்)
3) Tree (மரம்) 4) Bus (பாட்டை)

15) பின்னக வடிவில் தரவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் சாதனம் யாது?
1) Analog Computer 2) Telephone
3) Digital Computer 4) Radio

16) Bus Topology இல் பிரதானமாகக் காணப்படுகின்ற cable ஆனது எவ்வாறு. அழைக்கப்படும்.
1) Bone 2) Node 2) Hub 4) Terminator

17) Analog Computer செயற்பாடுகளுக்கு உதாரணமாகக் கூறக் கூடியது.
1) Digital Camera 2) கார்வேக மானி
3) பெற்றோல் பம்பி 4) Mobile phone

18) பின்வருவனவற்றுள் தேடற் பொறி (Search Engine) எது?
1) http 2) msn 3) lan 4) com

19) IBM Ps/2 என்பது
1) Mini Computer 2) Micro Computer
3) Main frame computer 4) Purpose computer

20) இராணுவம் மற்றும் அரசாங்கம் சார்பான இணைய முகவரியில் காணக்கூடிய Domain குறியீடு எது?
1) ….edu 2) ….net 3) ….gov 4) …org

21) CPU என்பதன் விரிவாக்கம்.
1) Central Processing Unit 2) Central Purpose Unit
3) Communication Purpose Unit 4) Compact Processing unit

22) URL என்பதன் சரியான விரிவாக்கத்தினைத் தெரிவு செய்க.
1) Unit Refresh Locator 2) Uniform Refresh Locator
3) Unit Resource Locater 4) Uniform Resource Locator

23) கணினியின் தகவல்கள் எவ்வாறு செயற்பட்டுச் சேகரிக்கப்படுகின்றன.
1) Octal method 2) Binary Method
3) Decimal method 4) data base

24) http:www.orrshillguru.com என்ற இணைய முகவரியில் protocol ஆகத் தொழிப்படுவது எது?
1) http 2) www 3) .com 4) orrshillgiry

25) ஒரு MB யில் எத்தனை KB அளவுகள் உள்ளன.
1) 1004 Kb 2) 8Kb 3) 1024byte 4) 1024Kb

26) தொலைபேசி இணைப்பினூடாகக் கணினியில் இணைய (internet) வசதியினைப் பெற்றுத்தருகின்ற தொழிற்பாட்டினைச் செய்வது யாது?
1) Telephone 2) Modem 3) Digital 4) CPU

27) கணினியின் தந்தை எனக் கருதப்படுபவர்
1) Billgates 2) Abacus 3) Charles barrage 4) pascaline

28) இந்த வடிவமான சமிக்ஞை (Signal ) எவ்வாறு அழைக்கப்படும்.
1) flash signal 2) Analog signal
3) Digital signal 4) Arrow signal

29) நாம் பயன்படுத்துகின்ற 1.44 MB floppy இன் அளவு யாது?
1) 6” 2) 3.5” 3) 8” 4) 5.25”

30) Blaster என்பது
1) தேடுதளத்தில் ஒன்று 2) கணினி வகைகளில் ஒன்று
3) சுட்டி வகைகளில் ஒன்று 4) கணினி நச்சு நிரல்களில் ஒன்று

31) பின்வருவனவற்றுள் உள்ளீடாகவும் வெளியீடாகவும் தொழிற்படும் கருவிகள் எவை?
1) Floppy, Pinter 2) CD, Modem
3) B மட்டும் சரி 4) மூன்றும் சரி

32) பிரயோகப் பொதிகளை (Application Software) களை தாக்கக் கூடிய Virus வகை எது?
1) macro virus 2) boot cirrus 3) file virus 4) anti virus

33) 4817 என்ற இலக்கத்தை Type செய்வதற்கு எத்தனை bytes தேவைப்படும்
1) 4 2) 8 3) 128 4) 16

34) பின்வருவனவற்றுள் Anti Virus software ஆக அமைவது எது?
1) Trojan 2) Beast 3) Scold 4) Nimda

35) CPU இல் காணப்படுகின்ற Mother board ஆனது
1) மென்பொருள் 2) மென்மின் சுற்று
3) வன் பொருள் 4) வன் மின்சுற்று

36) Charles Babbage இன் எந்தப் படைப்பானது கணினி உருவாக்கத்திற்கு துணைபுரிந்தது
1) ENIAC 2) Difference engine
3) Analytical engine 4) UNIVAC

37) Mouse பின்வரும் எந்தப் பாகத்துடன் இணைக்கப்படுகின்றது.
1) Key boar 2) monitor 3) speaker 4) CPU

38) Vacuum tube காலம் எனச் சிறப்பிக்கப்படுகின்ற கணினிக் காலம் எது?
1) 1979 - இன்றுவரை 2) 1959 – 1963
3) 1964 – 1979 4) 1951 – 1958

39) கணினியின் மிகச் சிற்ய அலகுக் கூறாகக் காணப்படுவது
1) bit 2) byte 3) megabyte 4) tiga byte

40) 4th generation computer காலத்தில் ஆயிரக்கணக்கான ICC (Interacted Circuit) செய்ய வேண்டிய கருமத்திற்குப் பதிலாக ஒரு நுட்பமான கருவி கண்டு பிடிக்கப்பட்டது அது?
1) Micro processo 2) GUI 3) Micro Chip 4) Transistor

## பகுதி II

எ முதலாம் வினா உட்பட மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக.

எ முதலாம் வினாவிற்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

01) அ) பின்வரும் எண் முறைமை பிரசின்னங்களைத் தீர்க்க.
பின்வரும் எண்களை அடி பத்திற்கு மாற்றுக.
1) 110011 இரண்டு 2) 234 எட்டு 3) 512 பதினாறு

ஆ) பின்வரும் குறியீடுகளுக்கு விரிவாக்கங்களை எழுதுக.
1) 2GL 2) CPU 3) OS 4) PC

இ) 1) தரவு என்றால் என்ன?
2) தகவல் என்றால் என்ன?
3) கணினியின் பிரதான செயற்படு பகுதிகள் எவை?(10x2=20புள்ளி)

02) 1) கணினி என்றால் என்ன? (3 புள்ளி)
2) கணினியால் செய்யக் கூடிய கருமங்கள் 4 இனை குறிப்பிடுக? (3 புள்ளி)
3) கணினியின் இயல்புகள் 4 இனை தருக? (4 புள்ளி)

03) 1) கணினி வரலாற்றுக் காலங்களை ஆண்டுகளுடன் பட்டியற்படுத்துக? (5 புள்ளி)

2) Vacuum Tubes கால கணினிகள் பற்றி 3 தகவல்கள் தருக? (3 புள்ளி)

3) ஆயிரம் IC (Integrated Circuit) களிற்குப் பதிலாக ஒரு Micro Processor பயன்படுத்தப்பட்டது. அவ்வாறே இக்காலத்தில் அறிமுகமான இரண்டு விடயங்களின்பெயர்களை குறிப்பிடுக? (2 புள்ளி)

04) 1) PS/2 Ports இல் இணைக்கக் கூடிய Devices இரண்டு தருக?

2) தற்பொழுது Printers, scanners, pen derive போன்றவற்றினை இணைப்பதற்கு பயன்படும் Port இன் பெயர் யாது? (2 புள்ளி)

3) மென் பொருள் என்றால் என்ன? (3 புள்ளி)

05)
1) கணினி இடத்தியல் வலையமைப்பு (Types of Network topology) வகைகள் பட்டியற்படுத்துக? (2 புள்ளி)
2) அவற்றின் இரண்டினை படத்துடன் விளக்குக? (2 புள்ளி)
3) வலையமைப்பின் பிரதான வகைகள் (Types of networks) எவை?
4) வலையமைப்பினால் (Network) நாம் பெறும் நன்மை 3 தருக?

06)
1) இடப் பெறுமானம் கொண்ட எண்வகைகளை குறிப்பிடுக?
2) ஒவ்வொரு இலக்க முறைமையிலும் அடங்கும் இலக்கங்களை வலையறை செய்க.
3) தரக் கட்டலை (logic gates) வகைகளை படத்துடன் குறிப்பிடுக?
4) ஏதாவது இரண்டு தர்க்கப்படலைகளை (Logical gates) வரைந்து அவற்றிற்குரிய உண்மை அட்டவணை (Truth table) களை குறப்பிடுக?

**சென்றவாரத் தொடர்ச்சி....**

21) சிற்றறை C2 இல் சூத்திரம் = Rank (B2, B$2: B$4) ஆனது உட்புகுத்தப்பட்டு C3, C4 இற்கு பிரதி (Copy) பண்ணப்படுகின்றது. பின்வருவனவற்றில் C3 இன் வெளியீடு யாது?

1. 1
2. 2
3. 3
4. 4

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | Students Name | Marks | |
| 2 | Saman | 50 | |
| 3 | Nihal | 60 | |
| 4 | Shan | 85 | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |

22) விரிதாளின் சிற்றறை B7 இல் சூத்திரம் = Sum (B2:B6 ) ஆனது உட்புகுத்தப்படுகின்றது . பின்வருவனவற்றுள் B2,B3,B4 என்பவற்றில் முறையே காட்டப்படும் data types, alignment types என்பன யாவை?

| G10 | | fx |
|---|---|---|
| | A | B |
| 1 | Name | Points Collected |
| 2 | saman | 45 |
| 3 | nishan | 50 |
| 4 | Kamalinee | 78 |
| 5 | Iqbal | 15 |
| 6 | Rajah | 25 |
| 7 | Total | 135 |
| 8 | | |

1. numbers, labels, left aligned labels
2. numbers, labels, left aligned numbers
3. numbers, left aligned numbers and labels
4. numbers, left aligned numbers, left aligned labels

23) இலத்திரனியல் காட்சிப்படுத்தலின்போது திரையில் கறுப்பு நிறத்தை ஏற்படுத்தவும் திருத்தவும் மேற்கொள்ளப்பட வேண்டியது

1. Press key 'N' once 2. Press key 'B' once
3. Press key 'W' once 4. Press key 'P' once

24) பின்வருவனவற்றில் அநேகமான பிரயோக மென்பொருளில் பயன்படுத்தப்படும் short cut keyfshd Ctrl+C, Ctrl+V என்பன முறையே குறிப்பது

1. Save and delete 2. Copy and paste
3. Copy and delete 4. Cut and paste

25) ஒரு ஆவணத்தில் margin ஐ ஒழுங்குபடுத்த உபயோகப்படுவது எது?

1. Page setup 2. Print Preview
3. Page border 4. Text border

26) Print இற்கு அனுப்பிய சில ஆவணங்கள் Print ஆகவில்லை அவற்றை Print இலிருந்து நீக்குவதற்கு (Cancel) பயன்படுத்தப்பட வேண்டிய மிகச் சிறந்த முறை எது?

1. Shutdown the printer 2. Open and delete the print queue
3. Shutdown the Computer 4. exit from the application software

27) தரப்பட்ட ஒரு சொல்லிற்கு சமமான கருத்தை கண்டுபிடிப்பதற்கு சொல்வழிப்படுத்தும் மென்பொருளில் பயன்படுத்தப்படும் கருவி

1. Spell Checker 2. Thesaurus
3. Language Translation 4. Hypernation

28) தரவு முகாமைப்படுத்துவதற்கு மிகவும் சிறந்த பிரயோக மென்பொருள் (application software) எது?

1. Word processing 2. Database
3. Spreadsheet 4. Presentation

29) database xd;wpy; Prirmary object ஆக கருதப்படக் கூடியது எது?

1. Table 2. Query 3. Form 4. Report

30) நிகழ்ச்சி நிரலாக்க மொழிகளில் (Programming languages) ngWkjpahd(Valid ) field identifier பின்வருவனவற்றில் எது?

. 1First . Name 2. FirstName 3. First* Name 4. First/ Name

31) Database தொடர்பிலான கூற்றுக்களில் சரியானவை

a. தரவுத் தளமானது குறித்த ஒரு விடயம், நிறுவனம் அல்லது நிகழ்ச்சி தொடர்பான தகவல்களின் தொகுப்பாகும்
b. தரவுத் தளமானது ஆகக் குறைந்தது ஒரு உபயோகிக்கக் கூடிய table ஐயாவது கொண்டிருக்கும்
c. ஒன்று அல்லது பல table களிலிருந்து Queries, Forms, Reports உருவாக்கலாம்

1. a யும் b யும் சரி 2. a யும் c யும் சரி
3. b யும் c யும் சரி 4. a,b,c, மூன்றும் சரி

32) பின்வருவனவற்றில் மின்னஞ்சல் மென்பொருள் அல்லாதது எது?

1. Microsoft Outlook Express 2. Pegasus
3. Eudora 4. Internet Explorer

33) பின்வருவனவற்றில் புதிய e-mail ஒன்று கிடைத்திருப்பதை காட்டுவது

1. Inbox 2. Outbox 3. Send 4. Address bar

34) கீழே காட்டப்படுவது பரீட்சைகள் திணைக்களத்தின் க.பொ.த (சா/த) முடிவுகள் பரிசீலிப்பதற்கான website ஆகும்.

http://www.doenets.lk/result.htm {A} {B} {C}

A, B, C என்பனவற்றினால் முறையே சரியாக குறிப்பது

1. domain name, Protocol and page
2. Protocol, Page and domain name
3. Protocol, domain name and page
4. domain name, page and protocol

35) ஒரு மின்னஞ்சலை இரு பெரும் பிரிவுகளாக வேறுபடுத்தும் Character யாது?

1. . 2. – 3. / 4. @

36) சுதிபா தனது நண்பன் ஒருவன் தனது தனிப்பட்ட தேவைக்காக கொள்வனவு செய்த மென்பொருளினை பிரதிசெய்து உபயோகித்தான். பின்வருவனவற்றில் சுதிபாவின் கணினி மென்பொருள் தொடர்பிலான சரியான கூற்று

1. Licensed software obtained free 2. software obtained free
3. Free and open source software 4. Illegal software obtained free

37) ஒருவர் கணினி விளையாட்டுக்கள் விளையாடுவதில் ஆர்வமுள்ள வர். அவரிற்கு VGA Card ஒன்று தேவைப்படுகின்றது. VGA Card தேவைப்படவதற்கு மிகவும் பொருத்தமான காரணம்

1. Random Access Memory (RAM) போதியளவற்றதாக இருத்தல்
2. கூடியளவிலான சத்தத்தை பெற்றுக் கொள்வதற்காக
3. தரமான animations, images என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கு
4. Processor speed போதியளவில் இல்லாததால்

38) பின்வருவனவற்றுள் தவறான கணினி பாவனை காரணமாக ஏற்படக்கூடிய சுகாதார பாதிப்புக்கள் எவை?

a. இடுப்பு வலி c. கண் நோவு
b. முதுகு வலி d. கேட்டல் குறைபாடு

1. a,b,c மட்டும் சரி 2. a,b,d மட்டும் சரி
3. b,c,d, மட்டும் சரி 4. a,c,d மட்டும் சரி

39) ஒரு கணினியை கொள்வனவு செய்யும் போது பிரதான இடத்தை வகிக்கும் 3 பிரதான காரணிகள் பின்வருவனவற்றுள் எவை?


a) processor speed b) main memory capacity
c) Hard disk capacity d) Speed of the CD drive

1. a,b,d மட்டும் சரி
2. b,c,d மட்டும் சரி
3. a,c,d, மட்டும் சரி
4. a,b,c மட்டும் சரி

40) ஒரு சஞ்சிகையை தயார் செய்வதற்கும், Print எடுப்பதற்கும் மிகவும் பொருத்தமான நபர்

1. Computer Applications Assistant
2. System Analyst
3. Desktop Publisher
4. Programmer

# சட்டவிரோத குடியேற்றமே அசாம் மோதலுக்குக் காரணம்



அசாமின் கோக்ராஜர், சிராங் உள்ளிட்ட மாவட்டங்களில் நிகழ்ந்த இனமோதல் மத-ரீதியானது அல்ல என்றும் அதிகளவிலான சட்டவிரோத குடியேற்றம்தான் காரணம் என்றும் பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே. அத்வானி கூறியுள்ளார்.

அசாமில் போடோ இனத்தவருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே ஒருவாரம் நிகழ்ந்த மோதலில் 50இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். சுமார் 4 இலட்சம் பேர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.


இந்த வன்முறை பாதித்த பகுதிகளைப் பார்வையிட சென்ற அத்வானி நிவாரண முகாம்களில் உள்ளோரை நேரில் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

அசாமில் நிகழ்ந்துள்ள மோதலானது இந்துக்களும் முஸ்லிம்களுக்கும் இடையேயான மோதலோ அல்லது பெரும்பான்மை மற்றும் சிறுபான்மையினருக்கு இடையேயான மோதலோ அல்ல. மிகப்பெரிய அளவில் வங்கதேசத்தில் இருந்து எல்லைதாண்டி வந்து குடியேறுவதால்தான் பிரச்சினை வெடித்திருகிறது.

இங்கே கேட்ட விவரங்கள் அனைத்தும் மகிழ்ச்சி தரக்கூடியதாக இல்லை. 2012 ஆம் ஆண்டிலும் கூட இத்தகைய நிகழ்வுகள் நடப்பது வேதனையளிக்கக் கூடியது. உரிய நேரத்தில் இந்த விவகாரத்துக்கு தீர்வு காணாவிட்டால் நிலைமை மிகவும் மோசமடைந்துவிடும்.

ஜம்மு காஷ்மீரிலும் கூட ஒரு பிரிவு மக்களது கோரிக்கைகளை நாம் காதில்தான் வாங்கிக் கொள்கிறோம். ஆனால் நடைமுறைப் படுத்தப்படவில்லை அந்த [illegible]ல் அசாமுக்கு வந்துவி[illegible]க் கூடாது என்றார் அவர்.




## நரேந்திர மோடியின் "டிவிட்டரில்" 8 இலட்சம் ஆதரவாளர்கள்

(அகமதாபாத்)

குஜராத் முதல்வர் நரேந்திர மோடியின் டிவிட்டர் ஆதரவாளர்கள் எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்து கொண்டிருக்கிறது. அவரது பாலோயர்களின் எண்ணிக்கை தற்போது 8 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

இந்திய அரசியல்வாதிகளிலேயே டிவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களில் மோடிக்குத்தான் பெரும் ஆதரவு காணப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நிலவரப்படி மோடியின் ஆதரவாளர்கள் எண்ணிக்கை டிவிட்டரில் 8 இலட்சத்தைத் தாண்டி விட்டது. ஆட்சி நிர்வாகத்திற்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் டிவிட்டர், பிளாக், இன்டர்நெட் போன்றவற்றை பெரிதும் பயன்படுத்தி வருகிறார் மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

மோடியின் டிவிட்டர் பக்கம் 2009ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி தொடங்கியது. அதன் பிந்னர் 2011 நவம்பர் 11ஆம் திகதி 4 இலட்சம் ஆதரவாளர்களை எட்டினார் மோடி. தற்போது 8 இலட்சமாக இது உயர்ந்துள்ளது.

## இன மோதலால் பாதிக்கப்பட்டோரை நேரில் சந்தித்து சிதம்பரம் ஆறுதல்



அசாம் மாநிலத்தில் இன மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் பார்வையிட்டார்.

நிவாரண முகாம்களில் உள்ளவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்ல ஏற்பாடு செய்யப்படும் என்றும், அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் உறுதி அளித்த சிதம்பரம், சொந்த கிராமங்களுக்கு திரும்பி அமைதியாக வாழுங்கள் என்றும் கேட்டுக் கொண்டார்.

## பலியெடுத்த தமிழ்நாடு ரயிலில் தீயணைப்புக் கருவிகள் இல்லை

(சென்னை)

விபத்தில் சிக்கிய தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயிலில் தீயணைப்புக் கருவிகள் கூட இல்லை என்று விபத்தில் சிக்கி மீண்டவர்களும், ரயிலில் பயணித்தவர்களும் கூறியுள்ளனர்.

புதுடில்லியிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் நெல்லூரில் தீவிபத்தில் சிக்கியது. அதில் எஸ். 11 பெட்டி முழுக்க எரிந்து போனது. இந்தக் கோர விபத்தில் 50 பயணிகள் உயிரிழந்திருந்தனர்.

தீவிபத்தில் படுகாயமடைந்த பலரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்தில் சிக்கி மீண்ட சில பயணிகள் கூறுகையில்,

அதிகாலை 3.45 மணிக்கு எஸ்.11 பெட்டியில் தீவிபத்து ஏற்பட்டது. இதனை எவரும் உடனடியாக கவனிக்கவில்லை. இதனால் தீப்பிடித்த நிலையில் சுமார் 5 கி.மீ. தூரம் வரையிலும் ரயில் ஓடியதால் அதிக காற்று காரணமாக தீ பெட்டி முழுவதும் பற்றி எரிந்தது. இதில் சிக்கி 45 பேருக்கு மேல் எரிந்து இறந்திருக்க கூடும். அதிகாலை என்பதால் இருள் சூழ்ந்து காணப்பட்டதால் எரிந்த பெட்டியிலிருந்தவர்களை உடனடியாக காப்பாற்ற முடியவில்லை. ரயில்வே நிர்வாகத்தினரும் காலை 5 மணிக்கு தான் உதவிக்கு வந்தனர். வந்த உடன் தீப்பிடித்த பெட்டியை ரயிலில் இருந்து கழட்டி விட்டனர் எனத் தெரிவித்தார்.

## 2 ஜி ஊழலில் இறுதியில் பயணடைந்தது யார்?

### – தகவல் வழங்க சுவிஸ் தயாராக இல்லை

(புதுடில்லி)

ரிலையன்ஸ் டெலிகொம் நிறுவனத்தின் பங்குகள் சந்தேகத்துக்கு இடமான வகையில், ஸ்வான் டெலிகொம் நிறுவனத்துக்கு மாற்றப்பட்டதில், இறுதியாக பயனடைந்தது யார்? என்பதை கண்டுபிடிக்கக் கோரி, சுவிஸ்சர்லாந்து அரசுக்கு அனுப்பிய கோரிக்கையை, அந்நாட்டு அதிகாரிகள் இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை என, சி.பி.ஐ. தெரிவித் துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பாக விசாரணை நடத்தி வரும், நாடாளுமன்றக் கூட்டுக் குழு முன், சி.பி.ஐ. தாக்கல் செய்த அறிக்கையில் கூறியுள்ளதாவது:

சிம் அட்டை பொருத்தக்கூடிய மொபைல் சேவை, சிம் அட்டை இல்லாத மொபைல் சேவை ஆகிய, இரண்டு தொழில்நுட்பங்களும் சேர்ந்து, உரிமம் வழங்குவது தொடர்பான கொள்கையை, சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. இதில், ரிலையன்ஸ் டெலிகொம் நிறுவனம், மொரீஷி யசில் உள்ள டெல்பி இன்வெஸ்ட்மென் நிறுவனத்துக்கு சந்தேகத்துக்கு இடமான வகையில், பங்குகளை மாற்றியுள்ளது. இந்த பங்குகள் அனைத்தும், பல கோடி மதிப்பு கொண்டது. ஆனால், இந்த பங்குகள் பாதி விலைக்கும் குறை வாக மாற்றப்பட்டுள்ளன.

ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்துக்கு, இரட்டை தொழில்நுட்ப முறையின் கீழ், ஸ்பெக்ட்ரம் உரிமம் ஒதுக்கீடு செய்த தில், எந்தவிதமான குற்றம், தவறான நடத்தை இருப்பதற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லை. ஆனால், சந்தேகம் அளிக்கும் வகையில் பங்குகள் விற்பனை செய்யப் பட்டுள்ளதும், அதன் இறுதியில் பயனடைந்தது யார் என்பதையும் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. டெல்பி நிறுவனத்துக்கு சந்தேகத்துக்கு இடமான வகையில், கொடுக்கப்பட்ட பங்கு மாற்றம் என்பது, ரிலையன்ஸ் நிறுவனம் அரசு ஊழியர் எவருக்கோ வழங்கிய இலஞ்சத்துக்கு மாற்றாக இருக்கலாம். இந்த பங்கு மாற்றங்கள் மூலம் பயனடைந்தது யார்? என்பதை கண்டுபிடித்து தெரிவிக்கும்படி, மொரீஷியஸ் அதிகாரிகளுக்கு சி.பி.ஐ. கடந்த ஆண்டு ஜனவரியில், நீதிமன்றம் மூலம் கடிதம் அனுப்பியது.

அதன்பின், கடந்த ஆண்டு, மே மாதம் கூடுதல் கோரிக்கையும் அனுப்பி வைக்கப் பட்டது. இதற்கு பதிலளித்த மொரீஷியஸ், ரிலையன்ஸ் நிறுவனம், தனது பங்குகளை டெல்பி நிறுவனத்துக்கு மாற்றிய பின், அதை மவி இன்வெஸ்ட்மென்ட் என்ற நிறு வனம் எடுத்துள்ளது.

அந்த பங்குகளை, பி.டி.எஸ். பெல்வோர் இன்வெஸ்ட்மென்ட் என்ற நிறுவனம் வைத்துள்ளது. இந்த பங்கு மாற்றங்கள் தொடர்பாக, இறுதியில் பயனடைந்தது யார்? என்ற கோரிக்கையை, சுவிஸ்சர்லாந்து அதிகாரிகள் இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லை. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கிரஸ் கட்சி யானை அல்ல அது ஒரு குதிரை

(மதுரை)

காங்கிரஸ் கட்சி யானை அல்ல. அது ஒரு குதிரை என்று அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழக தலைவர் ஞானதேசிகன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழக சட்டசபை மற்றும் உள்ளாட்சி தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி பின்னடைவை சந்தித்தது.

அதை கணக்கில் வைத்து கொண்டு காங்கிரஸ் கட்சியின் அத்தியாயம் முடிந்துவிட்டது என்று சிலர் கனவு காண்கின்றனர். அது பகல் கனவுதானே தவிர உண்மை அல்ல. காங்கிரஸ் கட்சி யானை அல்ல, குதிரை. அதனால் கீழே விழுந்தால் உடனே எழுந்து நிற்கும் என்பதை பல நேரங்களில் மக்களிடம் நிரூபித்து காட்டி உள்ளோம்.

யானையின் பலமும், குதிரையின் வேகமும் காங்கிரஸ் கட்சிக்கு உண்டு என்பதைக் காட்டும் விழாவாக காமராஜர் பிறந்தநாள் விழா கூட்டம் நடைபெறும். தமிழகத்தில் மாணவர்களுக்கு இலவச கல்வி, மதிய உணவு, சீருடை, கல்வி கடன் ஆகியவற்றை கொடுத்தவர் காமராஜர் என்றார்.






# சிரியாவில் கடும் போராட்டம்
# 2 இலட்சம் பேர் இடம்பெயர்வு



சிரியாவில் அலெப்போவில் அரசு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் சண்டை நடப்பதால், இரண்டு இலட்சம் பேர் ஊரைக் காலி செய்துவிட்டு, அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

சிரியாவில், அதிபர் பஷர் அல் ஆசாத்தை பதவி விலகக் கோரி, கிளர்ச்சியாளர்கள் கடந்த ஆண்டு மார்ச் முதல் போராடி வருகின்றனர். போராட்டக்காரர்களை ஒடுக்க, இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில், இது 20 ஆயிரம் பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவத்துக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது. போராட்டக்காரர்களை கொன்று குவிக்கும் சிரியா அரசு மீது, பொருளாதாரத் தடை விதிக்கும் தீர்மானம், ஐ.நா. பாதுகாப்பு சபையில் கொண்டுவரப்பட்டது.

ஆனால் இந்த தீர்மானத்தை ரஷ்யாவும், சீனாவும் ஏற்கவில்லை. சிரியாவின் எல்லைப் பகுதிகளில், கிளர்ச்சியாளர்களின் கை சமீப காலமாக ஓங்கி வருவது குறிப்பிடத்தக்கது.




வெனிசுலா அதிபர் ஹுகோ சாவேஸ் 58 ஆவது பிறந்தநாளை யொட்டி அவருக்கு வாழ்த்து தெரிவிக்கும் மக்கள்.

# நேட்டோ படைகளுக்கான போக்குவரத்து நிறுத்தம்

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படைகளுக்கான வாகனப் போக்குவரத்து, ஐந்தாவது நாளாக பாகிஸ்தானில் நேற்று முன்தினம் நிறுத்தி வைக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளன. இந்த படைகளுக்குத் தேவையான எரிபொருட்கள், பாகிஸ்தான் வழியாகக் கொண்டு செல்லப்படுகின்றன.



கடந்த ஆண்டு நவம்பர் மாதம், நேட்டோ படைகள் தவறுதலாக தாக்குதல் நடத்தியதில், பாகிஸ்தானிய வீரர்கள் 24 பேர் கொல்லப்பட்டனர். இதற்காக, அமெரிக்கா மன்னிப்பு கேட்காத காரணத்தால், ஆப்கானிஸ்தானுக்கான பாதையை பாகிஸ்தான் மூடிவிட்டது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன், பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்டதற்கு, சமீபத்தில் மன்னிப்பு கேட்டார். இதையடுத்து, நேட்டோ படைகளுக்கான எரிபொருள் வாகனங்கள் செல்ல பாகிஸ்தான் அனுமதியளித்தது.

நேட்டோ வாகனப் போக்குவரத்துக்கு அனுமதியளித்தால், அந்த வாகனங்களை குண்டு வைத்து தகர்ப்போம் என தலிபான்கள் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தனர். ஆப்கானிஸ்தானில், உஸ்பெகிஸ்தான் எல்லையையொட்டிய சமாங்கன் மாகாணத்தில், நேட்டோ வாகனங்கள் செல்லும் பாதையில், தலிபான்கள் கடந்த 18ஆம் திகதி, வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர்.

இதில், எரிபொருள் நிரப்பிய லொரி வெடித்துச் சிதறியது. இதற்கிடையே கடந்த 24ஆம் திகதி, பெஷாவரில் நேட்டோ படைகளுக்கான வாகனத்தை ஓட்டிய டிரைவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேலும் இது போன்ற தாக்குதலை நடத்த தலிபான்கள் திட்டமிட்டிருப்பதாக வந்த தகவலையடுத்து, நேட்டோ வாகனங்களுக்கான போக்குவரத்தை, பாகிஸ்தான் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. இதனால், நேற்று முன்தினம் ஐந்தாவது நாளாக நேட்டோ படை வாகனப் போக்குவரத்து இரத்து செய்யப்பட்டிருந்தது.

# தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்தார் பிஜி பிரதமர்

உலகச் செய்திகள்

பிஜி நாட்டின் முன்னாள் பிரதமர் லைசெனியா குவரேஸ், ஊழல் வழக்கில் குற்றவாளி என அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த வழக்கில் அவருக்கான தண்டனை விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஜி நாட்டில் 2000ஆம் ஆண்டு பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டவர், லைசெனியா குவரேஸ். ஆறு ஆண்டுகள் பிரதமராக இருந்த இவர், இராணுவ புரட்சியில் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

அரசு முதலீட்டு நிறுவனமான பிஜியன் ஹோல்டிங்ஸ் என்ற நிறுவனத்தின் இயக்குநராக கடந்த 1992 - 95ஆம் ஆண்டுகளில் இவர் பதவி வகித்த போது, அதிகார துஷ்பிரயோகம் செய்ததாக, இலஞ்ச ஒழிப்புத் துறையினர் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், அவரை குற்றவாளி என அறிவித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது. அவருக்கான தண்டனை விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு, நான்கு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கலாம், என எதிர்ப்பார்க்கப்படுகிறது. ஊழல் வழக்கில் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதால், அவர் இனி தேர்தல்களில் போட்டியிட முடியாது.


# சீன மொழியில் காந்தியின் புத்தகம்

காந்தியடிகளின் 'தன்னிகரற்ற தலைமை பண்பு' என்ற புத்தகம், சீன மொழியில் வெளியிடப்பட உள்ளது. முன்னாள் இந்திய தூதரான பாஸ்கல் ஆலன் நசரத், "மகாத்மா காந்தியின் தலைமைப் பண்புகள்" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

இந்த புத்தகம் கடந்த 2006 ஆம் ஆண்டில், ஸ்பெயின் மற்றும் போர்த்துகீசிய மொழிகளில் வெளியிடப்பட்டது. தற்போது இந்த புத்தகம், சீன மொழியிலும் வெளியிடப்பட உள்ளது. இந்த புத்தகத்தை, சீன பல்கலை கழக வரலாறு பேராசிரியர் ஷாங் குவான்யூ மொழி பெயர்த்து வருகிறார்.


அடுத்த ஆண்டு இந்த புத்தகம் சந்தைக்கு வரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. சீன வர்த்தக வெளியீட்டு நிறுவனத்துடன் இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கையெழுத்தானது. பீஜிங்கில் நடந்த இந்த நிகழ்ச்சியில், இந்திய தூதர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

'பயங்கரவாதம் வன்முறை தலைவிரித்தாடும் தற்போதைய காலகட்டத்தில் காந்தியின் இந்த புத்தகம் இளைஞர்களுக்கு நல்ல வழிகாட்டியாக அமையும்' என ஜெய்சங்கர் தெரிவித்தார்.



சிரியா வெளியுறவுத்துறை அமைச்சர் வாலித் அல் மௌலாம், டெக்ரானில் ஈரான் அதிபர் முகமது அகமத்ஜாத் அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

# ஜேர்மனும் அமெரிக்காவும் ஐரோப்பாவை காப்பாற்றுமா?



ஐரோப்பிய மத்திய வங்கியின் செயல்பாடுகள் குறித்து, ஜேர்மன் நிதியமைச்சரும், அமெரிக்க நிதியமைச்சரும் இணைந்து நேற்று முன்தினம் பேச்சு வார்த்தை நடத்தினர்.

ஐரோப்பிய நாடுகளில், கடும் பொருளாதார நெருக்கடி காணப்படுகிறது. குறிப்பாக கிரீஸ் மற்றும் ஸ்பெயின் நாடுகள் நிதி நெருக்கடியில் அதிகம் பாதிக்கப்பட்டு உள்ளன.

இந்த நாடுகளை பொருளாதார சிக்கலில் இருந்து மீட்க, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. இதில், ஐரோப்பிய மத்திய வங்கியின் செயல்பாடு முக்கியமாகக் கருதப்படுகிறது.

வங்கியின் தன்னிச்சையான செயல்பாட்டில், ஜேர்மனி அரசு நம்பிக்கை கொண்டுள்ளதாக, வங்கி நிர்வாகி தெரிவித்து உள்ளார். இந்நிலையில், ஐரோப்பிய வங்கி மீண்டும் கடன் பத்திரங்களை வாங்கத் திட்டமிட்டு உள்ளதாக வந்த செய்தி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்க நிதியமைச்சர் திமோதி கீத்னரும், ஜேர்மன் நிதியமைச்சர் உல்ப்கேங்க் ஸ்கபுலும், ஜேர்மனியின் ஹாலிடே தீவில் நேற்று முன்தினம் சந்தித்து பேசினர். ஐரோப்பிய மத்திய வங்கியின் புதிய திட்டம் குறித்தும் இவர்கள் விவாதித்தனர்.

பின்னர் கீத்னர், ஐரோப்பிய மத்திய வங்கியின் தலைவர் மரியோ டிராகியை சந்தித்து பேசினார். யூரோ கரன்சியை பாதுகாக்க, மத்திய வங்கி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அவர் கேட்டறிந்தார்.

# நவாஸ் ஷெரிப்பின் மருமகன் கட்சியிலிருந்து நீக்கம்



முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மருமகன், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதை அவரது மனைவியும் நவாஸ் ஷெரீப்பின் மகளும்மான மரியம் வரவேற்றுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப். இவர் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக உள்ளார். இவரது மருமகன் முகமது சப்தார், கட்சியின் இளைஞரணி தலைவராக உள்ளார். கட்சித் தலைவர்களை மதிக்காமல் செயற்படுவதாகவும், தனக்கென ஒரு கோஷ்டியை அமைத்து வருவதாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதையடுத்து, இவரை கட்சியிலிருந்து நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் சப்தார் நீக்கப்பட்டுள்ளார். முஸ்லிம் லீக் கட்சி, குடும்பம் சம்பந்தப்பட்டது கிடையாது. கட்சியில் அனைவரும் சமம் என்பதை என் தந்தை நவாஸ் நிரூபித்துள்ளார். என் கணவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதற்காக கவலைப்படவில்லை பெருமிதப்படுகிறேன் என நவாஸ் ஷெரீப்பின் மகள் மரியம் தெரிவித்துள்ளார்.

# ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைய தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்து

கிழக்கில் ஆயுதக் குழுக்கள் செயற்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், தேர்தல்கள் திணைக்களம் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுக்கு எழுதிய கடிதத்தில் சில அரசியல் கட்சிகளுக்கும் தனிநபர்களுக்கும் வழங்கப்பட்ட ஆயுதங்கள் பொலிஸாரிடம் திருப்பி ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணித்துள்ளதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் எனத் தெரிவிக்கப்படும் சில குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியிருந்தது.

இது தொடர்பில் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம். ஏ.எல்.ரத்நாயக்கவிடம் கேட்ட போது, ஆரம்பத்தில் இவ்வாறான நிலைமை காணப்பட்டதாகவும் இருப்பினும் தற்போது அது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் கூறினார். எவ்வாறாயினும் சில அரசியல் கட்சிகளுக்கோ அல்லது தனிநபர்களுக்கோ ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தால், அவற்றினை தேர்தல்களுக்கு முன்பாக அவர்கள் திருப்பி ஒப்படைக்க பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

# மன்னார் நீதிமன்றத் தாக்குதல் 13 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(மன்னார்)

மன்னார் நீதிமன்றம் மீது கடந்த 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட 13 பேரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஏ. யூட்சன் நேற்று உத்தரவிட்டார்.

குறித்த 13 பேரையும் இம்மாதம் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் முன்னர் உத்தரவிட்டிருந்தார். இந்த நிலையில் மீண்டும் நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போது, எதிர்வரும் ஓகஸ்ட் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். மன்னார் நீதிமன்றப் பகுதியில் நேற்றுப் பொலிஸாரும் அதிரடிப் படையினரும் விசேட பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மொழி பெயர்ப்பில் தாமதம் உயர்நீதிமன்றம் நீதி அமைச்சுக்கு கண்டனம்

சட்ட மா அதிபர் அலுவலகத்தில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாததைக் காரணம் காட்டி தமிழ் அரசியல் கைதிகள் விசாரணையின்றி தடுத்து வைக்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று பிரதம நீதியரசர் கூறியுள்ளார். போதிய அலுவலர்கள் இல்லாத காரணத்தால் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள் தாமதமாவதாக அரசு தரப்பினர் கூறுவதை அனுமதிக்க முடியாது என்று பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு முதல் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டபோதே பிரதம நீதியரசர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேவையான ஆவணங்களை, தமிழில் மொழிபெயர்ப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக, சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகைகளை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்கு முடியாமல் இருப்பதாக அரச தரப்பில் கூறப்பட்டது. ஆனால் அரச தரப்பின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிரதம நீதியரசர் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். தேவையான தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை உடனடியாகப் பெற்றுக்கொண்டு, பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு அரச தரப்புக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

# நீதிமன்றில் ஆஜராகுமாறு ரணிலுக்கு உத்தரவு

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரை எதிர்வரும் 21 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுளளது. அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேசபை உறுப்பினர்கள் ஆறு பேர் தாக்கல் செய்துள்ள மனுவொன்றை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிபதி தம்மிக்க கணேபொல இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

குறித்த பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவதை தடுக்கும் வகையிலான இடைக்கால உத்தரவை பிறப்பிக்காமல் இருப்பதற்கு ஏதேனும் காரணங்கள் இருந்தால் அவற்றை அன்றைய தினத்தில் நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகப் பாராட்டுக்களை தெரிவித்ததால் தம்மை கட்சியில் இருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் எனக் கருதுவதாக குறித்த பிரதேசசபை உறுப்பினரகள் தமது மனுவில் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக தாம் கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவதற்கான சாத்தியம் உள்ளதால் அந்த நடவடிக்கையை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவை பிறப்பிக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஏறாவூரில் குடும்பஸ்தர் தற்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஏறாவூர் மீராகேணிப்பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை கண்டு பிடிக்கப்பட்டு, ஏறாவூர் மாவட்ட வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சடலம் மீராகேணி சந்தை வீதியைச் சேர்ந்த 45 வயதான அஹமது முஸ்தபா முஹம்மது ஹனீபா என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## கலைஞர்...

உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் வன்னியில் பெரும் எண்ணிக்கையான எமது மக்களின் உயிர்கள் ஊசலாடிக் கொண்டிருந்த நேரத்தில் கலைஞர் கருணாநிதி முதலமைச்சராகப் பதவியிலிருந்தார். எமது மக்களுக்கு ஆதரவாக தமிழ்நாடு முழுவதிலும் உணர்ச்சிப் பேரலைகள் மேலோங்கி இருந்தன.

முத்துக்குமார் தீக்குளித்த தைத் தொடர்ந்து மேலும் பலர் ஒருவர்பின் ஒருவராக வெந்து மடிந்து கொண்டிருந்த போது, எமது மக்களின் துன்ப துயரங்களைச் சொல்வதற்காக நானும், சக நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கமும் தமிழ்நாட்டில் முகாமிட்டிருந்தோம். ஆனாலும், கலைஞர் கருணாநிதி அசைந்து கொடுக்கவில்லை. விரக்தியடைந்த நிலையில், எமக்கு உண்மையில் விசுவாசமாகவிருந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பாண்டியன் தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன், பா.ம.க. தலைவர் ராமதாஸ், ம.தி.மு.க. தலைவர் வை.கோ, விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் ஆகியோரிடம் எனது விரக்தியை வெளிப்படுத்திவிட்டு 2009 பங்குனி மாதம் நான் நாடு திரும்பினேன்.

அப்பொழுது இந்தியப் பொதுத் தேர்தல் நெருங்கி வந்து கொண்டிருந்தது. முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி மனம் வைத்திருந்தால் இந்திய மத்திய அரசுக்கு போதுமான அழுத்தத்தைக் கொடுத்து யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வந்திருந்திருக்க முடியும். முள்ளிவாய்க்கால் அவலம் தடுக்கப்பட்டிருக்கும். ஆனால், அவர் அப்போது எதுவுமே செய்யவில்லை.

இப்பொழுது தமிழ்நாட்டில் சர்ச்சைக்குரியதாக மாறியிருக்கும் ரெசோ மாநாட்டில் இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்பதில் கலைஞர் கருணாநிதி அக்கறை காட்டுகின்றார். ஈழத்தமிழர் பிரச்சினையில் எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதில் இரண்டாவது கேள்விக்கு இடமில்லை. ஆனால் கலைஞர் கருணாநிதி கூட்டுவித்த இம்மாநாட்டில் கலந்து கொள்வதன் ஊடாக தவறான அரசியல் சமிக்ஞைகளையும், போலி நம்பிக்கைகளையும் இலங்கை தமிழ் மக்களுக்கு எங்களில் எவரும் கொடுக்கக்கூடாது.

அத்துடன், இலங்கைத் தமிழர் பிரச்சினையை தமிழ்நாட்டில் ஓர் குறுகிய அரசியல் பிரச்சினையாக்க எவருக்கும் நாங்கள் இடமளிக்கக்கூடாது. கடந்த காலத்திலிருந்து நாங்கள் பாடம் கற்றாக வேண்டும். எமது வீடு எரிந்து கொண்டிருந்த போது வீணை வாசித்துவிட்டு எல்லாமே எரிந்து நாசமாகிப் போய்விட்ட பின்னர் துக்கம் விசாரிக்க வருபவர்களிடத்தில் ஏமாறுவதற்கு எமது மக்கள் தயாரில்லை.

இதனை மதிப்புக்குரிய கலைஞர் கருணாநிதி மாத்திர மல்லாமல் ரெசோ மாநாட்டில் கலந்துகொள்ளக் காத்துக் கொண்டிருக்கும் எம்மவர்களும் தயவு செய்து மனதில் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (137)

## யாழ்.சட்டத்தரணிகள்...

இரண்டொரு தினங்களுள் இவர்கள் தங்களுடைய புதிய சட்டத்தரணிகள் சங்கத்தின் பெயர் மற்றும் உத்தியோகத்தர்களின் விபரங்களைத் தெரிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் யாழ் நீதித்துறை அரசியல் வாதிகளா லும் அவர்களது ஆதரவுப் பத்திரிகைகளாலும் மதிப் பிறக்கம் செய்யப்பட்ட போது, ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நியதிகளுக்கு அமைய யாழ். சட்டத்தரணிகள் சங்கம் நீதித்துறையின் பக்கம் சார்ந்து நிற்கத் தவறியிருந்தது என பலரால் ஏற்கனவே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அத்துடன் நீதித்துறையை அவமதிப்பிற்கு உள்ளாக்கியவர்களுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்ததன் மூலம் தனது பதவியைத் துஷ்பிரயோகம் செய்தார்கள் என தற்போதைய யாழ். சட்டத்தரணிகள் சங்கத்தினரிற்கு எதிராக ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது எந்தவித ஆரோக்கியமான விளைவுகளையும் தராத பட்சத்திலேயே யாழ்ப்பாண சட்டத்தரணிகளின் கௌரவத்தைக் காப்பாற்றும் வகையில் முன்னணி சட்டத்தரணிகள் பலர் பிரிந்துசென்று இயங்கும் அதிரடி முடிவை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

முன்னணி சட்டத்தரணிகள் பிரிந்துசென்று தனியாக இயங்க முடிவெடுத்துள்ள இந் நிலையில், பழைய சட்டத்தரணிகள் சங்கமும் தொடர்ந்து இயங்குமா என்பது தெளிவாகத் தெரியவில்லை என பிரபல சட்டத்தரணியொருவர் எமக்குத் தெரிவித்தார். இதுபற்றி தற்போதைய சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்ன சிங்கத்திடம் தொடர்புகொண்டு உறுதிப்படுத்த முயன்றபோதும் முடியவில்லை.

## கைதிகளை...

அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

அரசியல் கைதிகளைச் சந்தி க்க மன்னார் ஆயரை அனுமதிக்க வேண்டாம் என்று உயர் அதிகார மட்டத்தில் இருந்து தமக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டதாகச் சிறைச்சாலை அதி காரிகள் தெரிவித்தனர். மன்னார் ஆயரை அரசாங்கம் துன்புறுத் துவதன் மூலம் போருக்குப் பிந்திய தேசிய நல்லிணக்கம் பற்றிப் பேசப்படுவது வெறும் நகைச்சுவையாகவே உள்ளது. என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## மீனவர்...

கடற்றொழிலுக்குச் சென்றிருந்த இவர் கடலில் இறந்து கிடப்பதனை அருகே தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படகில் இருந்தவர்கள் அவதானித்து சடலத்தை மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்ததாகவும் உடனடியாக யாழ். பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு பொலிஸாரினால் சடலம். யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் இறந்தவர் தற்சமயம் வவுனியாவில் வசித்து வந்தாகவும், அண்மையிலேயே பாஷையூருக்கு வந்திருந்த்தாகவும் தெரிய வருகின்றது. (பா)

## 15 பவுண் நகை...

இந்தநிலையில், அதிகாலை 2 மணியளவில் தகப்பனார் வெளியில் சென்றசமயம் வீட்டு வாழைத் தோட்டத்துக்குள் மறைந்து நின்ற இருவர் திடீரென வந்து அவரின் கைகளைப் பின்னால் இறுக்கிப் பிடித்தவாறு கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்றுள்ளனர்.

பின்னர் அவரதுமகனின் கடவுச்சீட்டை அச்சுறுத்தி வாங்கியதுடன், சத்தமிட்டால் கடவுச் சீட்டைக் கிழித்து எறிந்து விடுவோம் என மிரட்டி 15 பவுண் நகை மற்றும் 150,000 ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கொள்ளையிட்டுச் சென்ற இருவரும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் உரையாடியதாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையில்...

மேலும் தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க தமது அமைச்சு தீர்மானங்கள் எதுவும் எடுக்கவில்லை என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீதிமன்ற...

கணேசராஜா சட்ட அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையைக் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மகிந்த...

குறிப்பிடத்தக்கது.

இதனை பெரிதுபடுத்தி கொள்ளாத ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதினியனியின் (முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க) காலம் நிறைவடைந்து விட்டது எனக் கூற, தவறையுணர்ந்த அமைச்சர் சிரித்து சமாளித்தார் எனத் தெரிய வருகின்றது.

# யாழ்ப்பாணத்தில் காசநோய்

# 180 பேர் பாதிப்பு 6 பேர் பலி

## கட்டுப்படுத்த நடவடிக்கை இல்லை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 180 பேர் காசநோய் தொற்றுக்குள்ளாக் கப்பட்ட நிலையில் 6 பேர் உயி ரிழந்துள்ளதாக காசநோய் வைத திய நிபுணர் எஸ்.யமுனானந்தா தெரிவித்துள்ளார். 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் யூலை மாதம் வரையான காலப் பகுதியில் 180 பேர் காசநோய் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள னர் என்று பரிசோதனை மூலம் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

காசநோய்க்கான சளிப் பரி சோதனை மேற்கொள்ளாது கவ னயீனமான முறையில் இருந்த 6 பேர் கடந்த காலாண்டுப் பகுதி யில் உயிரிழந்துள்ளனர். காச நோய் தொடர்பான விழிப்புணர்வு இன்மையினால் இந்நோய் அதி கரித்துள்ளது. காசநோய் தொற் றைக் கட்டுப்படுத்துவதற் கான நடவடிக்கைகளை சுகாதார அமை ச்சு முன்னெடுக்க வேண்டும். இந் நோய்த்தொற்று கிராம மட்டத் தில் அதிகரித்துக் காணப்படுகின் றது. மீள்குடியேறிய பிரதேசங் களில் மற்றும் சமூகவடு காரண மாக தமது நலன் தொடர்பாக மக்கள் கவனம் செலுத்தத் தவறுகின்றார்கள்.

டெங்கு நோய் உயர்ந்த மட் டத்தில் அதிகளவு பரம்பலடை வதனால் டெங்கு நோயைக் கட் டுப்படுத்துவதற்கு எடுக்கும் முயற சிகள் காசநோயைக் கட்டுப்படு த்த எடுப்பதில்லை. காசநோ யைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டால் இந் நோயில் இருந்து மக்களைக் காப பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் அதிகரித்துவரும் காசநோய் தொற்றை கட்டுப்படுத்தவும் முடி யும் எனவும் காசநோய் வைத் திய நிபுணர் மேலும் தெரிவித் துள்ளார்.

## துப்பரவாக்கும் போது கண்ணி வெடித்தது



மீள் குடியமர்ந்த வலி. வடக்குப் பகுதியில் பற்றைகள் வெட்டித் துப்பரவாக்கும் போது கண்ணிவெடி ஒன்று வெடித்தது. நேற்றுக் காலை பாரிய இயந்திரங்களைக் கொண்டு துப்பரவாக்கும் பணி இடம்பெற்ற வேளையே திடீரென ஒரு நிலக்கண்ணி வெடி த்தது. உடனடியாக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு குறித்த பகுதியில் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது மேலும் ஒரு கண்ணிவெடி கண்டுபிடிக்கப்பட்டது. இது மாலை 3.00 மணியளவில் செயலிழ க்கச் செய்யப்பட்டது. குறித்த ஜே/236 கிராம அலுவலர் பகுதி கண்ணிவெடி அகற்றப்பட்டது என கண்ணிவெடி அகற்றும் பிரி வினால் சான்றிதழ் வழங்கப்பட்ட பகுதி என்பது குறிப்பிடத்தக் கது. (22)

## அவுஸ்ரேலியர்களுக்கான பயணத் தவிர்ப்பு ஆலோசனை நீக்கம்

(கொழும்பு)

வடபகுதிக்கு சுற்றுலா மேற் கொள்ள அவுஸ்ரேலியப் பிர ஜைகளுக்கு வழங்கப்பட்டிருந்த பயணத் தவிர்ப்பு ஆலோசனை யை அந்த நாட்டின் வெளிவிவ காரத் திணைக்களம் நீக்கியுள் ளது. இலங்கையின் வட மாகா ணத்திற்குச் சுற்றுலா மேற்கொள் வது தொடர்பில் தொடர்ந்தும் பயணத் தவிர்ப்பு ஆலோசனை யை நடைமுறைப்படுத்த போவ தில்லை என அவுஸ்ரேலிய வெளிவிவகார திணைக்களம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப் பாணம் ஆகிய மாவட்டங்களு க்கு சுற்றுலா மேற்கொள்வதைத தவிர்த்துக் கொள்ளுமாறு அவுஸ் ரேலியா ஏற்கனவே தமது பிர ஜைகளுக்கு அறிவு றுத்தல் விடு த்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டப் போட்டி

தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம் நடாத்தும் ஏழுபேர் கொண்ட உதைபந்தா ட்ட சுற்றுப்போட்டி இன்று முதல் ஆரம்பம். இப்போட்டியானது நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இன்று மாலை 3.45 மணிக்கு ஆரம்பமாகும். இத் தொடர் போட்டியானது இன்று முதல் எதிர்வரும் 08 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெற வுள்ளது. (22)

## சங்கிலி அபகரிப்பு

யாழ். ஈச்சமோட்டை வீதியில் நேற்றைய தினம் 12.15 மணியள வில் தனியே சென்றுகொண்டிரு ந்த பெண்மணியின் 2 பவுண் தங்கச்சங்கிலி வீதியால் சென்ற நபர்களால் அபகரிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இரு வரே குறித்த பெண்ணின் தாலிக் கொடியை அறுக்கமுற்பட்டனர். அது சாத்தியமற்றுப் போகவே சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடினர். (42)

## ஆடிவேல் தீர்த்தம்

வேலணை தெற்கு தாளை யம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த ஆடிவேல் தீர்த்தத்திருவிழா இன்று காலை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நாளை அதிகாலை 3.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை ஆரம்ப மாகி சுவாமி உள்வீதி வலம் வந்து தீ மிதிப்பு இடம்பெற்று, காலை 7.00 மணிக்கு வேலணை தெற்கு துறையூர் துறைமுகத் தில் சமுத்திரத் தீர்த்தம் இடம்பெற வுள்ளது. (85)

## பணவீக்கம் அதிகரிப்பு

நாட்டின் பணவீக்கம் கடந்த 42 மாதங்களில் இல்லாதளவு க்கு உயர்ந்து. இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரவியல் திணைக்களம் நேற்று வெளியிட் டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் பணவீக்கம் 9.3 வீத மாக இருந்தது கடந்த மாதம் பண வீக்கம் மேலும் அதிகரித்து 9.8 வீதமாக உயர்ந்துள்ளது.

## தனங்கிளப்பு இளம்பெண் கொலை பிணைமனு தீர்ப்பு 10 ஆம் திகதி

(திருநெல்வேலி)

தனங்கிளப்பு இளம்பெண் கொலை வழக்கில் இரண்டாவது சந்தேக நபரின் பிணை விண்ண பம் தொடர்பான தீர்ப்பு எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி தனங்கிளப்பில் கடந்த வருடம் கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி யளவில் சுப்பிரமணியம் புஷ்பம லர் (வயது24) என்பவர் கடத்தப் பட்டுக் கொலை செய்யப்பட்ட தாகச் சந்தேகத்தின் பேரில் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விள க்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்களில் 2 ஆம் சந்தேக பரான கதிரவேலு நவரத்தினம் சார்பில் அவரது மகளான நவர த்தினம் பாமினி தாக்கல் செய்த பிணை மனுவை ஆதரித்து சட் டத்தரணி ஷர்மினி விக்கினேஸ் வரனின் அனுசரணையுடன் ஆஜ ரான சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா தனது வாதங்களை நேற்று சமர் ப்பித்தார்.

2 ஆம் சந்தேக நபர் 54 வயது டைய ஒரு மரக்கறி வியாபாரி எனவும், தாயை இழந்த அவரது 3 பிள்ளைகளையும் தனியே பரா மரித்து வந்தவர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த யுவதியுடன், 1 ஆவது சந்தேகநபர் சண்முகம் ஜெகன் மோகன் கொண்டிருந்த நெருக்க மான தொடர்பினால் கர்ப்பமுற் றிருந்த நிலையில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும், 1 ஆம் சந்தேகநபருக்கும் மன்னா ரில் ஏற்கனவே ஒரு காதலி இருப பதாகவும் இந்த முக்கோணக் காதல் விவகாரமே கொலையில் முடிவடைந்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். 2 ஆம் சந்தேகநபரான கதிரவேலு நவரத்தினத்திற்கு இடது கண் பார்வை முற்றாக இழந்துவிட்டதாகவும், இதற்கு ஆதாரமாகக் கண் வைத்திய நிபுணர் ஒருவரின் மருத்துவச் சான்றிதழையும் சமர்ப்பித்தார்.

பிணை மனுவில் எதிர் மனுதாரர்களாக எயர் குறிப்பிடப்பட்ட சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் சார்பில் ஆஜரான அரச சட்டவாதி வி.திருக் குமரன் பிணை மனுவைக் கடுமையாக ஆட்சேபித்தார். இருதரப்பு வாதங்களின் முடிவில் பிணை மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (137)

## மரண அறிவித்தல்



**ஸ்ரீமதி. வேதநாயகி அம்மா நகுலேஸ்வரக் குருக்கள்**

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி. வேத நாயகி அம்மா நகுலேஸ்வரக் குருக்கள் நேற்று (31.07.2012) செவ்வாய்க் கிழமை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஸ்வாமி பாதந்தாள் சேர்ந்தார்.

அன்னார் ராஜாராஜஸ்ரீ - நகுலேஸ்வரக் குருக்கள் (கீரி மலை ஆதீனம்) அவர்களின் பாசமிகு பாரியாரும், காலஞ்சென்ற கீரிமலை ஆதீன குரு குமாரசாமிக் குருக்கள் அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மாவை ஆதீன குரு துரைச்சாமிக் குருக்கள் நாராயணியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாவை சு.து.ஷன் முகநாதக் குருக்கள், விசாலாட்சி, சுந்தரமூர்த்திக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கெங்காதேவி, கலாவதி, குமாரசாமிக் குருக்கள், ரங்கநாதக் குருக்கள், கெங்காதரக் குருக்கள், நாராயணி, ரமணி, காலஞ்சென்ற சிவகாமசுந்தரி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2012) புதன் கிழமை இளவாலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடை பெற்று மாலை 4.00 மணியளவில் கீரிமலை செம்மன் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை வடக்கு, இளவாலை.
தொலைபேசி :- 0217900470, 0779790875

**தகவல்:**
ராஜாராஜஸ்ரீ,
கு.நகுலேஸ்வரக்குருக்கள்
(ஆதீனகர்த்தா - கீரிமலை) பிள்ளைகள்.

(C-1631)

# இலங்கையில் மத சுதந்திர மீறல் அமெரிக்கா கவலை

(வாஷிங்டன்)

2011 ஆம் ஆண்டு இலங்கை யில் கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது பௌத்தர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் இவ்வாறான சில சமூக மீறல் செயற்பாடுக ளால் இலங்கையில் ஆங்கா ங்கே பரபரப்பு ஏற்பட்டதாக ஐக் கிய அமெரிக்கா வெளியிட்டு ள்ள 2011 வருடாந்த சர்வதேச மத சுதந்திர அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. ஆனாலும் சமீபத்திய ஆண்டில் நடைபெற்ற தாக்குதல்கள் கடந்த வருடம் குறைவான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக அவ்வறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசியல் யாப்பு, சட்டம், மத சுதந்திரத்தை பாதுகாக்க ஏற்பாடுகள் உள் ளன. அரசாங்கம் பொதுவாக மத சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கிறது. ஆனால் அதற்கு எடுத்துக் காட் டான செயற்பாடுகளில் ஈடுபடுவ தில்லை. மத சுதந்திரத்தைப் பாது காக்கும் அரசின் செயற்பாடுக ளில் முன்னேற்றம் அல்லது சரிவு காணப்படவில்லை என அமெ ரிக்காவின் அறிக்கையில் குறிப்பி டப்பட்டுள்ளது.

மத சுதந்திரம் பிரச்சினைகள், தேவாலயங்கள் மீதான தாக்கு தல்கள் பற்றி ஐக்கிய அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அரசாங்கத் திடம் கவலை தெரிவித்ததோடு தேவாலயங்கள் மற்றும் மத நிலையங்கள் மீது தாக்குதல் நடத் தியவர்களைக் கைது செய்து சட்டத்திற்கு முன் நிறுத்துமாறு அர சாங்கத் தலைவர்களிடம் வலி யுறுத்தியுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஒகஸ்ட் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.